# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 09
குவிப்பு - 05
பக்கங்கள் - 20
விலை ரூபா 20.00
மே 2006

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377


## நல் மனம் படைத்த அனைத்து மக்களோடும் இணைந்து

# நாம் குரலெழுப்பிக் கூறுகின்றோம்

# வன்செயல்களையும், கொலைகளையும் நிறுத்துங்கள்!

## இலங்கை ஆயர்கள் உருக்கமான வேண்டுகோள்

தமது சொந்த மனுக்குலத்திற்கெதிரான குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை நோக்கி, இந்நாட்டின் நல்மனம் கொண்ட அனைத்து மக்களுடன் இணைந்து நாம் குரலெழுப்பிக் கூறுவது யாதெனில், வன்செயல்களையும், கொலைகளையும் உடனடியாக நிறுத்துங்கள் என்பதே.

இந்தக் குற்றச்செயல்கள் யாரால் ஏற்பட்டாலும் அதனை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளில் இறங்கும்படி நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம். என இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றம் நாட்டின் அண்மைக்கால வன்செயல்கள் மற்றும் கொலைகள் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

அதிகளவான மனித உயிர்களைக் காவுகொண்டுள்ள தற்போதைய வன்செயல்களையிட்டு, இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் ஆழ்ந்த கவலைகொண்டுள்ளது.

நிவாரணப் பணிகள், மீள்கட்டுமானப்பணிகள், புனருத்தாரண வேலைகள் போன்றவற்றில் ஈடுபடும் குற்றமற்ற பொதுமக்கள் கூட இத்தகைய மிருகத்தனமான கொலைகளுக்கு ஆளாவது துரதிஷ்டமானதே.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## உலகிலேயே மிகப்பெரிய நற்கருணைக் கோபுரம்



உலகிலேயே முதன் முறையாக, மிகப்பெரிய 100 அடி நற்கருணைக் கோபுரம் தமிழ்நாட்டில், சென்னை பாலவாக்கம், புனித அந்தோனியார் திருத்தலத்தில் அண்மையில் அர்ச்சிப்புப் பெருவிழாவுடன் நிலைநிறுத்தப்பட்டது.

நற்கருணையின் வாழ்வை நமக்கும், உலகிற்கும் எடுத்துக்காட்ட இந்நினைவுக் கோபுரம் உயர்ந்து நிற்கிறது.

## மன்னார் மறைமாவட்டத்தில்

## சமாதானத்திற்காக மாபெரும் தவக்கால பாதயாத்திரை

### 1200 பேர் 120 கி.மீ. நீண்ட நெடும் பயணம்!



மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் கடந்த மார்ச் 22ந் திகதி மன்னாரில் இருந்து வவுனியா கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்திற்கு தவக்கால பாதயாத்திரையை மேற்கொண்டனர். இதில் 1200 பேர் பங்கெடுத்தனர். இவர்கள் 120 கிலோமீற்றர் தூரம் கால்நடையாகப் பயணம் செய்து சமாதானத்திற்கான தமது தாகத்தை வெளிப்படுத்தினர்.

22ம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு ஆன்மீக ரீதியான ஆயத்தங்களுடன் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலிருந்து இவர்கள் தமது யாத்திரையை ஆரம்பித்தனர்.

இப்புனித யாத்திரை மன்னார் - வவுனியா பிரதான வீதி வழியாக செபங்களோடும், மன்றாட்டுக்களோடும், பக்தி ததும்பும் தவக்காலப் பாடல்களோடும், பக்தி சிரத்தையுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதனை கண்ணுற்ற ஏனைய மக்கள் மனம் நெகிழ்ந்து போனரர்கள் என்பது அவர்களது அனுபவமாகும்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## வாகன விபத்தில் கத்தோலிக்க குரு பலி!

### கொழும்பில் சம்பவம்

கொழும்பு கட்டுநாயக்க கந்த என்ற இடத்தில், கடந்த 10.04.2006 அன்று, நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றில் கத்தோலிக்க குரு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வத்தளை, உணுப்பிட்டிய ஆலயத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் ஜோசப் என்பவரே இந்த விபத்தில் பலியாகியவர் ஆவார்.

இவர் பயணம் செய்த வேனுடன் தண்ணீர் பவுசர் ஒன்று மோதியபோதே, இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தையடுத்து, வேன் சாரதி கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். தண்ணீர் பவுசர் சாரதியின் கவனக்குறைவு காரணமாகவே இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அமலமரித் தியாகிகள் சபையின் கொழும்பு மாகாணத்தைச் சேர்ந்த ஜோசப் அடிகளார், வலிகம்பிட்டிய பங்குத்தந்தையாக பணியாற்றிக்கொண்டிருந்தார்.

கடந்த ஏப்ரல் 12ந் திகதி, வலிகம்பிட்டிய ஆலயத்தில் நல்லடக்கத் திருப்பலி நடைபெற்றது. இதில் பல ஆயர்கள், குருக்கள், துறவிகள், இறைமக்கள் கலந்துகொண்டனர்.

## அருட்சகோதரி

### சென்போல் இறைவனடி

யாழ். திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி சென்போல் தனது 84வது வயதில் 05.03.2006ல் இறைவனடி சேர்ந்தார்.

மிருசுவில்லை பிறப்பிடமாகக்கொண்ட இவரது நல்லடக்கச் சடங்குகள் 08.03.2006ல், இளவாலையில் நடைபெற்றது.

அன்னாருக்கு மன்னா, தனது செபத்தினையும், அஞ்சலியையும் தெரிவிக்கின்றது.

## 'அன்பே கடவுள்' என்பதை

# எல்லோருக்கும் பறைசாற்றுங்கள்!

## புதிய கருதினால்களிடம் திருத்தந்தை வேண்டுகோள்

கருதினால்கள், தங்கள் சொந்த வாழ்க்கையிலும் - அவர்களது திருச்சபைப் பணிகளிலும் செய்யும் ஒவ்வொன்றும் பிறரன்பால் தூண்டப்பட்டதாயும், பிறரன்புக்கு இட்டுச்செல்வதாயும் அமைய வேண்டும் என்று திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் கேட்டுக்கொண்டார்.


கருதினால் நிலைக்கு உயர்த்தப்பட்ட 15 புதிய கருதினால்களுக்கு மோதிரம் வழங்கும் திருப்பலியை 25.03.2006 சனி, காலை, தூய பேதுரு பசிலிக்கா சதுக்கத்தில் நிகழ்த்திய திருத்தந்தை, இவ்வுலகில் எல்லாம் கடந்து போகும். ஆனால் நித்தியத்தில், இறையன்பு மட்டுமே நிலைத்திருக்கும் என்று சொல்லி புதிய கருதினால்களின் அனைத்துச் செயல்களிலும் அன்பே மேலோங்கி இருக்க வேண்டும் என்றார்.

"இன்றைய மங்கள வார்த்தைத் திருவிழாவும் - இதனையே சுட்டிக்காட்டுகிறது என்றுரைத்த அவர், அன்பு செய்பவர்கள் தங்களையே மறந்து அயலாருக்கான பணியில், தங்களை உட்படுத்துவார்கள். இதில் திருச்சபை எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது என்றார்.

மோதிரமானது, எப்பொழுதும் திருமண பந்தத்தின் அடையாளமாக இருக்கின்றது. ஏறத்தாழ அனைத்துப் புதிய கருதினால்களும் ஏற்கனவே மோதிரத்தைப் பெற்றிருந்தாலும், இன்று அவர்கள் பெறும் மோதிரமானது, அவர்கள் கிறிஸ்துவோடு ஆழமான உறவைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகிறது. திருச்சபையின் மணவாளர்கள் என்ற முறையில் அவர்கள் அதன் மூலம், தங்களது பணியைச் செய்ய இயலும்" என்றார் திருத்தந்தை.

## செட்டிகுளத்தில் தொழில் நுட்பக் கல்லூரி

# அடிக்கல் நாட்டு விழா



மன்னார் மறைமாவட்டத்தின் செட்டிகுளப் பங்கில் கடந்த 19.03.2006 அன்று பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களினால் *ரெக் சென் பிரான்சிஸ* (TECH. ST FRANCIS) என்ற தொழில் நுட்பக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இதில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்களின் மாகாணத் தலைவர் அருட்சகோதரர் ஜெரோமி கிறிஸ்ரி, பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்கள், பங்குத்தந்தை ஸ்ரீபன் அடிகளார், அருட்சகோதரிகள், பங்கு மக்கள் மற்றும் மதத் தலைவர்கள் ஆகியோர் பங்கெடுத்தனர். தகவல்: அருட்சகோதரர் மில்றோய்

# மன்னா

## மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

### ஊசலாடும் உடன்படிக்கை

இலங்கை நாடு மீண்டும் ஒரு கொடிய யுத்த களமாக மாறிக்கொண்டிருக்கின்றது. சர்வதேச ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக இலங்கையின் அண்மைக்கால வன்முறைகள் மாறியுள்ளன. உயிர்க்கொலைகள் நாளாந்த செய்தியாகி விட்டன. மனிதர்களின் பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படாத நிலை தொடர்கின்றது. கடந்த நான்கு வருட காலமாக ஒருவாறு தப்பிப்பிழைத்த யுத்தநிறுத்த உடன்படிக்கை படிப்படியாக நோயுற்று இன்று குற்றுயிராகி – உயிருக்காக ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

### யுத்த கால அனுபவங்கள்

மீண்டும் இடம்பெயர வேண்டிவருமா? நமது எதிர்காலம் என்ன? என்ற ஆதங்கங்கள் மக்கள் மத்தியில் நிலைகொண்டுள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் – அதாவது நான்கு வருடங்களுக்கு முன்னர் யுத்தம் நடைபெற்றபோது மக்கள் அனுபவித்த சொல்லொண்ணாத் துன்பங்கள் மீண்டும் மனக்கண்முன் வந்து அச்சுறுத்துகின்றன.

உயிராபத்துக்கள், உடமை இழப்புக்கள், இடப்பெயர்வுகள், அகதி வாழ்க்கை, போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்டமை, கடல்வழிப் பயணம், பொருளாதாரத் தடை, விலைவாசிகளின் அபரீத உயர்வு, பிரயாணத்தின்போது சோதனைச் சாவடிகளில் இறங்கி ஏறும் நிலைப்பாடுகள், கொழும்பு செல்வதற்கான பாஸ் நடைமுறைகள், கொழும்பில் தங்குவதற்கான பொலிஸ் அனுமதி, சுற்றி வளைப்புக்கள் ..... என துன்பங்கள் தொடர்கதையாக மாறிவிடக்கூடிய சூழ்நிலையை எண்ணி எண்ணி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

### கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்

இவ்வேளையில் தமிழர்களின் உரிமைகளுக்காக அயராது குரல்கொடுத்த மறைந்த தந்தை செல்வநாயகம் அவர்களின் கூற்றை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

பல்வேறு விதமான பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்களை மேற்கொண்டு அவை எவையுமே நடைமுறைப்படுத்தப்படாத சூழ்நிலையில் மிகுந்த வருத்தத்தோடு தந்தை செல்வநாயகம் அவர்கள் கூறினார், **“தமிழர்களை இனி கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்”** என்று. அவருடைய தீர்க்கதரிசனம் இன்றும் யதார்த்தமாகவே உள்ளது. இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் எந்த ஒரு முடிவும் எட்டப்படாத சூழ்நிலையில் அவருடைய கூற்றுத்தான் நமது நினைவுகளில் நிழலாடுகின்றது. எனவே கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும். நாம் சரணடைய வேண்டியது கடவுளிடம் மட்டுமே.

### செபமே நமது ஆயுதம்

இன்றைய போராபத்தை நாம் தடுக்கவேண்டுமாயின் ஆழ்ந்த விசுவாசத்தோடு செபிக்க அழைக்கப்படுகின்றோம். நம்முடைய பலத்தினாலோ, மனித முயற்சியினாலோ நமக்குச் சமாதானம் கிடைக்கப்போவதில்லை. ஆண்டவராலேயே இது சாத்தியமாகும். இதையே திருவிவிலியமும் அழகாகச் சொல்கிறது, “ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகை என்னும் சுவரை தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார்.” (எபே. 2:14)

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தமது தவக்காலத் திருமடலிலே சமாதானத்திற்காக உபவாசத்தோடுகூடிய செபத்தை மேற்கொள்ளும்படி வலியுறுத்தியதை இவ்வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அமைதி – சமாதானம் என்பது இறைவன் மட்டுமே அருளுகின்ற ஓர் அற்புதமான கொடை. அதை அடைய நாம் ஆசிப்போம், செபத்தில் யாசிப்போம்

“அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தருகின்ற அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல” (யோவான் 14:27)

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அன்புடன், அருட்பணியாளர் நேசன்
மன்னா பதிப்பாசிரியர்



# வாசகர் எண்ணங்கள்

### வளர்ச்சிப் படியில் மன்னா!

1981 ஆம் ஆண்டு, மன்னார் தனி ஒரு மறைமாவட்டமாகப் பிரகடனம் செய்யப்பட்ட வேளையிலிருந்து, “மன்னா” என்னும் சஞ்சிகை 3 மாதத்திற்கு ஒரு தடவையாக வெளியிடப்பட்டு வந்தது. இதன் ஆரம்ப கர்த்தாவாக, அருட்பணி ஏ. பிலிப் அடிகளார் இயக்குனராக இருந்து செயலாற்றினார். அவரைத் தொடர்ந்து, அருட்பணி. நவரெட்ணம் அடிகளார் இப்பணியை முன்னெடுத்துச் சென்றார்.

ஆனால் சிறு சஞ்சிகையாக இருந்த மன்னா, திடீரென பத்திரிகையாக கால் பதித்தது. அதனை வளர்த்துச் சென்ற பெருமை அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா அவர்களையே சாரும். அவர்களுக்குப்பின், இன்றுவரை மன்னா பலுகிப் பெருகி மக்களின் ஆன்ம பசியைப் போக்கும் உணவாக மாற்றி வருகின்ற பெருமையும், அனைத்துப் புகழும் அருட்பணி நேசன் அடிகளாரையே சாரும். “இதனை இதனான் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்” என்ற தெய்வப் புலவனின் குறள் அடிகள் நேசன் அடிகளாருக்குப் பொருத்தமாய் அமைந்துள்ளது. 1993 மாசி – சித்திரையில் வெளியிட்ட மன்னா சஞ்சிகை ஒன்று என் கைக்கு எட்டியது. அதனையும் - தற்போதைய மன்னாப் பத்திரிகையின் வளர்ச்சிப்படியுடன் ஒப்பீடு செய்து, மனமகிழ்வடைந்தேன். அழகான முகப்பு அட்டைப் படங்களுடன், இருபது பக்கங்களைத் தாங்கி, மாதமொரு தடவையாக வெளியிடப்படும் அடிகளாரின் அயராத முயற்சிகள் பாராட்டுதற்குரியன.

பத்திரிகையில் பதிப்பாசிரியர் பகர்வது, வாசகர் எண்ணங்கள், மறைவட்ட பங்குத்தளச் செய்திகள், கருத்துக்களம், சிறுவர் பொழிவு, கவிதைப் பூக்கள், சிறுகதைகள், இளைஞர் பொழிவு, மாணவர் பக்கம், மருத்துவப் பொழிவு, குறுக்கெழுத்துப் போட்டி, பெரியப்பா பதில்கள், சமைப்போம் - சுவைப்போம், நீங்காத நினைவுகள் இன்னும் எத்தனையோ எத்தனையோ பல சுவையான கதம்ப நிகழ்ச்சிகளை சுவைபடக் கூறி நிற்கும் மன்னாவே!

உன் ஏணிப்படி வளர்ச்சி கண்டு பாராட்டுகின்றேன். சர்வதேசப் புகழ் பரப்பும் பத்திரிகையாகிவிட்டாயே! உன்னை வாழ்த்தி ஒருமுறை உன் புகழைப் பறைசாற்றாவிட்டால் நான் நன்றி உணர்வற்றவளாவேன். எனவே எட்டுத் திக்கும் புகழ் பரப்பி, நறுமணம் தொடர்ந்து கமழ, வாயார வாழ்த்தி, நெஞ்சாரப் புகழ்ந்து, மனமார மகிழ்வடைகின்றேன்.

*திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட், ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) வலயக் கல்விப் பணிமனை, மன்னார்.*

### செய்திகளோ பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்!

மன்னார் என்னும் மாநகரில் மாதமொரு தடவை மலரும் மன்னாவே மன்னாரின் மங்கள ஒளிச் சுடரான மன்னாப் பத்திரிகையே!

மாதாந்தம் மக்களை மகிழ்விக்க நீ தந்திடும் செய்திகளோ பலவிதம்! அவை ஒவ்வொன்றும் ஒருவிதம்! பக்கங்கள் யாவும் பற்பல சுவையே!

பசித்திட்ட எனக்கு அப்பமும் நீயே! சிறியோர் முதல் பெரியோர்வரை விரும்பிச் சுவைத்திடும் உன்னத மன்னாவே, இருள் சூழ்ந்த மக்களுக்கு ஒளியைப் பொழிந்திடும் மன்னாவே நீ வளர்க! பல்லாண்டு காலம் வாழ்க!

*சீ. பிரதீப் குமார் (குமார்), வாழ்க்கைப்பெற்றான் கண்டல், முருங்கன்.*

### மன்னாவே தொடர்ந்து வா! விரைந்து வா!

உலகம் முழுவதும் உலாவி வரும் மன்னாவே!
உனக்கு எனது உளம் கனிந்த மகத்தான நன்றிகள் உரித்தாகட்டும். நீ இறைவார்த்தையை வாசித்து அறிந்து அதன்படி வாழச் செய்கின்றாய். மறையறிவில் - இறையறிவில் நாம் வளரச் செய்கின்றாய். மன்னாவே நீ தொடர்ந்து வா விரைந்து வா! உன்னை வளர்த்தெடுப்பவர்களை தூயஆவி வழி நடத்த வேண்டுமென வேண்டுகின்றேன்.

*எம். லின்ரா, பாலையடிப் புதுக்குளம், வட்டக்கண்டல், மன்னார்.*

## டென்மார்க் நாட்டில் இருந்து

### மன்னா கிறீஸ்தவ மக்களைத் தட்டி எழுப்புகிறது

இறைவன் விரும்புவது பொன்னும் பொருளுமல்ல நம் உள்ளங்களைத்தான். இதனை கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் உணரவேண்டும். இன்றைய நாகரீக உலகில் அதுவும் வெளிநாட்டில் கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விதான் அதிகம் இருக்கின்றது.

உண்மையிலே இறைவன் இருக்கிறார் அவர்தான் எங்களை ஆண்டு வழி நடத்துகின்றார் என்று உண்மையான விசுவாசத்துடன் இருப்பவர்கள் எவ்வளவோ குறைவு.

இப்படியான நிலையில் மன்னா பத்திரிகை எத்தனையோ கிறீஸ்தவ மக்களைத் தட்டி எழுப்பியுள்ளது. இதனை இறை பக்தியோடு வாசிக்க எவ்வளவோ விருப்பமாக இருக்கின்றது. மன்னா பத்திரிகை தனது ஆக்கங்கள் மற்றும் இறைவனோடு சேர்ந்த விடயங்களை அனைத்தையும் தொடர்ந்தும் தருவதற்கு என்னுடைய வாழ்த்துக்களும், நன்றிகளும்.

*- க. போல் சேவியர், டென்மார்க்.*

## புன்னகை செய்யுங்கள்!




கல்கத்தாவுக்கு வந்த சில பயணிகள், அதை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு என்னிடம், ‘நாங்கள் சிறப்பாக வாழ என்ன செய்வது?’ என்று கேட்டார்கள்.
அதற்கு நான் சொன்னேன்: “மற்றவர்களைப் பார்த்துப் புன்னகை செய்யுங்கள், உங்கள் மனைவியைப் பார்த்துப் புன்னகை செய்யுங்கள், உங்கள் குழந்தைகளைப் பார்த்துப் புன்னகை செய்யுங்கள், ஒருவர் மற்றவர்பால் புன்னகையைப் பரிமாறிக்கொள்ளுங்கள். எவராக இருந்தாலும் என்ன? அவ்வாறு செய்வது ஒருவர் மற்றவர்மீது பேரன்பு பாராட்டுவதற்குப் பெரிதும் உதவும். துன்பம் வரும் வேளையில் சிரிப்பது சில நேரங்களில் கடினமானதுதான். ஆனால் உண்மையான பண்பாடு எல்லா நேரங்களிலும் நம்மைப் புன்னகை பூக்கச் செய்யும்.”

**- அன்னை திரேசா.**

## நகைச்சுவை!

**அந்தோனி:** என்ன முத்தர், பாதுகாப்புப் படைகள் இப்ப சந்திக்குச் சந்தி நிக்கத் தொடங்கிட்டாங்கள்... மக்களுக்கு பாதுகாப்பு பலமா இருக்குப்போல...

**முத்தர்:** இப்ப றோட்டுவழிய நடக்கிறதப் பாத்தா பாதுகாப்பு படைகளிட்ட இருந்து எட்ட நிக்கிறதுதான் நமக்குப் பாதுகாப்பு.



## மன்னா அபிமானிகளே!

இறந்து போன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், திருமண யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக புதிய வருடத்தில் இருந்து ரூபா 1500 அறவிடப்படும்.
மன்னாவின் பக்கங்களை நாம் அதிகரிக்கின்ற போதும், மன்னாவின் விலையை அதிகரிக்கவில்லை என்பதை வாசகர்கள் அறிவீர்கள்.
எனவே இந்த மேலதிக செலவை மேற்கூறிய விளம்பரங்கள் மூலம் ஈடுசெய்ய விரும்புகின்றோம். எனவே மன்னா அபிமானிகள் எம்மோடு ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றோம்.

**- மன்னா நிர்வாகம்.**

## புனிதர் பொன்மொழி

“இறைவன் வார்த்தை, ஆவி என்னும் தமது இரு கரங்களாலும் உலகைப் படைத்து தமது சாயல் என்ற முத்திரையை அதில் பதித்தார்.”

**- புனித இரனேனியுஸ் -**

“உண்மை யாரிடமிருந்து வந்தாலும் அது எதைப்பற்றியதாக இருந்தாலும் அஃது இறைவனின் ஆவியானவரிடமிருந்தே வருகின்றது.”

**- புனித அக்குவின் தோமையார் -**

### *மன்னா விநியோகஸ்தர்கள் கவனத்திற்கு!*


நாம் எவ்வளவு விரைவாக மன்னாவை அச்சிட்டு பங்குகளில் உள்ள விநியோகஸ்தர்கள் கைகளில் கொடுத்தாலும், அவர்களில் சிலர் உரிய நேரத்தில் அவற்றை வாசகர்களுக்கு, கொடுக்காமல் காலம் தாழ்த்திக் கொடுப்பதாக நாம் அறிய வருகின்றோம்.

எனவே தயவுசெய்து, மன்னா விநியோகஸ்தர்கள் உங்கள் கைகளில் மன்னா பத்திரிகை கிடைத்ததும், அவற்றை மிக விரைவாக வாசகர்கள் கைகளில் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

# இளையோரே, விவிலியத்தை தெரிந்துகொள்ளுங்கள்!

# கிறிஸ்துவில் உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள்!

## இளையோருக்கு திருத்தந்தையின் அழைப்பு



இளையோரே! விவிலியத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். கிறிஸ்துவில் உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள். மகிழ்வோடு அவர் வார்த்தையை ஏற்று, அவரது போதனையை நடைமுறைப்படுத்துங்கள். இதுவே மூன்றாம் மிலேனிய இளையோரே! உங்கள் வாழ்வின் திட்டமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு திருத்தந்தை 16ம் பெனடிக்ற் இளையோருக்கு அழைப்பு விடுத்துள்ளார். "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு. என் பாதைக்கு ஒளியும் அதுவே." (திருப்பாடல் 119:105) எனும் தலைப்பில் சிறப்பிக்கப்பட்ட 21வது உலக இளையோர் தினத்திற்கான திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் செய்தி கடந்த 27.02.2006 திங்களன்று வெளியிடப்பட்டது.

கடவுள் வரலாற்றில் தன்னை வெளிப்படுத்துகிறார். அவர் மனுக்குலத்தோடு பேசுகிறார். அவர் பேசும் வார்த்தை படைப்பாற்றல் மிக்கது. கடவுள் தாம் செய்வதைப் பேசுகிறார். அவர் பேசுவதைச் செய்கிறார். மெசியாவின் வருகை பற்றியும், புதிய உடன்படிக்கையை உருவாக்குவது பற்றியும் பழைய ஏற்பாடு இஸ்ரயேல் மக்களுக்கு அறிவித்தது. திருத்தூதர்கள் மீட்புச் செய்தியைப் பெற்று, அதைத் திருச்சபையின் நகைப் பெட்டியில் பத்திரமாக பாதுகாக்க வேண்டிய, விலைமதிப்பில்லாத அரும்பொருளாக, முத்தாக அவர்கள் தங்கள் வாரிசுகளுக்கு விட்டுச் சென்றுள்ளார்கள். திருச்சபையின்றி, இந்த முத்து இழக்கப்படும் அல்லது அழிக்கப்படும் ஆபத்தை எதிர்நோக்குகின்றது. இந்தத் திருச்சபையை அன்பு செய்து பின்பற்ற வேண்டும்.

21வது உலக இளையோர் தினத்தை ஏப்ரல் 9ந் திகதி, குருத்துவ ஞாயிறன்று கொண்டாடும் போது இதனை 2008ல் சிட்னியில் கொண்டாடப்படும் இளையோர் தினத்தை நோக்கிய திருப்பயணமாகக் கொள்வோம் எனத் திருத்தந்தை குறிப்பிட்டார்.

## கியூடெக் நிறுவனப் பணியாளர்களின் மறைவு குறித்து

### கறிற்றாஸ் ~ சிறிலங்கா இரங்கல்

கடந்த ஏப்ரல், 10ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் (மிருசுவிலில்) நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த இரண்டு கறிற்றாஸ் - யாழ்ப்பாணம் (கியூடெக்) அமைப்பின் உறுப்பினர்களின் மறைவு குறித்து கறிற்றாஸ் சிறிலங்காவின் (செடெக்) தேசிய இயக்குனர் அருட்பணியாளர் டேமியன் பெர்ணான்டோ இரங்கல் தெரிவித்துள்ளார்.

"திரு கே. பத்மநாபன், எஸ். பிரதீப் குமார் ஆகியோரின் இழப்புக் குறித்து நாம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். எமது நினைவுகளும் - செபங்களும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும், நெருக்க - மானவர்களுக்கும் என்றும் இருக்கும்" எனக் குறிப்பிட்டார்.

மறைந்த உறுப்பினர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கொழும்பு செடெக் தேசிய நிலையத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட இரங்கல் திருப்பலியை நீதி, சமாதான, மனித முன்னேற்ற ஆணைக்குழுவின் தலைவர் ஆயர் மேதகு, றேமன் பீரிஸ், தேசிய இயக்குனரோடும், ஏனைய மறைமாவட்ட இயக்குனரோடும் இணைந்து ஒப்புக்கொடுத்தார்.

## குடும்ப முரண்பாடுகளை எவ்வாறு களையலாம்?

### மன்னார் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் பயிற்சி



இன்றைய காலங்களில் சமூகத்திலும், குடும்பத்திலும் முரண்பாடுகள் பல வடிவங்களில் தோன்றுகின்றன. இவ்வாறான நிலையில் சிறிய சிறிய முரண்பாடுகளே பின்பு குடும்பங்கள் மத்தியில் பெரிய முரண்பாடுகளாக உருவெடுக்கின்றன.

நாம் இவற்றை முளையிலேயே எவ்வாறு அணுக வேண்டும் என்ற அணுகுமுறை தெரியாமல் இன்று பல குடும்பங்கள் பிரிவுகளை எதிர் நோக்கியுள்ளன. இப்படியான காலகட்டத்தில், கிராம மட்டங்களில் உள்ள மக்களுக்கு முரண்பாடு தொடர்பான பயிற்சியை மன்னார் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றிய (C. H. A) நிறுவனம் அளிப்பது சிறந்த ஒன்றாகும். முரண்பாடு வாழ்க்கைக்கு அவசியம். இதனை நாம் எவ்வாறு அணுக வேண்டும்? என்ற பயனுள்ள வழிகளை விளக்குகின்ற C. H. A நிறுவனத்திற்கு எமது நன்றிகள் என மன்னார் குடும்பநல இயக்குனர் விக்டர் சோசை அடிகளார் கடந்த மார்ச் மாதம் 23,24ந் திகதிகளில் நடந்த பயிற்சியை ஆரம்பித்து வைத்தவேளையில் கூறினார்.

## முகமதுநபியின் கார்ட்டுனுக்கு திருத்தந்தை கண்டனம்


முகமது நபியின் கார்ட்டூனை வெளியிட்டு சமூக கலவரத்தை ஏற்படுத்தியது குறித்து திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கருத்து வெளியிட்டுள்ளார். "மதங்களையும், அதன் அடையாளங்களையும் மதிப்பதும், அதன் வழியாக மக்களுக்கிடையே சமூக ஒற்றுமையையும், அமைதியையும் உருவாக்குவதும் உடனடியான தேவை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில் இதைக் காரணம் காட்டி மதத்தின் உண்மையான நோக்கத்தை மறந்து கலவரங்களில் ஈடுபடுவதைக் கண்டித்துள்ளார். காட்டூன் மூலம் முஸ்லீம்களின் மத உணர்வு காயப்படுத்தப்பட்டுள்ளதையும், முஸ்லீம்கள் கலவரத்தில் ஈடுபடுவதையும் கண்டித்துள்ளார்.

வத்திக்கானுக்கான மொராக்கோ தூதர் திருத்தந்தையைச் சந்தித்தபோது, கிறிஸ்தவ மதமும், இஸ்லாம் மதமும் உலக சமூக வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகள் குறித்து பேசப்பட்டது.

முகமது நபியின் கார்ட்டூன் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து லிபியா, நைஜீரியா, துருக்கி ஆகிய நாடுகளில் ஏற்பட்ட கலவரங்களைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை "மக்களை மத உணர்வுக்குள்ளாக்கி கலவரத்தில் ஈடுபடுத்துவது உலக சமாதானத்திற்கும், மக்களிடையேயான நல்லெண்ணத்திற்கும் நல்லதல்ல" என்று கூறினார்.

## பொன்விழாக் காணும் அருட்சகோதரி றோஸ்



நல்லாயன் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி றோஸ் பெர்ணாண்டோ பிள்ளை துறவற வாழ்வில் 50 வருடங்களை நிறைவுசெய்து பொன்விழாக் காண்கிறார்.

இவர் தற்போது மன்னார் மறைமாவட்டத்தில் வவுனியா பூவரசங்குளத்தில் உள்ள நல்லாயன் கன்னியர் இல்லத்தில் பணியாற்றுகின்றார்.

தனது சேவைக் காலத்தில் ஆசிரியராகவும், அதிபராகவும் 37 வருடங்கள் இவர் சேவையாற்றினார்.

ஆசிரியராக பண்டாரவளை, நீர்கொழும்பு, வத்தளை ஆகிய இடங்களில் கற்பித்தும், அதிபராக நல்லாயன் அரசினர் மகளிர் பாடசாலையில் 24 வருடங்கள் சேவையாற்றியும் உள்ளார்.

மேலும் தனது சேவைகளை வெலிக்கடைச் சிறைச்சாலையிலும், கொழும்பு மறைக்கல்வி நடுநிலையத்திலும், புனித அலோசியஸ் குருமடத்திலும் ஆற்றினார்.

இறுதியாக மன்னார் மறைமாவட்டத்தில் கைவிடப்பட்ட இளம் பெண்களுக்கு வாழ்வளிக்க தாகம்கொண்டு, முதன் முதலாக வவுனியாவில், தாகத்துடன் தடம்பதித்த பெருமை இவரையே சாரும்.

அருட்சகோதரி றோஸ் அவர்களின் பணி மென்மேலும் வளர, உடல் உள ஆன்மீக நலம் பெற்று நீடுழி காலம் வாழ மன்னா அன்பு நெஞ்சங்களின் நல்வாழ்த்துக்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## பங்குத்தள சங்கதிகள்

### வஞ்சியன்குளம் சேமக்காலையில் சிற்றாலயம்





திரு. செபமாலை அந்தோனியின் ஆன்ம இளைப்பாற்றிக்காக, வஞ்சியன்குளம் சேமக்காலையில் சித்த வைத்தியர் திரு. சீமான் (ஜே. பி) அவர்களால் அமைக்கப்பட்ட சிற்றாலயம் பங்குத்தந்தை அருட்பிரகாசம் அடிகளாரால் 19.04.2006 அன்று திறந்துவைக்கப்பட்டது.

### பண்டிவிரிச்சானில் மறையாசிரியர் தினம்

பண்டிவிரிச்சான் பங்கில் மறையாசிரியர் பெருவிழா கடந்த 19.03.2006 அன்று, சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் சிறப்புத் திருப்பலி சின்னப் பண்டிவிரிச்சான் புனித சவேரியார் ஆலயத்தில் இடம்பெற்றது. இத்திருப்பலியை பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்பணியாளர் அன்ரன் லியோன் ஒப்புக்கொடுத்தார்.

இதில் 20 மறையாசிரியர்கள் இணைந்து, சின்னப்பண்டிவிரிச்சானில் மதிய உணவு தயாரித்து உண்டு மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வில் குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளாரும், அருட்சகோதரி கிருபா அவர்களும் இணைந்து சிறப்பித்தனர்.

சேவியர் குரூஸ் அடிகளார் மறையாசி - ரியர்களுக்கு உரை நிகழ்த்தினார். பின்னர் அனைத்து மறையாசிரியரும் தம்மை அறிமுகப்படுத்தினர். சில கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. பி.ப. 5.00 மணியளவில் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுபெற்றன.

*தகவல் : ம. கிறிஸ்ரீனா சில்வா.*

### பள்ளிமுனையில் மறைக்கல்விப் பாசறை

பள்ளிமுனைப் பங்கில் மறைக்கல்வி வகுப்புக்களை புதுமெருகுடன் நடாத்தவும், மாணவர்களை மறைவாழ்வில் மென்மேலும் ஊக்கப்படுத்தவும் மாணவர்களுக்கான மறைக்கல்விப் பாசறைகள் நடாத்தப்பட்டன.

மாணவர்களின் வயதெல்லைக்கு ஏற்ப, கடந்த 21.01.2006 அன்று, தரம் 1 – 5 வரையிலான மாணவர்களுக்கும், கடந்த 04.03.2006 அன்று, தரம் 6 – 9 வரையிலான மாணவர்களுக்கும் மறையாசிரியர்களினால் ஒரு நாள் பாசறைகள் சிறப்பாக நடாத்தப்பட்டன.

இதில் விவிலிய விளையாட்டுக்கள், வினா விடைகள், செபங்கள், பாடல்கள், வீடியோ படக்காட்சிகள், விவிலிய வினாக்களுக்கு விடையளித்தல், ஓவியப் போட்டி போன்றன நடாத்தப்பட்டன. மாணவர்கள் ஆர்வத்துடன் இதில் பங்கேற்றனர். இப்பாசறைகளை நடாத்தியபின் மாணவர்கள் புதிய உற்சாகத்துடன் மறைக்கல்விச் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்துவதை அவதானிக்க முடிகிறது.

*மறையாசிரியர் : திருமதி. ஜே. ஷமிலா.*

## கவிஞர் மொத்தம் போலின் நூலைக் கண்டுபிடித்துத் தரக் கோரிக்கை

மன்னார் நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த, மறைந்த கவிஞர் மொத்தம் போல் அவர்களுடைய படைப்புக்களை தொகுத்து நூலுருவாகக் கொண்டுவரும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக அவருடைய ஆக்கங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் தொடர்கின்றன.

60களில் அவர் எழுதி வெளியிட்ட, *"மாந்தை மாதாவே மருதமடு மாதாவே"* என்ற பெயரைக்கொண்ட நூல் தற்போது புழக்கத்தில் இல்லாமல் போய்விட்டது.

இந்நூல் யாரிடமாவது இருந்தால் அவற்றைத் தந்து உதவுமாறு வேண்டப்படுகின்றீர்கள். இந்நூலைக் கண்டெடுத்துத் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் என கவிஞரின் குடும்பத்தவர்கள் தெரிவிக்கின்றனர். தயவுசெய்து மண்ணின் கலை இலக்கியங்களில் ஆர்வமுள்ள நல்லுள்ளங்கள் இதுவிடயத்தில் எம்மோடு ஒத்துழைக்கும்படி வேண்டுகின்றோம்.

***தொடர்புகளுக்கு : அருட்பணியாளர், நேசன், மறைக்கல்வி நிலையம், மன்னார்.***

## விடத்தல்தீவில் மறையாசிரியர் தினம்



கடந்த மார்ச் 19ம் திகதி மறையாசிரியர் தினத்தின்போது விடத்தல்தீவு மறையாசிரியர்கள்!

## உலகில் இயங்கும் வானொலிகளில் அதிகமான மொழிகளில் ஒலிபரப்பை நடாத்தும்

# வத்திக்கான் வானொலி

# 75 ஆண்டுகளை நிறைவுசெய்கிறது!

கடந்த 75 வருடங்களாக வத்திக்கான் நகரில் திருப்பீடத்தின் ஒலிபரப்பு மையமாகவும், சர்வதேச சமூகத்தால் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட திருப்பலிகளுக்கு உதவும் ஒரு தொடர்பு சாதனமாகவும், நற்செய்தி பரப்பும் ஊடகமாகவும் வத்திக்கான் வானொலி விளங்குகிறது.

வத்திக்கான் வானொலியின் பெரும்பாலான நிகழ்ச்சிகள் கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு கூறுகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தாலும், மனித சமுதாயமானது மத நல்லிணக்கத்துடனும், ஒத்துழைப்புடனும் வாழ உதவியாக கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் பல்சமய உரையாடலிலும் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது. மேலும் இந்நிகழ்ச்சிகளில், திருச்சபையின் நீண்ட காலப் பாரம்பரியத்திற்கு ஒத்திணங்கும் வகையில், இனங்களின் கலை, கலாச்சாரம் மற்றும் சிறப்பான இசை போன்றவைகளுக்கும் போதுமான முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

வத்திக்கான் வானொலியானது, 1931ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 5 ஒலிபரப்பு நிலைய சேவைகளும், தினமும் 40 மொழிகளில் ஒலிபரப்புக்களும், 6 மொழிகளில் சமயாசமய ஒலிபரப்புக்களும் ஆக, ஏறக்குறைய ஆண்டு ஒன்றிற்கு 28,500 மணி நேரம் ஒலிபரப்பாகின்றது.

உலகில் இயங்கும் வானொலிகளில் அதிகமான மொழிகளில் ஒலிபரப்பை நடாத்துவது **'வத்திக்கான் வானொலி'** என்பது பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## உயர்தர மாணவர்களுக்கான
## மாதிரிப் பரீட்சைகளும் கலந்துரையாடலும்



மன்னார் ஜே.ஆர்.எஸ். நிறுவனத்தின் அனுசரணையுடன் மன்னார் வலயக் கல்வித் திணைக்களத்தினால் க.பொ.த. உயர்தரம் - 2006 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சையும் கலந்துரையாடலும் இடம்பெற்றது. இவ்வருடம் மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர் நலன்கருதி மன்னார் ஜே. ஆர். எஸ். நிறுவன அனுசரணையுடன் மன்னார் வலயக்கல்வித் திணைக்களத்தினால் 18 பாடங்களுக்கான பரீட்சைகளும் அவை தொடர்பான கலந்துரையாடலும் சிறந்த வளவாளர்களினால் நடாத்தப்பட்டன.

இவ்வரிய முயற்சியினால் மாணவர்கள் சிறந்த பயனைப் பெறமுடிந்ததென அவர்களிடமிருந்து பெற்ற கருத்துக் கணிப்பின் மூலம் அறியக்கூடியதாய் இருந்தது. இதன் விளைவாக இவ்வருடம் பரீட்சைப் பெறுபேறுகள் கணிசமான முன்னேற்றத்தைக் காட்டும் என்று நம்பப்படுகின்றது.

இம்முயற்சிக்கு தனது பூரண ஒத்துழைப்பை வழங்கியதற்காக ஜே. ஆர். எஸ். நிறுவனத்திற்கு மன்னார் வலயக்கல்வித் திணைக்களம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

**தகவல். ஆசிரிய ஆலோசகர், கிறிஸ்தவம், வலயக் கல்விப்பணிமனை, மன்னார்.**

## யாழ் மறைமாவட்டத்திற்கு
# மூன்று புதிய குருமணிகள்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அருட்சகோதரர்கள் எதிர்வரும் 25.05.2006 அன்று யாழ். தூய மரியன்னை பேராலயத்தில், யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட உள்ளார்கள். இவர்களுக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

### பாலதாஸ் பிறாயன்

அருட்சகோதரர் பிறாயன் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்கைச் சேர்ந்த திரு. திருமதி அன்ரனி பாலதாஸ், செபஸ்ரியம்மா தம்பதிகளின் ஐந்தாவது புதல்வன் ஆவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நிறைவு செய்தார். 1992ம் ஆண்டு ஜெயசீலன் அடிகளாரால் புனித மாட்டீனார் குருமடத்திற்கு அனுப்பப்பட்ட இவர், 1997ம் ஆண்டு, புனித பிரான்சிஸ்கு சவேரியார் பெரிய குருமடம் நுழைந்தார். அங்கு தனது மெய்யியல், இறையியல் கல்வியை நிறைவுசெய்து இளங்கலைமாணிப் பட்டங்களையும் பெற்றுக் கொண்டார்.

இவர் 28-05-2006 அன்று, பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் தனது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

### எ.செ.கி. மரியதாஸ் :

அருட்சகோதரர் மரியதாஸ் பலாலியைப் பிறப்பிடமாகவும், தற்போது சுதந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட - மயிலிட்டிப் பங்கின் தூய காணிக்கை மாதா ஆலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி எட்வேட் செல்வராஜா செபமாலையம்மா (பவளம்) தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை பலாலி அ.த.க.றோ.க. பாடசாலையிலும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார்.

1992 முதல் 1996 வரை புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் பயிற்சி பெற்றார். 1996 முதல் 2005 வரை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் கல்வியை நிறைவுசெய்து இளங்கலைமாணிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இவர் 30-05-2006 அன்று, சுதந்திரபுரம் தூய யூதாததேயு ஆலயத்தில் காலை 9.30 மணிக்கு, தனது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

### நீக்கிலஸ் லெஸ்லி அன்ரனி

அருட்சகோதரர் லெஸ்லி அன்ரனி யாழ். தூய மரியன்னை பேராலயத்தைச் சேர்ந்த திரு. திருமதி. நீக்கிலஸ் (பப்பா), பிலோமினம்மா தம்பதிகளின் புதல்வராக 21.04.1975ல் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் நிறைவுசெய்தார். 1991 முதல் - 1996 வரை புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் பயிற்சி பெற்றார்.

1996 முதல் - 2005 வரை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் கல்வியை நிறைவுசெய்து இளங்கலைமாணிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

இவர் 27-05-2006 அன்று, யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் தனது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

## புகழ்பூத்த கத்தோலிக்க எழுத்தாளர்
## அமரர் யாழ் ஜெயம் (விக்ரர் மாஸ்ரர்)
## அவர்களின் 5வது நினைவு

32 ஆண்டுகள் ஆசிரியர் பணியிலும், 50 ஆண்டுகள் இலக்கிய உலகிலும் அளப்பரிய சேவைகளைச் செய்த அமரர் மரியாம்பிள்ளை விக்ரர் (யாழ் ஜெயம்) அவர்களின் 5வது நினைவு தினம் கடந்த மாதம் 22ம் திகதி நினைவு கூரப்பட்டது.

1974ம் ஆண்டு தனது முதற் பதிப்பான "புறாவே பற" (அன்னைமரி கன்னிக் கவிதை) தொடங்கி தொடர்ந்தும் 'இதய வீணை' (கவிதை தொகுப்பு) 'சிந்தை இனிக்கும் செல்வம்' (சிறுகதைகள்) 'ஜோசப்வாஸ் முனிவர் அம்மானை', 'புனித சூசையப்பர் அம்மானை' எனப் பல அரிய நூல்களை எழுதிப் பாராட்டுப்பெற்ற இவர் வானொலி இலக்கிய மேடைகள், கவியரங்குகள் மூலம் தமது திறமைகளை வெளிப்படுத்தி நன்கு பிரசித்தம்பெற்றவர்.

யாழ் ஜெயம், சாந்தி, செல்வி, ராஜி, பொன் அமரநாத் போன்ற புனைர்பெயர்களில் பாதுகாவலன், வீரகேசரி, தினகரன், சுதந்திரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் தனது கவிதை ஆற்றலை வெளிப்படுத்திய இவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம், அவுஸ்ரேலிய தமிழ்ச்சங்கம் போன்றவை நடாத்திய உலகளாவிய கவிதைப் போட்டிகளில் பரிசில்களையும் பாராட்டையும் பெற்றுள்ளார்.

இதய வீணை புத்தக வெளியீட்டிற்காக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் ஜோசப்வாஸ் முனிவர் அம்மானை வெளியீட்டிற்காக கத்தோலிக்க இலக்கியக் கழகத்தாலும் புனித ஆசீர்வாதப்பர் அம்மானை வெளியீட்டிற்காக புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்குத்தந்தை அன்ரன் மத்தாயஸ் மற்றும் பங்கு மக்களாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவர்.

பெரும் கௌரவத்திற்கும் பாராட்டுதலுக்குமுரிய அமரர் மரியாம்பிள்ளை விக்ரர் அவர்களை எழுத்துலகின் சார்பில் மன்னா நன்றிப் பெருக்குடன் நினைவுகூருகின்றது.

## கவிஞர் நாவண்ணன்
# காலமானார்

மன்னாரைச் சேர்ந்த கவிஞர் நாவண்ணன் (சூசைநாயகம்) அவர்கள் கடந்த 15.4.2006 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்கச் சடங்குகள் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

கிறிஸ்தவ சமயத்திற்கு தன் கலை, இலக்கியத் திறமைகள் மூலம் பல சேவைகளை ஆற்றிய நாவண்ணன் கத்தோலிக்கத் திருச்சபையால் நன்றியோடு நினைவுகூரப்பட்டார்.

### ஓர் எழுதுகோல் ஓய்ந்துவிட்டது!

ஓர் எழுதுகோல் ஓய்ந்துவிட்டது நாவண்ணன்
எனும் நாமம் பூண்டு
நானிலம் துலக்கிய நாவண்மைக் கவிஞன்,
பாவண்ணன், ஆய்வாளன், எழுத்தாளன்
சூசைநாயகம் என்ற அகல் விளக்கு
அணைந்துவிட்டது.

மாதோட்டம் கலைப்புகழ் பூத்தது
மன்னார் மண்ணின் மைந்தனாம்
இப்பாவலனால்தான்.
நாடறிந்த இக்கவிஞனை பாரோச்சும்
இப்படைப்பாளியை
கருவாக்கி உருவாக்கிய இம்மன்னார் மண்
அன்னாரை இழந்து சோகக் கண்ணீரால்
நனைந்துகொண்டிருக்கின்றது.

இயல் இசை நாடகம், சிற்பம் எனும்
துறைகளிலும் கால் பதித்தவர்
நாடக ஆசிரியராய்
புரட்சிகர நாடகங்களை ஆக்கி
மக்களை விழிப்பூட்டி புகழ் பூத்தவர்.

கதை, கவிதை, கட்டுரை, ஆய்வுரை எனவாக
நூல்கள் பலவாக்கி புரட்சிகர கருத்துக்களை
மக்களின் விடியலுக்காய்ப் படைத்து
மக்கள் உள்ளங்களில்
நீங்கா இடம்பிடித்த சீர்திருத்தவாதி!

அன்னார் மறைந்தாலும்
இவ்வாண்மைக் கவிஞனின் படைப்புக்கள்
என்றும் இவர் நாமத்தை, புகழை
விளம்பி நிற்கும்.

***பிரிவுத்துயரறிந்து அஞ்சலித்து நிற்கும்,***
***- பிரதேச செயலாளர்,***
***உள்ளக, வெளிக்கள அலுவலர்கள்,***
***கிராம அலுவலர்கள், மன்னார் நகரம்.***

## மறையாசிரியர் தேர்வு – 2005 பெறுபேறுகள்

இலங்கையில் உள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் இருந்து மறையாசிரியர் தேர்வில் பங்கெடுத்து சித்திபெற்றோரின் எண்ணிக்கை விபரங்கள் மறைமாவட்ட ரீதியாகத் தரப்படுகின்றது.

**எழுத்துக்கள் குறிக்கும் சொற்கள்**

தோ. எ. - தோற்றியோரின் எண்ணிக்கை
வி. சி. - விசேட சித்தி
தி. சி. - திறமைச் சித்தி
சா. சி. - சாதாரண சித்தி
சி. இ. - சித்தி இன்மை



### 2005 மறையாசிரியர் 1ம் பரீட்சை

| மறைமாவட்டம் | தோற்றியோரின் எண்ணிக்கை | விசேட சித்தி | திறமை சித்தி | சாதாரண சித்தி | சித்தி யின்மை |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 51 | 7 | 15 | 20 | 9 |
| குருணாகல் | 5 | 1 | 4 | — | — |
| இரத்தினபுரி | 6 | — | 1 | 5 | — |
| கண்டி | 32 | 1 | 10 | 19 | 2 |
| பதுளை | 12 | 5 | 07 | — | — |
| சிலாபம் | 17 | — | 3 | 8 | 6 |
| திருமலை -மட்டுநகர் | 38 | 1 | 14 | 18 | 5 |
| யாழ்ப்பாணம் | 176 | 5 | 43 | 114 | 14 |
| மன்னார் | 76 | 1 | 31 | 42 | 2 |
| மொத்தம் | 413 | — | — | — | 38 |
| மொத்த சித்தி | 375 | — | — | — | — |

### 2005 மறையாசிரியர் 2ம் பரீட்சை

| மறைமாவட்டம் | தே.எ. | வி.சி. | தி.சி. | சா.சி. | சி.இ |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 24 | — | 12 | 12 | — |
| குருணாகல் | 1 | — | — | 1 | — |
| இரத்தினபுரி | 9 | 1 | 3 | 5 | — |
| கண்டி | 49 | — | 12 | 33 | 4 |
| பதுளை | 9 | — | 3 | 6 | — |
| சிலாபம் | 14 | — | 2 | 9 | 3 |
| திருமலை மட்டுநகர் | 24 | 3 | 7 | 14 | — |
| யாழ்ப்பாணம் | 121 | 1 | 18 | 81 | 21 |
| மன்னார் | 77 | 1 | 31 | 41 | 4 |
| மொத்தம் | 328 | 6 | 88 | 202 | 32 |
| மொத்த சித்தி | 296 | — | — | — | — |

### 2005 மறையாசிரியர் 3ம் பரீட்சை

| மறைமாவட்டம் | தோ.எ. | சித்தி | சி.இ |
|---|---|---|---|
| கொழும்பு | 07 | 07 | — |
| இரத்தினபுரி | 02 | 02 | — |
| கண்டி | 23 | 20 | 03 |
| பதுளை | 11 | 10 | 01 |
| சிலாபம் | 05 | 04 | 01 |
| திருமலை மட்டுநகர் | 34 | 29 | 05 |
| யாழ்ப்பாணம் | 89 | 84 | 05 |
| மன்னார் | 47 | 42 | 05 |
| மொத்தம் | 218 | 198 | 20 |

# மன்னார் மறைமாவட்டத்திற்கு எட்டுப் புதிய குருக்கள்

# பணிக்களத்தில் பாதம் பதிக்கும் அருட்பணியாளர்களே!

## அலெக்சாண்டர் ஆரோக்கியம் (ஜெலிங்டன்)




அருட்சகோதரர் ஆரோக்கியம் அவர்கள் ஆட்காட்டிவெளிப் பங்கு, அடம்பன்தாழ்வு கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. அலெக்சாண்டர், செபமாலை தம்பதிகளின் புதல்வனாக 17.11.1977ல் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை மன்/ பாலையடிப் புதுக்குளம் றோ.த.க பாடசாலையிலும், மன்/ வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலையிலும், உயர் கல்வியை மன். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் நிறைவு செய்தார்.

அருட்தந்தை செபஸ்ரியன் குரூஸ் (ஐ. வி. டி) அடிகளார் அவர்களால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மன்னார் மடுமாதா சிறிய குருமடத்திற்கு பாதம் பதித்த இவர், பின்னர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கு தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்து. மெய்யியல்மாணிப் பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து, கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியை நிறைவுசெய்து இறையியல் மாணிப் பட்டத்தைப் பெற்றார். பம்மைமடு, பேசாலை ஆகிய பங்குகளில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார். இவர் தனது முதல் திருப்பலியை கறுக்காக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் 19.05.2006 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 8.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

## சூசை லக்கோன்ஸ் பிகிறாடோ




அருட்சகோதரர் லக்கோன்ஸ் அவர்கள் பள்ளிமுனை புனித சந்தலூசியா ஆலயப் பங்கைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. சூசை பிகிறாடோ - றீற்றா பிகிறாடோ தம்பதிகளின் புதல்வனாக, 25.09.1977ல் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை பள்ளிமுனை மன்/ புனித லூசியா மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் நிறைவு செய்தார். அருட்தந்தை ஒல்பன் இராஜசிங்கம் (அ.ம.தி) அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மடுமாதா சிறிய குருமடத்திற்கு பாதம் பதித்த இவர், பின்னர் மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்தில் நிறைவுசெய்து மெய்யியல்மாணிப் பட்டத்தைப் பெற்றார். யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவுசெய்து இறையியல் மாணிப் பட்டத்தையும் பெற்றார். அரிப்பு, கற்கிடந்தகுளம் ஆகிய பங்குகளில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை பள்ளிமுனை புனித லூசியா ஆலயத்தில் 23.05.2006 (செவ்வாய் கிழமை) அன்று காலை 7.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

## இம்மனுவல் செபமாலை (நேவிஸ்)



அருட்சகோதரர் செபமாலை அவர்கள் ஆட்காட்டிவெளிப் பங்கு, அடம்பன் நெடுங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. இம்மனுவல் - எலிசபேத் தம்பதிகளின் புதல்வனாக, 22.07.1977ல் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் நிறைவுசெய்தார். அருட்தந்தை செபஸ்ரியன் குரூஸ் (ஐ.வி.டி) அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மடுமாதா சிறிய குருமடத்திற்கு பாதம் பதித்த இவர், பின்னர் மெய்யியல் கல்வியை யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நிறைவுசெய்து மெய்யியல்மாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியைத் தொடர்ந்து, இறையியல் மாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். கற்கிடந்தகுளம், வவுனியா ஆகிய பங்குகளில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார்.


இவர் தனது முதல் திருப்பலியை காத்தான்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் 21.05.2006 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 8.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

## வருக வருக!

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த எட்டு அருட்சகோதரர்கள் எதிர்வரும் மே மாதம் 18ந் திகதி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களினால் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட உள்ளனர்.

பணிக்களத்தில் காலடி பதிக்கும் இவர்களை மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சார்பாக மன்னா மிகுந்த மகிழ்ச்சியோடு இறையாசி வேண்டி, வாழ்த்தி வரவேற்கின்றது. – பதிப்பாசிரியர் –


## சல்வதோர் சவுல்நாதன்



அருட்சகோதரர் சவுல்நாதன் அவர்கள் அடம்பன் பங்கு, கன்னாட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமதி சல்வதோர் - லூர்த்தம்மா தம்பதிகளின் புதல்வனாக, 05.02.1977 ல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கன்னாட்டி றோ.க.த.க. பாட - சாலையிலும், ஆண்டாங்குளம் றோ.க.த.க. பாடசாலையிலும், அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் நிறைவு செய்தார்.

அருட்தந்தை பீற்றர் மனோகரன் அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்தில் கற்று மெய்யியல்மாணிப் பட்டத்தைப் பெற்றார். யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவுசெய்து இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றார். பேசாலை, பம்மைமடு ஆகிய பங்குகளில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார். இவர் தனது முதல் திருப்பலியை கன்னாட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் 22.05.2006 (திங்கள்) அன்று காலை 8.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.


## கபிரியேல் அன்ரனிற்றோ அருள்ராஜ் குரூஸ்



அருட்சகோதரர் அருள்றாஜ் அவர்கள் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயப் பங்கைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. கபிரியேல் குரூஸ் - ஜெம்மா குரூஸ் தம்பதிகளின் புதல்வனாக 30.09.1977ல் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை பேசாலை மன்/ பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்தார். அருட்தந்தை ஜே. பி. தேவராஜா அடிகளாரால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நுழைந்து அங்கு தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்து மெய்யியல்மாணிப் பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து, கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியை நிறைவுசெய்து இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றார். அரிப்பு - சிலாவத்துறை, மன்னார், ஆகிய பங்குகளில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார். இவர் தனது முதல் திருப்பலியை பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் 28.05.2006 அன்று (ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

## பிரான்சிஸ் யூட் ஞானராஜ் குரூஸ் (நேரு)




அருட்சகோதரர் ஞானராஜ் அவர்கள் சிலாவத்துறை - அரிப்பு பங்கின் முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி. பிரான்சிஸ் குரூஸ் - றோசலின் குரூஸ் தம்பதிகளின் புதல்வனாக 18.10.1976 ல் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை முள்ளிக்குளம் றோ.க.த.க. பாடசாலையிலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் நிறைவுசெய்தார். அருட்தந்தை நவரெட்ணம் அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்தில் நிறைவுசெய்து மெய்யியல்மாணிப் பட்டத்தைப் பெற்றதோடு, யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவுசெய்து, இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றார். உயிலங்குளம், தாழ்வுபாடு ஆகிய பங்குகளில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை முள்ளிக்குளம் புனித பரலோக மாதா ஆலயத்தில் 27.05.2006 அன்று (சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

## எமிலியானுஸ்பிள்ளை டெனி கலிஸ்ரஸ்




அருட்சகோதரர் டெனி கலிஸ்ரஸ் அவர்கள் விடத்தல்தீவு மரியன்னை ஆலயப் பங்கைச் சேர்ந்த திரு. திருமதி. எமிலியானுஸ்பிள்ளை – அற்புதராணி தம்பதிகளின் புதல்வனாக 02.09.1977 ல் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை விடத்தல்தீவு றோ.க.த.க. பாடசாலையிலும், உயர் கல்வியை மன். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் நிறைவுசெய்தார். அருட்தந்தை செபமாலை அடிகளாரினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், பின்னர் மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்தில் தொடர்ந்து மெய்யியல் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றதோடு, யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியைத் தொடர்ந்து, இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றார்.

வவுனியா, ஆட்காட்டிவெளி ஆகிய பங்குகளில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை விடத்தல்தீவு புனித மரியன்னை ஆலயத்தில் 20.05.2006 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

## சூசைநாதன் டக்ளஸ் மில்ரன் லோகு



அருட்சகோதரர் டக்ளஸ் அவர்கள் பேசாலை வெற்றி நாயகி ஆலயப் பங்கைச் சேர்ந்த திரு. திருமதி சூசைநாதன் லோகு – யோசப்பின் மலர் மஸ்கிறிஞ்ஞு தம்பதிகளின் புதல்வனாக 07.10.1977 ல் பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/ பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.


அருட்தந்தை ஜே.பி. தேவராஜா அடிகள் அவர்களால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மடுமாதா சிறிய குருமடத்திற்கு பாதம் பதித்த இவர், மெய்யியல் கல்வியை தமிழ் நாடு மதுரை, கஞமாத்தூர் கிறிஸ்து இல்லத்தில் (அருளானந்தர் கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்) மெய்யியல்மாணிப் பட்டத்தைப் பெற்றதோடு, யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியைத் தொடர்ந்து, (உரோமை ஊர்பானியா பல்கலைக்கழகம்) இறையியல்மாணிப் பட்டத்தையும் பெற்றார். ஆட்காட்டிவெளி, மன்னார் ஆகிய பங்குகளில் தனது தியாக்கோன் பணியை மேற்கொண்டார்.

இவர் தனது முதல் திருப்பலியை பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் 28.05.2006 (ஞாயிற்றுக் கிழமை) அன்று மாலை 5.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.


# இலங்கை கிளரீசியன் துறவற சபைக்கு மூன்று புதிய குரவர்கள்

இலங்கை மண்ணில் 1992ம் ஆண்டு, கிளரீசியன் சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதற் தடவையாக தாய் மண்ணின் உருவாக்கலின் முதற்கனிகளாக மூன்று திருத்தொண்டர்கள் குருத்துவ திருநிலைக்கு உயர்த்தப்படவுள்ளனர்.


இக்குருத்துவ திருநிலைப்படுத்தல் நிகழ்வு 2006, ஏப்ரல் மாதம், 28ம் திகதி அன்று கொழும்பு, தூய லூசியா பேராலயத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும். அருட்சகோதரர்கள் றொயிஸ்டன் ஜெயராஜ் (CMF) சதீஸ் சவிரிமுத்து (CMF) ஸ்டீபன் சிங்கராயர் (CMF) ஆகியோர் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்படுவார்கள்.



ஸ்டீபன்



சதீஸ்



றொயிஸ்டன்

சகோ. றொயிஸ்டன் கொச்சிக்கடை தோப்பு தூய பிலிப்பு நேரியார் பங்கைச் சார்ந்த திருமதி பொரலின்தினா பர்ணாந்து மற்றும் காலஞ்சென்ற லோரன்ஸ் பீரிஸ் தம்பதிகளின் மகனாக 30.07.1976 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்ப, இடைநிலை, உயர்தர கல்வியை முறையே தோப்பு தமிழ் வித்தியாலயம், நீர்கொழும்பு விஜயரட்ணம் மகாவித்தியாலயம் மற்றும் கண்டி தூய அந்தோனியார் கல்லூரி ஆகியவற்றில் நிறைவுசெய்தார்.

சகோ. சதீஸ் யாழ். தூய மரியன்னை பேராலய பங்கைச் சார்ந்த திரு. செபஸ்தியாம்பிள்ளை சவரிமுத்து திருமதி. மேரிமார்டினா கமலா தம்பதிகளின் மகனாக 16.05.1977ல் பிறந்தார்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# சிறுவர் பொழிவு


## நரி கற்ற பாடம்
### - சிறுவர் கதை -

சிங்கம், சிறுத்தை, நரி ஆகிய மூன்றும் நண்பர்களாகக் கூடி வாழ்வதென முடிவு செய்தன. ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்வதென சபதம் ஏற்று, மூன்றுமாய் வேட்டைக்குப் புறப்பட்டன.

அப்போது மான் ஒன்று நரியின் கண்ணில் பட்டது. அது உடனே சிறுத்தையிடம் கூறியது. சிறுத்தை மானைத் துரத்தியது. விரட்டப்பட்ட மான், சிங்கத்தை நோக்கி வந்தது. சிங்கம் அதனை அடித்துக் கொன்றது. இறந்த மானை தம்மிடையே பகிர்ந்துகொள்ள மூன்றும் அருகருகில் வந்து அமர்ந்தன.

விரட்டிய களைப்புடன் இருந்த சிங்கம், "சிறுத்தையே! மானை, நம் மூவருக்கும் பங்கிட்டுக் கொடு" என்றது. 'சரி' என்று சிறுத்தை ஒப்புக்கொண்டது. "சிங்கமே! நீரே எங்களது தலைவர் என்பதால் உமக்கு மானின் தலை உரியது. விரட்டிய எனக்கு உடல் உரியது. மானைக் கண்ட நரிக்கு கால்களைத் தருகிறேன்" என்றது சிறுத்தை.

சிறுத்தை இதைச் சொல்லி முடிக்கவில்லை... அதன் தலையில் சிங்கம் ஓங்கி அடித்தது. வலி தாங்காமல் சிறுத்தை தரையில் விழுந்தது. பிறகு சிங்கம், நரிப்பக்கம் திரும்பியது.



"நரியே! மானை நீ பங்கிட்டுக் கொடு" என்றது.

தந்திரக்கார நரி எழுந்து மெச்சிப் புகழும் குரலில் சொல்லியது, "சிங்கமே! மானின் தலை உமக்கே உரியது. ஏனெனில் நீரே எமது தலைவர். மானின் உடலும் உமக்கே சொந்தமானது, காரணம் எமது தந்தைபோல் எம்மைக் காப்பவர் நீர். மானின் கால்களும் உமக்கு மட்டுமே உரித்தானது. காரணம் எமது நலனுக்காகவே பாடுபடுபவர் நீரே" என்றது. "நரியே! மிகச் சரியாகச் சொன்னாய். இப்படிச் சிறந்த முறையில் பங்கிட்டுக் கொடுக்க நீ எப்படிக் கற்றுக்கொண்டாய்?" என்று கேட்டது சிங்கம்.

"சிறப்புமிக்க சிங்கமே! எப்படி நான் இதைக் கற்காமல் இருக்க முடியும்? சிறுத்தைக்குத் தாங்கள் கற்பித்ததைத்தான் நான் பார்த்துக்கொண்டிருந்தேன்" என்று நரி பதில் அளித்தது.

*அ. சிபிலா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.*

## சிறுவர் தொடர் கதை

### புனித பதுவை அந்தோனியார்

அங்கம்-18

69. மறையுரை முடிந்தவுடன், பாவிகள் மனஸ்தாபத்தின் அடையாளமாகத் தம் மார்புகளைத் தட்டிக்கொண்டனர். சிலர் கண்ணீர் சிந்தியும் அழுதனர். எதிரிகள் சமாதானம் செய்து கொண்டனர். கொள்ளைக்காரர்கள் திருடிய பொருட்களைத் திருப்பிக்கொடுத்தார்கள். பலர் உடனே பாவசங்கீர்த்தனம் செய்தார்கள். அந்தோனியாரின் ஒவ்வொரு மறையுரைக்குப் பின்பும் இவ்வாறு நிகழ்ந்தன.

70. பன்னிரு பெருங்கொள்ளைக் கூட்டத்தார் ஒருநாள் அவருடைய சொற்பொழிவைக் கேட்க மாறுவேடத்தில் வந்தனர். அவர்கள் யாரிடம் திருடினார்களோ அவர்களில் சிலரிடையே கலந்து நின்று மறையுரையைக் கேட்டனர். அந்தோனியாரின் சொற்களைக் கேட்டு, மனந்திரும்பி, தாங்கள் செய்த குற்றங்களையும் அனைவர் முன்னிலையில் அறிக்கையிட்டனர். இனி நல்ல வாழ்க்கை வாழப்போவதாக உறுதியளித்தனர். பாவப் பரிகாரமாக, வெகு தொலைவில் உள்ள உரோமாபுரிக்கு – அங்குள்ள கோவில்களில் செபிப்பதற்காக கால்நடையாகச் சென்றனர்.




71. அந்தோனியார் எப்படி வாழ்ந்தார்? இயேசுவைப்போல வாழ்ந்தார். அவரைப்போல மிக ஏழையாயிருந்தார். எங்கு சென்றாலும் காசு எடுத்துச் செல்லமாட்டார். "காசு என்பது விஷ முள். அதைப்போல் பயங்கரமான பொருள் ஒன்றுமில்லை." என்பார். இரவில் எங்காவது தரையில் படுத்து உறங்குவார். சில வேளைகளில் வெறும் கல்தான் அவர் தலையணையாம்.

72. தாழ்ச்சி நிறைந்து காணப்பட்டார். தன் சகோதரர்களின் கால்களைக் கழுவுவார். அவர் அதிபராக இருந்தாலும், எல்லோருக்கும் பணிவிடை செய்வார். என்னே அவரது தாழ்ச்சி – பொறுமை! தன்னைக் கொள்ளையிட்டவனை அன்போடு அரவணைப்பார். பகைவர்களை வாழ்த்துவார். பாவிகளிடம் அன்போடு பேசுவார். இயேசு எவ்வாறு அன்பு செய்ய வேண்டுமென்றாரோ, அவ்வாறே அனைவரையும் அன்பு செய்தார்.

(தொடரும்)

## கொஞ்சமாச் சிரிங்க...!



**அரசியல்வாதி:** பள்ளிக்கூட படிப்பில் கடைசியாக இருந்த நான் இன்று அரசியல்வாதியாக இருந்து, படிப்பில் முதலாவதாக வந்த மாணவனுக்கு பரிசு வழங்குகிறேன். இதிலிருந்து என்ன தெரிகிறது?
**தொண்டர்:** பதவிக்காக தாளம் போடத் தெரியுமென்று!

***************

**தொண்டர்:** நீங்கள் அரசியலுக்கு வந்ததை நினைச்சு சந்தோஷப்படுகிறீர்களா? வருத்தப்படுகிறீர்களா?
**அரசியல்வாதி:** இதென்ன கேள்வி? நான் எதுக்கு வருத்தப்படவேணும். சனங்கள் அல்லோ வருத்தப்படவேணும்.


***************

**டேவிற்:** டொக்டர்! எலிப்பொறியில கருவாட்டுத் துண்டை வச்சு விரலை எடுக்கிறதுக்குள்ள பக்கெண்டு விரல் மாட்டிப் போட்டுது! என்ர பொறிகலங்கிப் போச்சு டொக்டர்!

***************

**தர்சினி:** எழும்புங்கோ!
**மகேஷ்:** சே! என்னத்துக்கு என்னை நித்திரையிலிருந்து எழுப்பிறியள்?
**தர்சினி:** நித்திரை வாறதுக்கு தூக்க மாத்திரை தர மறந்திட்டன்!


*கொண்சிற்றா, அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.*



"ஹோம் வேர்க் செய்யாம டீ.வி சீரியல் பார்க்கிறியே, ரீச்சர் திட்டமாட்டாங்களா?"
"டீச்சர் வீட்டுல கரண்ட் இல்லையாம்... இந்த சீரியலைப் பார்த்துட்டு வந்து கதையைச் சொல்லுன்னு, அவங்கதான் போன் பண்ணினாங்க...!"




"என்ன இந்த ஆள் 'எனக்கு திருமணம்' நடந்தது, நான் செய்த கூஜா பலன்'னு சொல்றாரே?"
"சினிமா நடிகையோட கணவராச்சே!"



"மன்னா யானைக் காலில் மிதித்து கண்டனை நிறைவேற்ற ஒரு [illegible] வாங்குங்கள்.
நிதி நிலை சரியில்லை என்று யானைக்கால் வியாதி உள்ளவனை வைத்து மிதித்து தண்டனை நிறைவேற்றுவது கேவலம!"



"செவ்வாய்க் கிரகத்துல தண்ணீர் இருக்குனு தலைவர்கிட்ட சொன்னது தப்பா போச்சு'
"ஏன்?"
"செவ்வாய்க் கிரகத்துல மழைநீர் சேகரிப்பு தொட்டி வைக்கணும்னு உத்தரவிடுறாரு"



"ரயில்வே மந்திரி ஏன் டென்ஷனாக இருக்கார்... மறுபடியும் ஆக்ஸிடெண்டாம்?"
"ரயில்வே மந்திரிங்கிற பேரை 'ஆக்ஸிடெண்ட் துறை மந்திரி'ன்னு மாத்தணும்னு கோரிக்கை வந்திருக்காம!"



"நேற்று ஆபீஸ்ல என் மேனேஜர்கிட்ட சாரி கேட்க வேண்டியதாகிப் போச்சு'
ஏன்?"
"என் புருஷன் எங்கே வாங்கித் தர்றார்?"

### மனிதா மறந்து விடாதே..

நீ வெற்றி பெறு ஆனால்
மற்றவர் வெற்றியை விலை பேசாதே!
நீ பணம் சேர் ஆனால்
அதில் அடுத்தவனுடைய சதம் சேராதே!
நீ முன்னேறு ஆனால்
அடுத்தவனுடைய தோள்களில் ஏறாதே!
உன் மதத்தை நேசி.. ஆனால்
மற்ற மதங்களையும் மதி...

*ம. மேரி கனிஸ்ரா (ஜனா), கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம், மன்னார்.*

## கவிதைப் பூக்கள்

### ஆன்மீக வாழ்வு

கண் விழித்தால் கலைந்திடும் எம் வாழ்வு
கயவனின் பிடிக்குள்ளே பலர் சாவு!
காற்றோடு கலந்திடும் எம்வாழ்வு!

அடுத்தவன் துன்பத்திலே இன்பம் காணும் மானிடா..
உன் மனங்களின் நேயம் மாண்டொழிந்து போனதா?
யுத்தமெனும் ரத்த வெள்ளத்தில் மூழ்கிய
உயிர்களின் அவலக் குரல்களும்
இயற்கையின் கொடூரத்தால் மக்களின் சோகமும்
இன்னும் நெஞ்சை விட்டு அகலவில்லை!

ஆன்மீகமற்ற நண்பர்களால் கலைந்துபோன வாழ்வைவிட்டு
சாதிமதம் கடந்து ஆன்மீக வாழ்வில் நிலைப்போம்.
இயல்பிழந்த வாழ்க்கையிலே இறுகிப் போன மனங்களின்
இளமைதான் நிரந்தரமா? கருகிப்போன உணர்வோடு
கலையாத கனவுகளை சுமப்பதுதான் ஆன்மீகமா?

*க. தயாபரி, ஆலங்குளம், வட்டக்கண்டல்.*

### என் அம்மா

கருவறையில் நான் கண்மூடிக்கிடந்தபோது
குருதி தந்து என்னைக் காத்தவளே,
குழந்தையாய் தவழ்ந்தபோது – எனக்கு
நடக்கக் கற்பித்தவளே!
வருத்தத்தால் நான் அழுதபோது – உன்
சேலையால் முகம் பொத்தி அழுதவளே
ஒவ்வொரு நொடியிலும் நான் இன்புற்றபொழுது
நீயும் இன்புற்று அக்களித்தாயே!
என் அக்காவுக்கு அழச் சொல்லி கொடுத்தாயே
எனக்கு கண்ணீர்விட சொல்லித்தரவில்லையே!
நீ எனக்குக் கொடுத்த பாசத்தை
இன்று நான் உணர்கையில் உடல் மயிர் உதிர்கிறது.

*யே. றொணி டிமல், புனித கிளாரட் குருமடம், நீர்கொழும்பு.*

### நட்பின் மகிமை

பாசத்தில் வருவதும் நட்புதான்
பணிவாய்ப் பேசுவதும் நட்புதான்
ஐயோ! இது பாவம் என்பதும் நட்புதான்
ஐயோ! இது தொல்லை என்பதும் நட்புதான்.
நட்பு என்னும் வீணையதில்
நாமெல்லாம் தந்திபோல
மனங்கள் என்னும் மலர்களுக்கு
நிறங்கள் என்பது நட்புதான்
காதலில் நட்பும் கொஞ்சம் இருக்கும்
கண்ணென மணியெனப் பேசிட வைக்கும்
அரசியல் நட்பு ஆட்சி கவிழ்க்கும்
ஆளுமை இருந்தால் ஆட்டிப் படைக்கும்
என் இறைவனின் நட்போ
எல்லோரிலுமே புனிதமானது – அந்த நட்பு
பகைமையை அழித்து அவனி காக்கும்.

*கொ. மேரி இமல்டா, பொன்தீவுகண்டல், முருங்கன்.*

### அம்மா என்டா சும்மா இல்லேடா!

பத்து மாதம் கருவறையில் பாதுகாத்து வளர்த்தவளே
உதிரத்தை பாலாக்கி ஊட்டி வளர்த்தவளே!
அரவணைத்து உணவூட்டி அன்பையும் அறிவையும் தந்து
அன்னை மண்மீது பாசத்தை வளர்த்தவளே
தாயன்புக் கீடேது தாயே! தரணியில் தாயை புகழ யாருமில்லை
தாயே என் நெஞ்சில் வாழும் தெய்வம் நீயே..

*செ. மரிய நாயகி (சுகந்தினி) நறுவிலிக்குளம், திரிகுபுரி, வங்காலை.*

### தனிமரம்

வாலிப முறுக்கில் வழி தவறி வழுக்கி
வாழ்க்கையை தொலைத்தவள் – நான்
கண்ணியம் பேணா வாழ்வினில், என்றும்
புண்ணியம் ஏதுமில்லை.

*ஏ. ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

# தேசிய மட்ட மறையாசிரியர் தேர்வு முடிவுகள்

## மன்னார் மறைமாவட்டத்தில் சித்தியடைந்தோர் விபரம்

வி. சி - விசேட சித்தி
தி. சி - திறமைச் சித்தி
சா. சி - சாதாரண சித்தி

சித்தி அடையாதவர்களின் விபரம் இங்கே பிரசுரிக்கப்படவில்லை. அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ளவும். - மறைக்கல்வி இயக்குனர்.

2005ல் மறையாசிரியர் தேர்வு 3ன் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுடைய பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்களுக்கு இத்தேர்வின் அடுத்த நிலையான ஆய்வுக்கட்டுரை எழுதுவதற்கான விபரம் அடங்கிய கடிதங்கள் ஏற்கனவே தேசிய மறைக்கல்வி நிலையத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

### மறையாசிரியர் தேர்வு - 1, - 2005

| பெயர் | சுட்டெண் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| திருமதி செ.ஹ நெல்சி கூஞ்ஞ | 2005003 | தலைமன்னார் | சா.சி |
| பே. நிலுஜா டயஸ் | 2005007 | தாழ்வுபாடு | சா.சி |
| த.மே. சேபிகா | 2005010 | மன்னார் | தி.சி |
| பி. றேக்கா | 2005012 | மன்னார் | சா.சி |
| யோ. ஆ. எட்ணா குரூஸ் | 2005014 | மன்னார் | சா.சி |
| ப. செல்வ வனிதா | 2005015 | மன்னார் | தி.சி |
| அ.அன்னை யோசப் | 2002016 | மன்னார் | சா.சி |
| வெ. சசிகலா | 2005017 | மன்னார் | சா.சி |
| தே.மே. துஸ்யந்தி குரூஸ் | 2005018 | மன்னார் | சா.சி |
| ச. மேரி றோஸ் | 2005019 | மன்னார் | சா.சி |
| ஞா. ஜெயகலா | 2005021 | உயிலங்குளம் | சா.சி |
| அ. சகாய மேரி | 2005023 | வஞ்சியங்குளம் | தி.சி |
| அ. சகாய ராணி | 2005024 | வஞ்சியங்குளம் | சா.சி |
| அ. தெபோறா | 2005025 | வஞ்சியங்குளம் | சா.சி |
| அ. தேவ நேசன் | 2005026 | நானாட்டான் | சா.சி |
| வ.யோ.மி. அனிற்றா பாமினி | 2005028 | நானாட்டான் | சா.சி |
| வி.யோ.மி.அ. விமலினி | 2005029 | நானாட்டான் | சா.சி |
| யே. அன்ரனீற்றா | 2005030 | அளவக்கை | சா.சி |
| சே.ரோ.டயானா | 2005031 | அளவக்கை | சா.சி |
| அ. தேவமனோகரி | 2005035 | அளவக்கை | சா.சி |
| வே. யூட் றொசானி | 2005036 | அளவக்கை | சா.சி |
| சே. மே. வெனிற்றா | 2005037 | அளவக்கை | தி.சி |
| தி. கலைவாணி | 2005038 | முருங்கன் | சா.சி |
| மி.பி.ஆ. சுஷாந்தினி | 2005039 | முருங்கன் | தி.சி |
| டி. தர்ஷினி பெரேரா | 2005040 | கற்கிடந்தகுளம் | சா.சி |
| ம. மரிய கொலின் | 2005041 | கற்கிடந்தகுளம் | சா.சி |
| பே. அனற் டயானா | 2005042 | கற்கிடந்தகுளம் | தி.சி |
| கி. அருமைநாதன் | 2005043 | கற்கிடந்தகுளம் | தி.சி |
| தே. றூபினா | 2005044 | கற்கிடந்தகுளம் | சா.சி |
| எ.கொ. இமல்டா | 2005045 | கற்கிடந்தகுளம் | தி.சி |
| சி.மே. எமல்டா | 2005046 | கற்கிடந்தகுளம் | தி.சி |
| அ. இதயமலர் | 2005048 | விடத்தல்தீவு | சா.சி |
| யோ. றஜேந்தினி | 2005049 | அடம்பன் | தி.சி |
| ப. பெனடிற்றா | 2005050 | அடம்பன் | சா.சி |
| எ.ம. கிளமென்ரா | 2005054 | ஆட்காட்டிவெளி | சா.சி |
| யோ.அ.இ. அனிற்றா | 2005055 | ஆட்காட்டிவெளி | சா.சி |
| யோ. செ. ஜெயந்தா | 2005056 | பண்டிவிரிச்சான் | சா.சி |
| லே. ஆன்மேரி லெம்பேட் | 2005057 | பண்டிவிரிச்சான் | தி.சி |
| ம. கிறிஸ்ரினா சில்வா | 2005058 | பண்டிவிரிச்சான் | தி.சி |
| ம. றசாந்தினி | 2005062 | இலுப்பைக்குளம் | தி.சி |
| ப.பா. சுதர்ஷினி | 2005063 | இலுப்பைக்குளம் | தி.சி |
| செ. வனிதா | 2005064 | செட்டிகுளம் | சா.சி |
| ஏ. கவிதாஞ்சலி | 2005065 | செட்டிகுளம் | தி.சி |
| கி.பி.ஆ. ஜெயசீலி | 2005068 | செட்டிகுளம் | சா.சி |
| லோ. விஜிதா | 2005071 | செட்டிகுளம் | சா.சி |
| லா.எ. கிளேபீபீ | 2005072 | செட்டிகுளம் | சா.சி |
| அ.வினோதினி | 2005073 | கோமரசன்குளம் | சா.சி |
| லா.நிரஞ்சலா | 2005075 | கோமரசன்குளம் | தி.சி |
| அ. அருள் நிசாந்தினி | 2005076 | கோமரசன்குளம் | தி.சி |
| சா. சஜேந்திரன் | 2005078 | கோமரசன்குளம் | தி.சி |
| அ. ஜெறோம் | 2005079 | கோமரசன்குளம் | சா.சி |
| சே.இ. றொக்சி | 2005080 | கோம்ரசன்குளம் | தி.சி |
| ம. யேசுராசா | 2005081 | கோமரசன்குளம் | தி.சி |
| சே. ஹேமா | 2005083 | பம்பைமடு | தி.சி |
| செ. சுதாஜினி | 2005084 | பம்பைமடு | தி.சி |
| வெ.ரா.அ. பிரதீபன் | 2005085 | பம்பைமடு | சா.சி |
| ம.அ. றஜனி | 2005086 | பம்பைமடு | தி.சி |
| அ.சாலற் | 2005088 | பம்பைமடு | சா.சி |
| அ.சி. ஜெயசங்கர் | 2005089 | பம்பைமடு | சா.சி |
| அ.ம. அனோஜிதா | 2005090 | வவுனியா | தி.சி |
| தே.லீ. றம்யா | 2005092 | வவுனியா | தி.சி |
| கி.பஸ்ரீனா குரூஸ் | 2005096 | வங்காலை | தி.சி |
| லீ.க. தாரணி வாஸ் | 2005097 | வங்காலை | தி.சி |
| ஜெ. இமாக்குலேற் லியோண் | 2005098 | தலைமன்னார் | சா.சி |
| ம. இரத்தினகுமாரி குலாஸ் | 2005100 | தலைமன்னார் | சா.சி |
| தே.யூ. கொன்செப்ரா பிகிறாடோ | 2005105 | பள்ளிமுனை | தி.சி |
| ச.ரெ. பிறேமினா பிகிறாடோ | 2005106 | பள்ளிமுனை | தி.சி |
| சீ. லக்ஸ்சலா | 2005108 | வஞ்சியன்குளம் | சா.சி |
| அ. ஸிறோமி | 2005110 | உயிலங்குளம் | வி.சி |
| ச. சுதாஜினி | 2005119 | அடம்பன் | சா.சி |
| ம. அனிற்றா | 2005120 | ஆட்காட்டிவெளி | தி.சி |
| தே. சகாயநாயகி | 2005122 | கோமரசன்குளம் | சா.சி |
| தே. கஜாந்தினி | 2005124 | கோமரசன்குளம் | சா.சி |
| செ. தர்ஷினி | 2005126 | பம்பைமடு | தி.சி |

### மறையாசிரியர் தேர்வு - 2, - 2005

| பெயர் | சுட்டெண் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| கீ. லூட்ஸ் அன்னமேரி கூஞ்ஞ | 20521401 | தலைமன்னார் | சா.சி |
| திருமதி. யூர்சுலா சிவராஜா | 20521403 | மன்னார் | சா.சி |
| செ. மே. றிகானா குலாஸ் | 20521404 | பேசாலை | சா.சி |
| அ. ஷறோமி | 20521405 | கற்கிடந்தகுளம் | சா.சி |
| V.J. பிரதீபன் | 20521406 | முருங்கன் | சா.சி |
| இ. கிறிஷானி | 20521407 | நானாட்டான் | சா.சி |
| A. மியூறின் டயானா | 20521409 | மன்னார் | வி.சி |
| ம. நிரேஞ்ச ராஜினி | 20521410 | தட்சனாமடு | சா.சி |
| S. ஆரோக்கியம்மா றோச் | 20521411 | பள்ளிமுனை | சா.சி |
| யு. பற்றிக் டயஸ் | 20521413 | தோட்டவெளி | தி.சி |
| சி. மேரி காஞ்சனா | 20521415 | ஆட்காட்டிவெளி | தி.சி |
| ச. சா. அருந்ததி | 20521416 | ஆட்காட்டிவெளி | தி.சி |
| க. அனற் ஜஸ்மின் | 20521417 | பம்பைமடு | சா.சி |
| வ. மேரி யூடிற் | 20521420 | வவுனியா | சா.சி |
| ம. மேரி நிறோஜினி | 20521421 | பம்பைமடு | சா.சி |
| அ. சுகிர்தா | 20521428 | தாழ்வுபாடு | தி.சி |
| S.A ஜெனசி குரூஸ் | 20521429 | தலைமன்னார் | சா.சி |
| ஞா. வஸ்தியான் துரம் | 20521430 | வஞ்சியன்குளம் | சா.சி |
| தி. அன்ரனிற்றா | 20521431 | வஞ்சியன்குளம் | சா.சி |
| அ. மொறின் மேரி அலன் | 20521433 | மன்னார் | சா.சி |
| சீ. டொறின் ஷிபா | 20521434 | வஞ்சியன்குளம் | தி.சி |
| சா. றெஜினோல்டா | 20521435 | உயிலங்குளம் | தி.சி |
| ம. மேரி யசிந்தா | 20521436 | வஞ்சியன்குளம் | சா.சி |
| பே. தேவவதனி | 20521437 | வஞ்சியன்குளம் | சா.சி |
| J. சந்தியாகோ மரியா | 20521438 | வஞ்சியன்குளம் | சா.சி |
| வ. ஜெஸ்மின் ராஜேஸ் | 20521439 | உயிலங்குளம் | தி.சி |
| கி. அன்ரனற் யாழினி | 20521442 | உயிலங்குளம் | சா.சி |
| யே. ஷாலினி அன்ரனிற்றா | 20521445 | வவுனியா | சா.சி |
| சீ. மெடோனா | 20521446 | வவுனியா | தி.சி |
| கீ. சந்திரவதனா | 20521447 | வவுனியா | சா.சி |
| டொ. ஜொய்சி | 20521448 | பம்பைமடு | தி.சி |
| வோ. அஞ்சலின் ஜெனற் | 20521449 | பம்பைமடு | தி.சி |
| போ. விக்ரோறியா | 20521450 | வவுனியா | தி.சி |
| யே. எலிசபெத் | 20521451 | பம்பைமடு | சா.சி |
| P. றொபட் றேகன் | 20521453 | பம்பைமடு | சா.சி |
| தா. தவநிதி | 20521454 | கோமரசன்குளம் | சா.சி |
| ப. கிறிஸ்ரீன் பிறேமினி | 20521455 | செட்டிகுளம் | சா.சி |
| ச. சதாலோஜினி | 20521456 | ஆட்காட்டிவெளி | சா.சி |
| ச. றொமோல்ட் | 20521457 | அடம்பன் | சா.சி |
| அ. இனற்றொசானி | 20521458 | அடம்பன் | சா.சி |
| ய. ஒஸ்ரினா | 20521460 | அரிப்பு | சா.சி |
| ம. யூட் அமல்ராஜ் | 20521461 | கற்கிடந்தகுளம் | சா.சி |
| செ. விஜயலலிதா | 20521463 | அளவக்கை | தி.சி |
| பி. நிரூஷா | 20521464 | அளவக்கை | தி.சி |
| ஜே. வியூறிதா லூயிஸ் | 20521465 | நானாட்டான் | சா.சி |
| எ. மேரி ஜென்சி | 20521466 | நானாட்டான் | சா.சி |
| அ. ஸ்ரனிஸ்ரெலா | 20521467 | நானாட்டான் | தி.சி |
| அ. வினோதினி | 20521468 | நானாட்டான் | சா.சி |
| ம. இமல்டா வதனி | 20521470 | வவுனியா | தி.சி |
| செ. இ.மறிஸ்ரெலா றோச் | 20521473 | மடு | தி.சி |
| சு. கிருபதர்சினி | 20521478 | பெ.பண்டிவிரிச்சான் | சா.சி |
| A. மரிய ஜெனுவி | 20521479 | தலைமன்னார் | சா.சி |
| ஆர். மேரி. எட்வீசியா றோச் | 20521481 | பள்ளிமுனை | தி.சி |
| அ. சுபாஜினி | 20521482 | வஞ்சியன்குளம் | தி.சி |
| ச. லூட் ஜெனி பிறெற் | 20521483 | வஞ்சியன்குளம் | தி.சி |
| செ. கிறிசில்டா றொசாந்தி | 20521485 | பண்டிவிரிச்சான் | சா.சி |
| பெ. ஐறின் மஞ்சுளா | 20521487 | செட்டிகுளம் | சா.சி |
| யோ. அ. லிமாறதனி | 20521489 | அடம்பன் | சா.சி |
| திருமதி.நி.மே.டென்சி பெர்னான்டோ | 20521493 | தலைமன்னார் | தி.சி |
| திருமதி. கி. கிறிசாந்தினி லியோன் | 20521495 | தலைமன்னார் | தி.சி |
| S. யேசுநேசன் டயஸ் | 20521496 | மன்னார் | தி.சி |
| அ. பமிலா தர்ஷினி | 20521497 | மன்னார் | தி.சி |
| R. பபியோலா | 20521498 | மன்னார் | தி.சி |
| A. அலன்றோஸ் பெரேரா | 20521499 | பள்ளிமுனை | தி.சி |
| D.A.F. ஜெயஶ்ரீ | 20521500 | பள்ளிமுனை | தி.சி |
| கி. ஜெயசெல்வி | 20521502 | உயிலங்குளம் | சா.சி |
| ஆ. மேரி பிரான்சிஸ் அம்மா | 20521503 | சிலாவத்துறை | சா.சி |
| சி. பிரியாந்தினி | 20521504 | விடத்தல்தீவு | தி.சி |
| டே. கரோலின் கார்த்திகா | 20521505 | ஆட்காட்டிவெளி | தி.சி |
| யோ. வினோஜி | 20521506 | இலுப்பைக்குளம் | தி.சி |
| அ. வினித்தா | 20521507 | வவுனியா | தி.சி |
| அ. அன்ரனிற்றா | 20521508 | வவுனியா | தி.சி |
| யே. ஜெயசுதா | 20521509 | பம்பைமடு | சா.சி |

### மறையாசிரியர் தேர்வு - 3, - 2005

| பெயர் | சுட்டெண் | பங்கு | பெறுபேறு |
|---|---|---|---|
| ம. செபமாலை | 20531292 | தேவன்பிட்டி | சித்தி |
| ச. சேலி வின்ரஸ் | 20531294 | வவுனியா | சித்தி |
| யே. எவிஸ் சுவிற்றா | 20531295 | வவுனியா | சித்தி |
| ச. ஜெயறொக்சினி | 20531296 | வவுனியா | சித்தி |
| தே. நொயலின் | 20531297 | பம்பைமடு | சித்தி |
| செ. மேரி சுகந்தினி | 20531298 | பம்பைமடு | சித்தி |
| ம. சகாய வின்சலா | 20531300 | பெ. கோமரசன்குளம் | சித்தி |
| அ. அலெக்ஸ் யூட் | 20531302 | செட்டிகுளம் | சித்தி |
| கொ. தயாளராஜன் | 20531303 | அளவக்கை | சித்தி |
| சூ. கமிலஸ் | 20531304 | செட்டிகுளம் | சித்தி |
| சூ. அன்ரனிற்றுவுஷா | 20531305 | செட்டிகுளம் | சித்தி |
| மு. புவன மோகன் | 20531306 | அடம்பன் | சித்தி |
| க. மேரி ஜென்சா | 20531308 | அடம்பன் | சித்தி |
| ச.ம. செபஸ்ரியம்மா | 20531309 | அடம்பன் | சித்தி |
| செ. மேரி மாக்கிறேட் | 20531313 | கற்கிடந்தகுளம் | சித்தி |
| பி. றோசலினா | 20531314 | முருங்கன் | சித்தி |
| அ. மேரி வனிதா | 20531315 | அளவக்கை | சித்தி |
| தொ. மேரி மெஜிற்றா | 20531316 | அளவக்கை | சித்தி |
| சூ. மெலானி | 20531317 | அளவக்கை | சித்தி |
| ஜெ.மே.பி.நவந்திமணி | 20531318 | அளவக்கை | சித்தி |
| அ. றெமிஜியஸ் | 20531319 | அளவக்கை | சித்தி |
| அ.அனெற்றாக்கிளி குரூஸ் | 20531320 | நானாட்டான் | சித்தி |
| செ. சசீஸ்ரெலா | 20531322 | உயிலங்குளம் | சித்தி |
| அ. மேரி யுஸ்ரீனா | 20531323 | வஞ்சியன்குளம் | சித்தி |
| சீ. சந்தியோகு | 20531324 | வஞ்சியன்குளம் | சித்தி |
| ஞா. பி. ஜீவதி | 20531325 | வஞ்சியன்குளம் | சித்தி |
| லூ.யூ.செல்வராணி சோசை | 20531326 | வங்காலை | சித்தி |
| அ. பியூலா குரூஸ் | 20531327 | மன்னார் | சித்தி |
| பெ. மிதிலா | 20531328 | மன்னார் | சித்தி |
| இ. டயாளினி | 20531329 | மன்னார் | சித்தி |
| லோ. யூட் பெனசியா | 20531331 | மன்னார் | சித்தி |
| அ. யோகேஸ்வரி டயஸ் | 20531332 | தாழ்வுபாடு | சித்தி |
| S.L. சொர்ணதா குரூஸ் | 20531333 | தாழ்வுபாடு | சித்தி |
| S. எயூஸ்ரா பானு பெரேரா | 20531334 | தாழ்வுபாடு | சித்தி |
| J. ஜான்சி பறுனாந்து | 20531335 | பேசாலை | சித்தி |
| C. சுகந்தினி குரூஸ் | 20531336 | பேசாலை | சித்தி |
| ஞா. சசிப்பிரியா | 20531343 | பம்பைமடு | சித்தி |
| R. P. மரிய கொறற்றி றோச் | 20531348 | பள்ளிமுனை | சித்தி |
| சிஸ். சா. சாந்தினி | 20531349 | பள்ளிமுனை | சித்தி |
| சிஸ். ம. கத்தரீனம்மா | 20531350 | நானாட்டான் | சித்தி |
| சிஸ். வசந்தி | 20531354 | தலைமன்னார் | சித்தி |
| சிஸ். ஞா. மரியகிருதா | 20531356 | மன்னார் | சித்தி. |

மறையாசிரியர் தேர்வில் பங்கேற்ற அனைவருக்கும் மற்றும் சித்திபெற்றோருக்கும் எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் மகிழ்வோடு தெரிவிக்கின்றோம். மறையாசிரியர்களே, இத்தேர்வானது உங்கள் பணி வாழ்வை இன்னும் ஆழப்படுத்துவதாகவும் செழுமைப்படுத்துவதாகவும் அமைய வேண்டுமென ஆசிக்கின்றோம்.

### இலங்கை கிளரீசியன் ....

5ம் பக்கத் தொடர்ச்சி

இவர் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை யாழ். தூய பத்திரிசியார் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை கண்டி தூய அந்தோனியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

மட்டக்கலை தூய அந்தோனியார் பங்கைச் சார்ந்த திரு. சூசை சிங்கராயர் திருமதி றோஸ்மேரி தம்பதிகளின் மகனாக ஸ்டீபன் 29.05.1976ல் பிறந்தார். இவர் தனது ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வியை மட்டக்கலை தூய கூம்ஸ் வித்தியாலயம், தலவாக்கலை தூய பத்திரிசியார் கல்லூரி மற்றும், கண்டி தூய அந்தோனியார் கல்லூரி ஆகியவற்றில் நிறைவுசெய்தார்.

இம்மூன்று அருட்சகோதரர்களும் ராகமை – வெலிசறையில் உள்ள கிளரீசிய துறவற இல்லத்தில் 1994ம் ஆண்டு தம்மை இணைத்துக்கொண்டதோடு, தமது குருத்துவப் பயிற்சியை 1998ம் ஆண்டு, கண்டி தூய இலங்கை அன்னை தேசிய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கற்கையுடன் ஆரம்பித்தார்கள்.

2003ம் ஆண்டு குருத்துவக் களப்பயிற்சியை நீர்கொழும்பு தூய கிளாரட் குருமடம், பதுளை – மடுல்சீமை பங்கு மற்றும் யாழ்ப்பாணம் கிளாரட் அகம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொண்டு, 08.09.2003 ல் தமது நித்திய வா்த்தைப்பாட்டை செய்துகொண்டார்கள். 2005 இல் தமது இறையியல் கல்வியை நிறைவுசெய்து, 06.09.2005 இல் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார்கள். இவர்கள் தமது திருத்தொண்டருக்கான பணியை கடந்த 7 மாதமளவாக வெவ்வேறு மறைமாவட்டங்களில் ஆற்றி வந்துள்ளனர்.

நாட்டின் இன்னல்கள் மத்தியில் குருக்களாக திருநிலைப்படுத்தப்படவிருக்கும் இவர்களுக்காக நமது செபங்களில் வேண்டிக்கொள்வோம்.

29.04.2006 சனிக்கிழமை புதிய குரவர் சதீஸ் தனது முதற் திருப்பலியை நீர்கொழும்பு தூய செபஸ்ரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார். 30.04.2006 ஞாயிற்றுக்கிழமை புதிய குரவர் றொயிஸ்டன் தனது முதல் திருப்பலியை கொச்சிக்கடை தோப்பு தூய பிலிப்பு நேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார். 07.05.2006 ஞாயிற்றுக்கிழமை புதிய குரவர் ஸ்டீபன் தனது முதல் திருப்பலியை மட்டக்கலை தூய அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### யேசுவிடம் நான் எதைக் கேட்பேன்?

பரமனே உன்னிடம் எதைக் கேட்பேன்?..
இழந்துவிட்ட மனிதத்தையா?
இழக்கப்போகும் எம் வாழ்வையா?
உன்னிடம் எதைக் கேட்பேன் இறைவா?...

ஆடை இழந்த எம்மவர்க்கு ஆடையையா - இல்லை
வாடையில் வாடும் அவனுக்கு ஆதரவா - அன்றேல்
பசியோடு இருப்பவனுக்கு பல்சுவை உணவையா?
ஊனமுற்ற உறவுகளுக்கு உதவிக்கரமா - இல்லை
சிறையில் வாடும் என் சோதரனுக்கு சீரான வாழ்வையா?
பரமனே பாவி யான் எதை யாசிப்பேன் உன்னிடம்....?

கருவினிலே உருவாகும் சிசுக்களின் வாழ்வையா? இல்லை
தூளிகளில் துயில்கொள்ளும்
துளிர்களின் நாளைய விடியலையா?
கருவினிலே கல்லறை கட்டும் மதிகெட்ட ஜடங்களுக்கு
உயிர்கள் மேல் அன்பைக் கேட்பேனா?...
இறைவா! எதைக் கேட்பேன் உன்னிடம்....?

நீதிக்காக மதுரையை எரித்த மங்கையின்
பெண்மையையா? - இல்லை
போதையில் மலிந்த பேதையரின் கற்பையா – அன்றேல்
தூய்மையில் அன்புக்கு தடைபோடும்
தரம் கெட்ட பிறவிகளுக்கு அன்பின் அர்த்தத்தையா?
எதை நான் உன்னிடம் கேட்பேன்...

ஓ! தேவனே!
சுறணை கெட்டு சழல் கதிரைகளில் உலாவரும்
ஆணவ உண்டியல்களில் உயிர்துடிப்புள்ள உண்மைகள்
பதுக்கப்படுவது ஏன்?...ஆம்! மனிதத்தை மண்டியிடவைத்து
ஆணவத்தை ஆட்சிமேடை ஏற்றிவிட்டு
அதைக் கண்டு ஆலவட்டம் விரிக்கும்
அடங்காத காளைகளுக்கு பாடம் சொல்ல
உறங்கும் உண்மையை உற்சாகமாக தட்டி எழுப்பும்
தைரியமுள்ள மனித இதயங்களைக் கேட்கிறேன்
அங்கே குடிகொள்ள உன்னைக் கேட்கிறேன்.

*தொகுப்பு: கு. மரிய தாரணி, அன்பின் சகோதரிகள் இல்லம், கோமரசன்குளம், வவுனியா.*

### சிலுவை .... மீட்பை நோக்கி ....

புவிதனில் பாவங்கள் சூழ
பாவிகள் படையெடுக்க
பரிதாபமாகக் கிடக்குது பார்.
*(பார் என்பது இங்கு புவி)*

அன்புள்ளம் கொண்டதினால்
ஆண்டவரின் அனுமதியால்
அனைவரையும் மீட்க
ஆவலுடன் வருகின்றார்
ஒரே மகன் கிறீஸ்து.
சிலுவையே சித்தமென
திடங்கொண்டு
குருதியை மட்டுமின்றி
உடலையும் உவந்தளித்த
உத்தம புருசன்
கைகளை விரித்து
கல்வாரியில் கவனிப்பாரின்றி
தொங்குகின்றார்.

மானிடத்தை மீட்க
மானத்தைக் காக்க
மங்களத்தை அளிக்க
அமங்களமானார் மீட்பர்.

சமாதானம் சமாதானம் என்று
சத்தமிட்டவர்களுக்கு
கெட்டியான சிலுவை
சுத்தியான சமாதானத்தை
நேர்த்தியாக அளிக்கின்றது
அண்டத்திலுள்ள
மானிடத்திற்கு இப்போது.

*திரு.எம். இக்னேசியஸ் குருஸ் (ஆசிரியர்), இல. 97, பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.*

தொடர் கட்டுரை – அங்கம் 37

## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன்



### பகுதி II தவக்கால பன்முக மரபுகள்

**மேடையமைப்பு**

இக்காலத்தில் இருந்த மேடைகள் மரத்தினாலேயே அமைக்கப்பட்டிருந்தன. நிலத்திலிருந்து சற்று உயர்ந்ததாகவும், ஒரு பக்கமும் அடைக்கப்படாதவையாகவும், மேடையின் நீளத்தைப் போன்றே அளவான அகலத்தைக் கொண்டவையாகவும் காணப்பட்டன. மேடையின் பின்னணியில் வீடு போன்ற அமைப்பு மோட்சத்தைக் குறித்தது.

மேடை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் - பட்டிருந்தது. மேடையின் அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த வீடு போன்ற மறு அமைப்பு நாடக மேடையேற்றத்தின் ஆயத்தங்களுக்காக அமைக்கப்பட்டிருந்தது. இப்பகுதியானது நாடக மேடையிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்ட வேலி போன்ற அமைப்பினால் பிரித்துக் காட்டப்பட்டது. அல்லது நான்கு தூண்களின் மேல் அமைக்கப்பட்ட கூரையைக் கொண்ட பகுதியினால் பிரித்துக் காட்டப்பட்டது.

நரகத்தைக் குறிக்கும் பகுதியின் நுழைவாயில் அருவருப்புக்குரிய, கோர உருவிலான மிருகத்தின் திறந்த வாய் போன்ற அமைப்பாகக் காணப்பட்டது. இக்கொடிய மிருகத்தைப் பிரதிபலிக்கும் சின்னத்தின் வாயே சாத்தானும் - சாத்தானால் கைப்பற்றப்பட்ட ஆவிகளும் நாடக வேளையில் மேடையிலிருந்து வெளியேறுவதற்கும் - நுழைவதற்கும் பயன்பட்டது. மோட்சம் தேவாலய பீடத்தைப் போன்ற தன்மையில் அலங்கரிக்கப்பட்டது.

நாடகத்தின் முன்பு நடிகர்கள் நாடக மேடைக்கு ஒரு பவனியாக வருவர். பவனியில் பக்க வாத்தியம் வாசிப்போர், பாடகர்கள், கட்டியம் கூறுபவர் என்னும் ஒழுங்கு நிலையில் பங்குகொண்டு தமக்கென ஒதுக்கப்பட்ட இடங்களிலேயே அமர்ந்து நடிப்பு வேளையில் மேடைக்குச் சென்று தமக்குரிய பாத்திரத்தை நடித்து மீண்டும் தமக்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்குச் செல்வர். பார்வையாளர்கள் மேடையைச் சுற்றி நின்று பார்ப்பர். அல்லது மேடைக்கு அருகாமையில் வீடுகளின் யன்னல்கள் வழியே பார்ப்பர்.

பிரதான மேடைக்கு அருகாமையில் வேறு சிறிய மேடைகள் அமைக்கப்பட்டு பாலங்கள் போன்ற அமைப்பிலான இணைப்பை ஏற்படுத்தும்போது நாடகமேடை சுற்று வட்ட மேடை போன்ற அமைப்பாகக் காட்சியளித்தது.

**நாடகத்தில் குறியீடு :**

நாடக மேடையின் காட்சியமைப்பும் எளிமையாகவே தோற்றம் அளித்தது. மேலும், மேடையின் ஏனைய பக்கங்களுக்கு காட்சித் திரைகள் இல்லாமையினால் தற்காலத்துக்குரிய தோற்ற அமைப்புக்கள் காணப்படவில்லை. இதனால் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டன.


கிறிஸ்து மலையில் சாத்தானால் சோதிக்கப்பட்ட சம்பவத்தைக் குறிப்பதற்கு பீப்பா வடிவிலான பாத்திரம் நிறுத்தப்பட்டது. (மக்களின் அன்றாட வாழ்வில் பீப்பா வடிவிலான பாத்திரம் மதுபான விற்பனை நிலையங்களில் மதுபான கொள்கலன்களாகப் பயன்பட்டன) இடி முழக்க ஒலியைக் குறிப்பதற்கு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் பயன்படுத்தப்பட்டன. யூதாசினுள் சாத்தான் நுழைந்துவிட்டான் என்பதைக் குறித்துக் காட்டுவதற்கு கறுப்பு நிறச்சிறகுத் தோகை யூதாஸ் வாயில் கட்டிக்கொண்டு பரபரப்புடனும், மனக் கிலேசத்துடனும் சிறகடித்துக் கொண்டு திரிவது குறிக்கின்றது. யூதாஸ் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் காட்சியைக் காண்பிக்க சாத்தான் யூதாசை தூக்கிலிடும் காட்சி இடம்பெறுகின்றது. மேலும் சாத்தான் ஏணி வழியாக மேல் ஏறித் தன்னிடம் இழுத்துக்கொள்ளும் காட்சி அமைப்பும் காண்பிக்கப்பட்டது. நாடகத்தின் ஆரம்பத்திற்கு முன்பே யூதாஸ் ஒரு கறுப்புப் பறவையையும், மிருகத்தின் குடலையும் தன் வயிற்றுப் பகுதி ஆடையினுள் மறைத்து வைத்துக் கொள்வான். சாத்தான் யூதாசின் ஆடையைக் கிழிக்கும்போது பறவை அவனது வயிற்றினுள் இருந்து பறப்பது போன்றும், அவனது குடல் வெளியேறுவது போன்றும் காட்சிகள் அமையும். இந்நிலையில் யூதாசும் - அவனைத் தூக்கிலிட்ட சாத்தானும் கயிறு வழியே நரகத்திற்கு இழுத்துக் கொள்ளப்படுவதாகக் காட்சி அமையும்.

(தொடரும்)

# சிறுகதை

## மன்னிப்பு

ரி. நிலோ, கண்டி.



அது ஒரு அழகான நகரம். அனைத்துமே அமைதியாக நடைபெறுகின்ற ஒரு இடம். அந்த இடத்தில் காணப்படுகின்ற சிறைச்சாலையில்தான் டேவிற் தனது விடுதலையின் நாளை மிகவும் ஆவலோடும் - சந்தோசத்துடனும் எதிர்பார்த்துக் கொண்டு இருந்தான். காரணம் அவனுடைய அன்பு அன்னையை சந்திக்கப் போகின்ற அளவற்ற மகிழ்ச்சி!

ஆம். டேவிற் அவனுடைய பெற்றோருக்கு ஒரே ஒரு பிள்ளை. தமக்கு ஒரே பிள்ளை என்ற காரணத்தினால் அவனது பெற்றோர் அவனுக்குத் தேவையானது அனைத்தையுமே கொடுத்தார்கள். அதனால் டேவிற்றும் எந்தவித கஷ்ரமும் இல்லாமல் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தான்.

இவ்வாறு வளர்ந்து வரும் வாலிப வயதில்தான், புத்தி தடுமாறி, கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து தீய பழக்கங்களுக்கு அடிமையானான். இதனை அறிந்த அவனுடைய அன்புப் பெற்றோர் அவனை எந்த வழியில் திருத்த முடியுமோ, அனைத்து வழிகளையும் கையாண்டனர். ஆனால் அவர்களுக்குக் கிடைத்தது தோல்வியே! நாளுக்கு நாள் அவனுடைய நடைமுறைகள் - பழக்க வழக்கங்கள் திருத்த முடியாத அளவுக்கு அதிகரித்துக்கொண்டே சென்றன. இதனை கண்ணுற்ற அவனது தந்தை, டேவிற்றைத் திருத்திப் பார்க்கக் கூறிய அறிவுரைகள் செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டன.

தினமும் அவன் இரவில் போதையுடன் வீட்டிற்கு வருவதை வழக்கமாக்கியிருந்தான். ஆம், அன்றும் அப்படித்தான், வழக்கமாக அவன் போதையுடன் வீட்டிற்கு வந்தபோது, அவனது தந்தை தன் உரிமைக்கு அவனுக்கு புத்திமதிகளைக் கூறிக் கொண்டிருக்கையில், டேவிற் கோபம் கொண்டு, தந்தையை அடித்து தள்ளிவிட்டபோது, வயதான அவனது தந்தை தட்டுத்தடுமாறி, பின்னால் உள்ள சுவரில் மோதியவர்தான். டேவிற் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கணமே அவரது உயிர் இந்த உலகத்தைவிட்டுப் பிரிந்தது. இதை எதிர்பாராத அவனது தாய் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை. அனைத்துமே அவளது கையைவிட்டுப் போன நிலை.

மோப்பம் பிடித்த காவல் துறையினர் வீட்டை முற்றுகையிட்டனர். டேவிற்றுக்கு அன்று தொடக்கம் சிறையே வீடானது. சிறையில் நாள்களை எண்ணிக் கணக்கிடும் கைதியானான். பெற்ற மனம் பாடுபட்டது. கண்ணீரும் - கம்பலையுமே அவளது அன்றாட உணவாகின. ஒரே தருணத்தில் கட்டிய கணவனையும் - பெற்றெடுத்துப் பாலூட்டி, சீராட்டி வளர்த்த தன் ஒரே மகனே தந்தைக்கு எமனாகியதையும் சிந்தித்து, சிந்தித்து அனலில் இட்ட புழுவாகத் துடித்தாள். ஊரவர்களின் சொல்லம்புகள் ஒருபுறம். பதறினாள், ஆதரவிழந்த நிலையில் அனாதையாகி, தனிமரமாக மீதமிருந்த வாழ்க்கையை வாழ்ந்து வந்தாள்.

சிறை சென்ற டேவிற்றின் போக்குகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. தன்னிலை உணரும் பக்குவம் பெற்றான். தன் வீட்டையும் - இன்றைய நிலைமையினையும் - கைவிடப்பட்டு ஒரு நண்பர்களும் காண வராத நிலைமையும், தான் தவறிழைத்துவிட்டதையும் எண்ணி, உணர்ந்து மனம் புழுங்கினான். வருந்தினான். கதறி அழுதான். தன் மனப் பாரங்களை எல்லாம் கண்ணீரால் கழுவினான். தன்னைப் பெற்று, கண்ணின் மணிபோல காத்து, உதிரத்தைப் பாலாக்கிய தாய்படும் துயரத்தை மனக் கண்ணால் கண்டு, உள்ளம் குத்துண்டவனாக உதிரக் கண்ணீர் சொரிந்தான். ஒவ்வொரு நாளும் அவனுக்கு கண்ணீரோடு விடிந்து – கவலையோடு முடிவுற்றது. மனம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்பு வேண்டினான்.

இப்படியாக இருண்ட நாட்களின் மத்தியில் தான் விடிவெள்ளியாக அவனது விடுதலை நாள் அறிவிக்கப்பட்டது.

இதை எதிர்பாராத டேவிற்றுக்கு புயலின் நடுவில் சிறு துடுப்பு கிடைத்ததைப் போன்று மகிழ்ச்சி. தன் தாயைப் பார்க்கப்போவதை நினைத்து மனம் ஆனந்தக்கூத்தாடியது. எனினும், அந்தச் சந்தோசம் மின்னல் வந்து போனதைப்போல மறைந்தது.

தன் தாயை தான் எந்த முகத்துடன் சந்திப்பது? துயரங்களையே வாழ்க்கையாக்கி, தனிமரமாகத் தவிக்கும் அவள் என்னை ஏற்றுக்கொள்வாளா? மன்னிப்பாளா? இப்படிப்பட்ட பிள்ளை எனக்கு வேண்டாம் என்று துரத்திவிடுவாளா?

அவளது மனநிலையை துப்புத் துலக்க கடிதத்தை தூதனுப்பினான். "அம்மா, என்னை மன்னித்துக்கொள்ளம்மா. உனது அன்பையும், பாசத்தையும், சொல்லையும் தட்டிக் கழித்தேன். அத்தோடு என் அப்பாவையும் எனது கையாலே கொலை செய்து, உன்னையும் பரிதவிக்கவிட்ட பாவியானேன். என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாயா? அம்மா, உன்னைத் தவிர, எனக்கு வேறு யார்தான் உண்டு அம்மா? நீ மட்டுமே என்னை மன்னித்து ஏற்றுக்கொள்வாய் என்ற சிறு நம்பிக்கையில்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். ஊரார் பார்வைக்கு நான் கொலைகாரன்தான். ஆனால் நீ என்னைப் பெற்ற குற்றத்திற்காகவாவது மன்னிப்பாயா?

உன்னைத் துன்பப்படுத்தியதை நான் மறக்கவில்லை. உனது துன்பத்தை தினமும் தினமும் நினைத்து வேதனைப்படுகின்ற பாவியானேன் நான். அம்மா என்னை மன்னியம்மா. ஒரு வார்த்தையால் வா என்று சொல்லம்மா. வருகின்ற சனிக்கிழமை நான் சிறையிலிருந்து வருகின்றேன். அம்மா நீ என்னை ஏற்றுக்கொள்கின்றாய் என்றால் நமது வீட்டின் அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் உள்ள மரத்தில் ஒரு வெள்ளைக் கொடி கட்டிவிடு. அதுதான் என்னையும் - உன்னையும் இணைக்கும் சமாதானக் கொடி. அதைப் பார்த்ததும் நான் உன்னைத் தேடி வருகின்றேன்.

*- இப்படிக்கு உன் பாதங்களைக் கண்ணீரால் கழுவக்கூட அருகதையற்ற பாவி மகன்.*

என்று எழுதி கடிதத்தை ஊருக்கு அனுப்பிவிட்டு, தனது விடுதலை நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான் டேவிற்.

நாட்கள் - கிழமைகளாகி மாதங்களாகி அவன் விடுதலை பெறும் நாளும் வந்துவிட்டது. தான் பிறந்து வளர்ந்து - ஓடி விளையாடிய ஊரை நோக்கிப் போகின்றான். அங்கு போய், அந்தக் குறிப்பிட்ட மரத்தைப் பார்க்கின்றான். மரம் முழுவதும் வெள்ளைக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவனது கண்ணுக்கு அவனது அன்னையின் கபடமற்ற, மன்னிக்கும் முகம் பிரகாசித்தது. தனது அன்னை தன்னை ஏற்றுக்கொண்டுவிட்டாள் என்ற சந்தோச வெள்ளம் தாளமாட்டாமல், தனது அன்னையின் முகத்தைப் பார்க்கும் ஆவலுடன், அம்மா என்று கூவியவாறு ஓடுகின்றான் தனது இல்லம் நோக்கி.

வீட்டு வாயில் சனக்கும்பல். அடடா இந்த மக்கள் பெருவெள்ளம் என்னையல்லவா வரவேற்க நிற்கிறது! இவர்களுக்கு மத்தியில் நான் அம்மாவை முதலில் தேட வேண்டுமே! என வீட்டிற்குள் நுழைந்தவன், தான் அழைத்த குரல் கேட்டு ஆசையாக மகனே என்ற குரல் வராததையிட்டு சுற்றும் முற்றும் கண்களால் துலாவினான். அவன் கண்டது அவளது உயிரற்ற உடல்!

அழுதான், புரண்டான். தேற்ற யாருமின்றி, அன்று தாய் தன்னால் அனுபவித்த வேதனையின் முழுப் பாரத்தையும் இன்று இவன் சுமந்தவனாய் கதறினான். தாயின் அன்பை நினைத்து நினைத்துக் கண்ணீர் சொரிந்தான். தன் ஆசைத் தாய், இறந்த காரணம் அறிய அருகில் நின்ற பெரியவரைக் காரணம் கேட்டான். "தம்பி, இந்தத் தாயின் மகன் சிறையில் இருந்து இன்று வருவதாக அறிவித்திருந்தான். அதற்காக இவள் அந்தப் பிள்ளையை ஏற்றுக்கொள்வதன் அடையாளமாக அந்த மரத்தில் அவள் மகிழ்ச்சியில் வெள்ளைக் கொடிகளைக் கட்டிவிட்டு இறங்கியபோது, தவறுதலாக விழுந்தவள்தான் மீண்டும் எழும்பவேயில்லை." என்றார் அந்தப் பெரியவர்.

தன் தாய்க்குத் தான் செய்த குற்றப் பழிக்கு பரிகாரமாக, இன்று அனாதையாக, ஆதரவிழந்து நின்ற டேவிற் தாயின் உன்னதமான, நிகரற்ற அன்பை நினைத்து அதன் அடிச்சுவட்டில் தன் காலடித் தடங்களைப் பதிக்கின்றான் புதுமனிதனாக!



# மீட்புத் திட்டத்தில் மீட்பரின் தாய்

## மாதாவின் வணக்க மாதச் சிறப்புக் கட்டுரை



### விவிலிய அடிப்படை

காதலர் இருவர், ஓர் ஆழமான கிணற்றுக்குள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அதற்குக் காரணம் என்னவென்று, கேட்டதற்கு அவர்கள், 'எங்கள் காதல் மிகவும் ஆழமான காதல்' என்றனர். காதல் மேலெழுந்தவாரியாகவோ, ஆழமானதாகவோ இருக்கலாம். அவ்வாறே மரியன்னையைப் பற்றிய அறிவு மேலெழுந்தவாரியாகவோ ஆழமானதாகவோ இருக்கலாம். மரியன்னையைப் பற்றிய நமது அறிவை ஆழப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"மரியன்னைப் பக்தி முயற்சி எப்போது, யாரால் தொடங்கப்பட்டது? இப்பக்தி முயற்சிக்கு விவிலிய அடிப்படை உண்டா?" என்று பைபிள் போதகர் ஒருவர் ஒருமுறை என்னிடம் கேட்டார். இக்கேள்விகளுக்கு நமது பதில் என்ன?

மரியன்னைப் பக்தி முயற்சி புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திலேயே, அதுவும் வானதூதர் கபிரியேலால் தொடங்கப்பட்டது. அவர்தான் "அருள் மிகப் பெற்றவரே வாழ்க!" (லூக்.1:28) என்று மரியன்னையை வாழ்த்தி, மரியன்னைப் பக்தி முயற்சிக்கு வருகைப் பாடல் பாடினார். அவரை அடுத்து, யூதேயா மலைநாட்டில் வாழ்ந்த எலிசபெத்து, தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு, மரியா "பெண்களுக்குள் ஆசி பெற்றவர்" என்றும், "ஆண்டவரின் தாய்" என்றும், "ஆண்டவரின் வாக்கை நம்பிய மரியா பேறுபெற்றவர்" என்றும் உரத்த குரலில் கூறி, (லூக். 1:39-45) மரியன்னைப் பக்தி முயற்சிக்குத் தியானப்பாடல் பாடினார்.

இறுதியாக, மரியாவே "இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக்.1:47) என்று இறைவாக்கு உரைத்து மரியன்னைப் பக்தி முயற்சிக்கு நன்றிப்பாடல் பாடினார். மரியாவின் இந்த இறைவாக்கைத்தான் எல்லா மக்களும், எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் நிறைவேற்றி வருகின்றனர். மரியாவின் பக்தி முயற்சி முழுக்க முழுக்க விவிலியத்தில் வேரூன்றியது. இயேசுவின் இறுதி விருப்பம், நாம் மரியன்னையை நம் சொந்தத் தாயாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே. யோவான் மரியாவைத் தம் வீட்டில் ஏற்றுக்கொண்டது போலவே, இயேசுவின் ஒவ்வொரு சீடரும் மரியாவைத் தம் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அன்பு செய்யக் கடமைப்பட்டுள்ளனர். (காண். யோவா.19:26-27).

### மீட்பரின் தாய் :

நாம் மேகத்தைப் போற்றுவது அது கொடுக்கும் மழைக்காக; நாம் மரத்தைப் போற்றுவது அது கொடுக்கும் கனிக்காக; நாம் பசுவைப் போற்றுவது அது கொடுக்கும் பாலுக்காக; நாம் தாயைப் போற்றுவது அவர் ஈன்றெடுத்த சேய்க்காக.

அவ்வாறே நாம் மரியாவைப் போற்றுவது அவர் ஈன்றெடுத்த உலக மீட்பராம் இயேசு கிறிஸ்துவுக்காக. மரியாவின் தனிப்பெரும் பெருமை அவர் மீட்பரின் தாய் என்பதே. எலிசபெத்து மரியாவை, "ஆண்டவரின் தாய்" (லூக்.1:42) என்று அழைத்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

### மீட்புத் திட்டத்தில் மரியா

"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே" ஒரு தாயின் முக்கியமான கடமை குழந்தையை ஈன்றெடுத்துக் கொடுப்பது. ஆனால் அத்தோடு அவர் கடமை முடிவதில்லை. அவ்வாறே மரியாவின் கடமை இயேசுவை இவ்வுலகிற்கு ஈன்றெடுத்துக் கொடுத்ததுடன் முடியவில்லை. மீட்பரின் தாய் மரியா மீட்பராம் இயேசு கிறிஸ்துவுடன் இறைவனின் மீட்புத் திட்டத்தில் மிகவும் நெருக்கமாக ஒத்துழைத்தார். அதைப்பற்றி இக்கட்டுரையில் விவிலிய அடிப்படையில் சற்று ஆழமாகவே ஆய்வு செய்வோம்.

### யூதேயா மலைநாட்டில்

"கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" (லூக்.1:37) என்று கூறி, தமது கன்னிமையை இழக்காமலே மீட்பரைக் கருத்தரித்தார். 'கன்னி விசுவசித்தார்; விசுவசித்துக் கருவுற்றார். கிறிஸ்துவை உடலில் கருத்தரிக்கு முன் உள்ளத்தில் கருத்தரித்தார்." (புனித அகுஸ்தீன்).

இயேசுவைக் கருத்தரித்த உடனே மரியா, யூதேயா மலைநாட்டுக்கு விரைந்து சென்று, எலிசபெத்துக்கும் - திருமுழுக்கு யோவானுக்கும் மீட்பரைக் கொடுக்கின்றார். (லூக்.1:39-45). மேலும், கடவுளுடைய வல்ல செயல்களை மரியா தனது புகழ்ச்சிப் பாடலில் பறைசாற்றுகின்றார். (லூக்.1:46-56). மீட்பின் நற்செய்தியை முதன்முதல் பெற்றவரும் மரியா; அந்நற்செய்தியை முதன் முதல் மலைநாட்டில் அறிவித்தவரும் மரியா.

இவ்வாறு திருச்சபையின் நற்செய்திப் பணிக்கு மரியா ஒரு முன்னோடியாகத் திகழ்கின்றார். மரியாதான் முதல் நற்செய்தியாளர். "நற்செய்தியை அறிவிக்க வருவோருடைய பாதங்கள் மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன." (எசா 52:7) என்ற இறைவாக்கின் எதிரொலியை மரியா யூதேயா மலை நாட்டிற்குச் சென்றதில் நாம் கேட்க முடிகிறது.

மேலும், மெசியாவின் வருகையால் இறைவனின் ஏழைகள் மான்போல் துள்ளிக் குதிப்பர் (எசா 35:6) என்ற இறைவாக்கு, திருமுழுக்கு யோவான் மரியாவின் வருகையின்போது, தாயின் வயிற்றிலேயே மகிழ்ச்சியால் துள்ளுவதில் நிறைவேறுவதையும் காண முடிகிறது.

மரியாவின வழியாக, இறைவன் திருமுழுக்கு யோவானுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தார். எனவே, மீட்பின் திட்டத்தில் மரியா இறைவனுக்கும் - மனிதருக்கும் இடையே நிற்கும் ஓர் இணைப்பாளர் என்ற உண்மை இந்நிகழ்ச்சியால் வெளிப்படுகிறது.

### ஞானிகள் வருகையிலே .....

யூத இனத்தைச் சாராத பிற இனத்தைச் சார்ந்த ஞானிகள் கீழ்த்திசையிலிருந்து வந்து, குழந்தை இயேசுவை அதன் தாய் மரியாவுடன் கண்டு, நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கி, காணிக்கை கொடுத்தனர். (மத்.2:1-12)

இந்நிகழ்ச்சியானது பிற இனத்தவரும் மீட்பைப் பெற்று மகிழ அழைக்கப்பட்டுள்ளனர் என்ற மையக்கருத்தை வலியுறுத்தும் அதேநேரத்தில், மரியாவே மீட்பரைப் பிற இனத்தாருக்குக் காட்டுகின்றார் என்பதோடு, மரியா வழியாகவே மனுக்குலம் மீட்பரை நெருங்க முடியும் என்ற உண்மையையும் புலப்படுத்துகிறது. இவ்வாறு மரியா இறைவனுக்கும் - மனிதருக்கும் இடையே ஓர் இணைப்பாளராகத் திகழ்கின்றார்.

### கானாவூர்த் திருமணத்தில்

கானாவூர்த் திருமணத்தில் மரியா, இயேசுவுக்கும் - மனிதருக்கும் இடையே நிற்கின்றார். "திராட்சை இரசம் தீர்ந்து விட்டது" (யோவா 2:3) என்று மரியா கூறுகிறார். இதன் மூலம் மரியா மனிதரின் தேவைகளை உணர்ந்து செயல்படுகிறார் என்பதும், மனிதரின் தேவைகளை இயேசு கிறிஸ்துவின் மீட்புத் திட்டத்திற்குள் கொண்டு வருகிறார் என்பதும் தெளிவாகிறது. மேலும், கானாவூர்த் திருமணத்தில் இயேசுக் கிறிஸ்து தமது மாட்சிமையை வெளிப்படுத்த (யோவா 2:11) மரியாவே மூல காரணமாகத் திகழ்கிறார் என்பதையும் நாம் மறுக்க முடியாது.

கானாவூர்த் திருமணத்தில் மரியா பணியாளர்களிடம், "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவா.2:5) என்கிறார். இதுதான் மரியாவின் இறுதி விருப்பமும் கட்டளையுமாகும். இயேசு விண்ணகம் எழுந்து செல்வதற்கு முன், தம் சீடர்களிடம், "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மத்.28:20) என்கிறார். இயேசுவின் இறுதிக் கட்டளையும், மரியாவின் இறுதிக் கட்டளையும் ஒத்திருப்பது நமது கவனத்தை ஈர்க்காமல் இருக்க முடியாது.

மரியா இறைவனின் வார்த்தையை ஏற்றவர் மட்டுமல்லர்; அதைச் சீரிய செம்மனத்தில் பதிய வைத்துத் தியானித்தவர். அதை யூதேயா மலைநாட்டிற்கு எடுத்துச் சென்றவர். இவ்வாறு மரியா, இறைவார்த்தையைக் கடைப்பிடிக்கும் கட்டளையைக் கொடுப்பவராகவும் திகழ்கிறார். இறைவனின் மீட்புத் திட்டத்தில் கடவுளையும், மனிதரையும் இணைக்கும் பாலமாகச் செயல்படுகின்றார்.

### சிலுவை அடியிலே .........

மீட்பின் திட்டத்தில் மரியாவின் பங்கு சிலுவை அடியில் தனது உச்சக்கட்டத்தை அடைகிறது. சிலுவை அருகில் நின்று கொண்டிருந்த மரியா (யோவான் 19: 25) புதிய ஏவாளாகக் காட்சியளிக்கின்றார். மனித குலத்தின் முதல் பெண்ணான ஏவாள் இறைவனின் வார்த்தையை ஏற்க மறுத்து, விலக்கப்பட்ட மரத்தின் கனியை உண்டு, பாவ நஞ்சைப் பாரில் புகுத்தினார். ஆனால் மரியாவோ, சிலுவை மரத்தடியில் நின்று, விசுவாசக் கீழ்ப்படிதலுடன் இறைவனின் திட்டத்தை முழுமையாக ஏற்று, தமது திருவயிற்றின் கனியான இயேசுவை உலக மீட்பிற்காக மனமுவந்து ஒப்புக் கொடுத்து, பாவ நஞ்சை எடுத்தார்.

ஏவாள் நம்மைக் கெடுத்தார்; மரியா நம்மை உய்வித்தார். அழிவது பெண்ணாலே என்பதை உண்மையாக்கினார் ஏவாள். ஆவது பெண்ணாலே என்பதை உண்மையாக்கினார் மரியா.

சிலுவையில் தொங்கிய இயேசு கிறிஸ்து, மரியாவைப் 'பெண்ணே' (யோவா 19:26) என்றழைத்தது மரியாதைக் குறைவு அன்று. மாறாக, தொடக்கநூலில் வருகின்ற பெண்ணுடனும் (தொ. நூ 3:15). திருவெளிப்பாடு நூலில் வருகின்ற பெண்ணுடனும் (தி.வெ.12:1) யோவான் மரியாவைத் தொடர்புபடுத்தியும் - வேறுபடுத்தியும் காட்டுகின்றார்.

மரியா வித்தியாசமான பெண், தனித்தன்மையான பெண், புரட்சிகரமான பெண், புதுமைப் பெண், புதிய ஏவாள். இவ்வாறு மீட்பின் வரலாற்றின் தொடக்கத்திலும் இறுதியிலும் மரியா நிற்பதை நாம் காணமுடிகிறது.

### ஆவியாரின் வருகையிலே

இறைமகன் மனித அவதாரம் எடுத்த நேரத்திற்கும் - திருச்சபை பிறந்த நேரத்திற்கும் ஓர் அற்புதமான தொடர்பு உள்ளது. இத் தொடர்பை ஏற்படுத்தும் இணைப்புச் சங்கிலியாக திகழ்பவர் மரியா. இயேசு கிறிஸ்துவின் பிறப்பும் - திருச்சபையின் பிறப்பும் தூய ஆவியாரின் செயல்களாகும்.

தூய ஆவியாரின் வல்லமையால் இயேசுவை ஈன்றெடுத்த மரியா, அதே தூய ஆவியாரால் திருச்சபை ஜெருசலேமில் மாடி அறையில் பிறப்பதற்கும் தம் மன்றாட்டால் துணை நிற்கிறார். (திப. 1:14) என்பதை நாம் மறுக்க முடியாது. இயேசுக் கிறிஸ்து என்னும் மறைபொருளில் உடனிருக்கும் மரியா அவரது மறையுடலாகிய திருச்சபை என்னும் மறைபொருளிலும் உடனிருக்கிறார்.

தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட மரியா மீட்பின் நற்செய்தியை அறிவிக்க யூதா மலை நாட்டிற்கு விரைந்து சென்றார். அவ்வாறே தூய ஆவியாரால் நிரப்பப்பட்ட திருத்தூதர்களும் மீட்பின் நற்செய்தியை மக்களினத்தார் அனைவருக்கும் அறிவிக்கின்றனர். நற்செய்தி அறிவிப்புப் பணியில் கன்னியாம் மரியா கன்னியாம் திருச்சபைக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார் என்பதை நாம் உணர முடிகிறது.

### மெய்மறந்து ...

காதலர் இருவர் பொய் பொய்யாகப் பேசுகின்றனர். ஏனெனில் அவர்கள் மெய்மறந்து பேசுகின்றனர். இறைவனின் மீட்புத் திட்டத்தில் மீட்பரின் தாய் எவ்வாறு இறைவனுடன் ஒத்துழைத்துள்ளார் என்பதை விவிலிய மற்றும் இறையியல் அடிப்படையில் ஆழமாக ஆய்வு செய்யும்போது, உண்மையிலேயே நாம் மெய்மறந்து நிற்கின்றோம். நம் மெய்சிலிர்க்கின்றது.

மரியா கடவுள் நமக்குக் கொடுத்துள்ள மாபெரும் சொத்து, ஒப்பற்ற முத்து. தன்னிகரில்லாத தனிப் பெருங்காவியம். இக்காவியத்தைப் படிக்கும்போது நமது எண்ணமெல்லாம் இனிக்கிறது. நமது உள்ளம் மலருகிறது. நமது வாழ்வு உயர்கிறது.

### இரண்டு பேர் எதற்கு?

ஒருமுறை ஒரு சிறுவன் என்னை மிகவும் செல்லமாக, உரிமையுடன் 'தாத்தா' என்றழைத்தான். அவனிடம், "நான் உன் வீட்டிலே இருக்கலாமா?" என்று கேட்டதற்கு அவன், "எங்க வீட்டிலே ஒரு தாத்தா இருக்கிறார். இரண்டு தாத்தா தேவையில்லை; நீங்க போங்க" என்று கூறிவிட்டான்.

ஒரு வீட்டிலே ஒரு தாத்தாவே போதும்; இரண்டு தாத்தாக்கள் தேவையில்லை. அவ்வாறே மானிட மீட்பிற்கு இயேசு இருக்க மரியா தேவையில்லை. இயேசு (1 திமோ 2:5), மரியா என்னும் மற்றோர் இணைப்பாளர் தேவையா? என்ற கேள்வி எழுகிறது. இக்கேள்விக்கு இரண்டாம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு பதில் கூறியுள்ளது. (திருச்சபை எண் 60).

1. மரியாவின் இணைப்பாளர் பணி இயேசு கிறிஸ்துவின் இணைப்பாளர் பணிக்கு நிகரானது அன்று; அவரின் பணி ஒரு கட்டாயத் தேவையுமன்று. இறைவன் தாமாகவே விரும்பி, மரியாவை மீட்புப் பணியில் ஒத்துழைக்கத் தெரிந்துகொண்டார்.

2. மரியாவின் இணைப்பாளர் பணி இயேசுவின் இணைப்பாளர் பணியிலிருந்து பிறந்தது. அதையே முற்றிலும் சார்ந்திருப்பதால், அது இயேசு கிறிஸ்துவின் இணைப்பாளர் பணியை மறைக்கவோ, குறைக்கவோ செய்வதில்லை. மாறாக, அதை இன்னும் மிகவும் தெளிவாகவே காட்டுகின்றது.

3. மரியாவின் இணைப்பாளர் பணி இறைமக்கள் கிறிஸ்துவுடன் கொண்டுள்ள நேர்முக ஒன்றிப்பை எவ்வகையிலும் தடை செய்வதில்லை. மாறாக, அதைப் போற்றி வளர்க்கிறது.

### தனித்தன்மை :

எல்லாப் புனிதர்களுமே மீட்பின் திட்டத்தில் கடவுளுடன் ஒத்துழைக்கின்றனர். "நாங்கள் கடவுளின் உடன் உழைப்பாளர்கள்" (1கொரி 3:9) என்று புனித பவுல் கூறியுள்ளார்.

அப்படியானால் மரியாவின் இணைப்பாளர் பணியின் தனித்தன்மை என்ன? மீட்பரின் தாய் என்ற முறையில் மரியாவின் இணைப்பாளர் பணி அவருடைய தாய்மையுடன் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளது. அது மீட்பரின் தாய்க்குரிய ஓர் அற்புதமான அம்சத்தைக் கொண்டுள்ளது. இந்த அம்சம்தான் மரியாவின் இணைப்பாளர் பணியை மற்றவர்களின் இணைப்பாளர் பணியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. மரியாவின் இணைப்பாளர் பணி இயேசுவின் இணைப்பாளர் பணியிலிருந்து கீழ்நிலையில் உள்ளது. ஆனால், மற்றப் புனிதர்களின் இணைப்பாளர் பணிக்கு உயர்நிலையில் உள்ளது.

### நம் வாழ்வில் மரியா

ஒருவன் தன் நண்பனிடம், "என் அப்பா எந்தத் தலைப்பைக் கொடுத்தாலும் அதைப்பற்றி ஒரு மணி நேரம் தங்கு தடையின்றி பேசுவார்" என்று பெருமையுடன் சொன்னார். அதற்கு அவன் நண்பன், "இது என்னடா பிரமாதம்! எங்க அம்மா தலைப்பே இல்லாமல் மூன்று மணிநேரம் மூச்சுவிடாம பேசுவாங்க" என்று மார்தட்டிக் கூறினான்.

ஆம், நாம் தலைப்பின்றி, வெட்டிப் பேச்சுப் பேசி, நமது நேரத்தையும் வாழ்வையும் வீணாக்கிக்கொண்டிருக்கிறோம். இந்நிலையில் மரியா நம் வாழ்வுக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார்.

மரியாவைப் பின்பற்றி விசுவாசக் கீழ்ப்படிதலுடன் இறைவனுடைய மீட்புத் திட்டத்தில் ஒத்துழைக்க நாமும் அழைக்கப்பட்டுள்ளோம்.

நாசரேத்தூர் மரியாவைப் பின்பற்றி, இறைவனிடம் முழுமையாகச் சரணடையலாமே! கீழ்த்திசை ஞானிகளுக்குக் குழந்தை இயேசுவைக் காட்டிய மரியாவைப் பின்பற்றி, நாமும் பிறர் தேவைகளைக் குறிப்பறிந்து நிறைவேற்றி மனித நேயத்தை வளர்க்கலாமே! சிலுவையடியில் நின்று கொண்டிருந்த மரியாவைப் பின்பற்றி, நமது அழைத்தலில் இறுதி வரை உறுதியாக நிற்கலாமே! மாடி அறையில் கூடிச்செபித்த மரியாவைப் பின்பற்றி, உலகெல்லாம் தூய ஆவியால் நிரப்பப்பட மன்றாடலாமே!

இவ்வாறு அனைத்து நிலைகளிலும் மரியாவைப் பின்பற்றி, வாழ்ந்தால், மரியாவின் இணைப்பாளர் பணியில் நாமும் உண்மையிலேயே பங்கேற்கலாம். மரியாவைப் போன்று இறைவன் நம்மையும் அழைக்கிறார். அவருக்கு ஏற்புடையவராக்குகிறார். அவரது மாட்சிமையில் பங்களிக்கின்றார் (உரோமை 8:28-30).

**மரியாவைப் போற்றுவோம்! மரியாவைப் பின்பற்றுவோம்!**

அருள்திரு. Y. இருதயராஜ், பேராசிரியர்,
பவுல் இறையியல் கல்லூரி, திருச்சி.

# மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

மன்னார் **மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள்** Mannar

## பங்கு ரீதியில் மறையாசிரியருக்கான உருவாக்கற் பயிற்சி

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள மறையாசிரியர்களுக்கு பங்கு ரீதியான உருவாக்கற் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. மறைக்கல்வி நிலையக் குழுவினர் பங்குகளுக்குச் சென்று இந்தப் பயிற்சியை வழங்கி வருகின்றனர்.

அருட்சகோதரி பெனிக்னஸ், நிரந்தர மறையாசிரியர்கள் திருவாளர்கள் சவிரி, மரிய செல்வன், செபஸ்ரியாம்பிள்ளை, கென்றி ஆகியோர் இப்பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

மறையாசிரியரின் வாழ்வு, பணி, அழைப்பு, ஆன்மீகம், சவால்கள், பாடஆயத்தம், கற்பிக்கும் முறைகள் ஆகிய பல விடயங்கள்ளை உள்ளடக்கியதாக இந்த மறையாசிரியர் உருவாக்கற் பயிற்சி அமைகின்றது. இப்பயிற்சி மூலம் தமக்குப் புதிய தெளிவும் உற்சாகமும் கிடைப்பதாக பயிற்சி பெற்ற மறையாசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் பங்குகளில் இடம்பெற்ற பயிற்சி பற்றிய விபரம் வருமாறு :

**ஏப்ரல் 4ந் திகதி – விடத்தல்தீவு**
**ஏப்ரல் 8ம் திகதி – இலுப்பைக்குளம்**
**ஏப்ரல் 19ம் திகதி – பண்டிவிரிச்சான்**
**ஏப்ரல் 28,29ம் திகதிகள் – பள்ளிமுனை**

## தன்னார்வப் பணியாளர்களுக்கான தியானமும் ஒன்றுகூடலும்

கடந்த பெப்ரவரி மாதம் 24ம், 25ம் திகதிகளில் (வெள்ளி, சனி) மன்னார் மறைமாவட்டத்திலுள்ள அனைத்து தன்னார்வப் பணியாளர்களுக்குமான ஒன்றுகூடல் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. இதில் 125 தன்னார்வப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

24ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு செபவழிபாட்டுடன் இவ் ஒன்றுகூடல் ஆரம்பமாகியது. ஆரம்ப நிகழ்வுக்கு குரு முதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார் வருகை தந்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து அருட்சகோதரி தியோனி அவர்கள் தன்னார்வப் பணியாளர்கள் குடும்பத்தில், பங்கில், மறைமாவட்டத்தில், எவ்வாறாக செயலாற்ற வேண்டும் என்பதை எடுத்து விளக்கினார். 2ம் நாள் காலையில் மறைக்கல்வி இயக்குனர் அருட்பணியாளர் நேசன் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றினார்.

தொடர்ந்து அருட்சகோதரி கிறிஸ்ரபெல் அவர்களினால் *செவிமடுத்தல்* பற்றிய உரை இடம்பெற்றது. பின்னர் குழுக்கலந்துரையாடலும், சாட்சியங்களும் இடம்பெற்றன. இறுதியாக தவக்காலப் பணித்திட்டங்கள் தீட்டப்பட்டு பகல் 1.30 மணியளவில் இவ்வொன்றுகூடல் நிறைவுபெற்றது.

## மறைக்கல்வி நிலையக் குழுவினரின் பாடசாலைத் தரிசிப்புக்கள்

மறைக்கல்வி நிலையக் குழுவினர் பாடசாலைச் சந்திப்புக்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். பாடசாலைகளில் கிறிஸ்தவ சமயக் கல்வியின் நிலைப்பாடு, கிறிஸ்தவ பாடநூல் விநியோகம், கிறிஸ்தவ பாட ஆசிரியர் நியமனம் போன்ற தேவைகள் இனம்காணப்படுகின்றன. கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் தரிசிக்கப்பட்ட பாடசாலைகளின் விபரம் வருமாறு :

**பள்ளிமுனைப் பங்கு - மார்ச் 2**
மன்/ புனித லூசியா மகா வித்தியாலயம்.

**வங்காலைப் பங்கு - மார்ச் 2**
மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம்.

**தலைமன்னார் பங்கு - மார்ச் 6**
மன்/ புனித லோறன்ஸ் றோ.க.த.க. பாடசாலை.
மன்/ தலைமன்னார் (ஸ்ரேஷன்) அ.த.க. பாடசாலை.
மன்/ தலைமன்னார் பியர் அ.மு.க. பாடசாலை.

**கீளியன்குடியிருப்பு பங்கு - மார்ச் 6, 7**
மன்/ துள்ளு குடியிருப்பு றோ.க.த.க. பாடசாலை.
மன்/ கட்டுக்காரன் குடியிருப்பு றோ.க.த.க. பாடசாலை.

**பேசாலை பங்கு - மார்ச் 7**
மன்/ பத்திமா மத்திய மகா வித்தியாலயம்.
மன்/ சென் மேரிஸ் பெண்கள் வித்தியாலயம்.
மன்/ சிறுத்தோப்பு றோ.க.த.க. பாடசாலை

**தோட்டவெளி பங்கு - மார்ச் 15**
மன்/ கரிசல் றோ.க.த.க. பாடசாலை.
மன்/ ஓலைத்தொடுவாய் றோ.க.த.க. பாடசாலை.
மன்/ எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம்.
மன்/ எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியாலயம்.
மன்/ தாராபுரம் அல்மினா மத்திய மகா வித்தியாலயம்.
மன்/ தோட்டவெளி அ.த.க. பாடசாலை.
மன்/ புதுக்குடியிருப்பு அ.மு.க. பாடசாலை.

**தாழ்வுபாடு பங்கு மார்ச் 15**
மன்/ புனித வளனார் றோ.க. த. வித்தியாலயம்.

**மன்னார் பங்கு - மார்ச் 20, 21**
மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை.
மன்/ புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை.
மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி. (தேசிய பாடசாலை)
மன்/ அல். அஸ். ஹார். மகா வித்தியாலயம்.
மன்/ எழுத்தூர் றோ. க. த. க. பாடசாலை.

**தேவன்பிட்டி பங்கு - ஏப்ரல் 3**
மன்/ தேவன்பிட்டி றோ.க.த.க. பாடசாலை.
மன்/ இலுப்பக்கடவை அ.த.க.பாடசாலை.
மன்/ மூன்றாம்பிட்டி அ.த.க.பாடசாலை.
மன்/ வெள்ளாங்குளம் அ.த.க. பாடசாலை.

**விடத்தல்தீவு பங்கு - ஏப்ரல் 4**
மன்/ பெரியமடு மகா வித்தியாலயம்
மன்/ கள்ளியடி அ.த.க.பாடசாலை
மன்/ கோவிற்குளம் அ.த.க.பாடசாலை
மன்/ தூய யோசவ்வாஸ் மகா வித்தியாலயம்.

**அடம்பன் பங்கு - ஏப்ரல் 5**
மன்/ அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்.
மன்/ பாப்பா மோட்டை றோ.க.த.க.பாடசாலை.
மன்/ மறத்தி கன்னாட்டி றோ.க.த.க.பாடசாலை.
மன்/ பாலைக்குளி றோ.க.த.க. பாடசாலை.
மன்/ அடம்பன் றோ.க.த.க.பாடசாலை.

**ஆட்காட்டிவெளி பங்கு - ஏப்ரல் 6**
மன்/ ஆண்டாங்குளம் றோ.க.த.க.பாடசாலை.
மன்/ வட்டக்கண்டல் றோ.க.த.க. பாடசாலை.
மன்/ கருங்கண்டல் றோ.க.த.க. பாடசாலை.
மன்/ பாலையடி புதுக்குளம் றோ.க.த.க.பாடசாலை.
மன்/ பரப்புக்கடந்தான் றோ.க.த.க.பாடசாலை.

**பண்டிவிரிச்சான் பங்கு - ஏப்ரல் 19**
மன்/ சின்ன பண்டிவிரிச்சான் அ.த.க. பாடசாலை.
மன்/ பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம்.

**தர்ச்சனா மருதமடு பங்கு - 20**
மன்/ தர்ச்சனா மருதமடு அ.த.க. பாடசாலை.
மன்/ முள்ளிக்குளம் அ.த.க. பாடசாலை.
மன்/ கீரிசுட்டான் அ.த.க. பாடசாலை.

**அரிப்பு பங்கு - ஏப்ரல் 26**
மன்/ கொக்குப்படையான் றோ.க.த.க. பாடசாலை.
மன்/ அரிப்பு றோ.க.த.க. பாடசாலை.
மன்/ சிலாபத்துறை அ.மு.க. பாடசாலை.

## கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்கால தியானம் சில பார்வைகள் .. பதிவுகள் ..!

### முருங்கன் பாடசாலை அதிபரின் உள்ளத்து உணர்வுகள்

மன்னார் மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானம் மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி நேசன் அடிகளார் தலைமையில் மடுத்திருப்பதியில் நடைபெற்றது.

**பல்வேறு நிலை பங்குபற்றுனர்கள்**

ஆசிரியர்கள், அதிபர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (இளைப்பாறியவர்கள் உட்பட), வலயக் கல்விப் பணிப்பாளர் (அனேகர் குடும்ப சமேதரராய்) இதில் பங்கேற்றனர்.

**உரைகளை வழங்கிய மறையாசிரியர்கள்**

மன்னார் மறைமாவட்டத்தில் நிரந்தர - மூத்த மறையாசிரியர்களான போதகர் திரு சவிரி, திரு மரிய செல்வன், திரு செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோர் இறைவார்த்தையை சிறப்பாக அறிவித்தனர். இறைவார்த்தையை அறிவிக்க - இறைபணி செய்ய கலைமாணி, கல்விமாணி, கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி கலாநிதி என்ற எந்தப் பட்டமும் தேவையில்லை என்பதை இவர்கள் தெட்டத்தெளிவாக நிரூபித்துவிட்டார்கள். இவர்களின் போதனைகள் வலயக் கல்விப் பணிப்பாளர் தொடக்கம் - சாதாரண ஆசிரியர் வரை அனைவரையும் உசுப்பி விட்டது.

**நெறிப்படுத்திய நேசன் அடிகளார்**

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஏன் இந்தியா என்று கூட எம்மவர் இன்றைய நாட்களில் மன அமைதிக்காக, உடல் சுகத்திற்காக, உளச் சுகத்திற்காக அலைந்து திரியும் வேளையில் மன்னார் மண்ணிற்கு இறைவன் தந்த பெருங்கொடையே என்று உணரக்கூடியவாறு அருட்தந்தை நேசன் அடிகளாரின் தியான வழிபாடு புனிதமடைந்திருந்ததையும் - பங்குபற்றுனர்களின் ஆன்மீகத்தை புனிதமடையச் செய்ததையும் எவராலும் மறக்கவும் - மறுக்கவும் முடியாது. ஒப்புரவு அருட்சாதனத்தை வழங்கிய அனைத்துக் குரவர்களும் நன்றிக்குரியவர்களே.

**அற்புதமான பாடகர்கள்**

இந்த மூன்று நாட்கள் நடாத்தப்பட்ட தியானத்திலும் ஆசிரியர்களை ஒன்றிணைக்கச் செய்தது அங்கு பாடப்பட்ட பாடல்களே என்றால் மிகையாகாது. பாடல்கள் பாடும்போது, மேலும் ஒரு பல்லவி பாடமாட்டாரா! என ஏங்கும் வண்ணம் உருக்கமாகவும், உணர்ச்சியாகவும், சுருதியுடனும் மாறாத குரல் வளத்துடனும் சலிக்காது மூன்று நாட்களும் பாடிய மிருக வைத்தியர் திரு. மாசில்லாமணி (பிலேந்திரன்) அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவரை இன்னும் நீண்ட நாட்கள் உடல், உள சுகத்துடன் இறைவன் பராமரிக்க எங்கள் நாளாந்த செபத்தில் வேண்டிக்கொள்வோம். அத்துடன் செல்வி விமலா, திரு. யூட் ஆகியோரும் பாராட்டப்பட வேண்டியவர்களே!

**முறையான முகாமைத்துவம்**

தற்போதைய, நவீன உலகில் எத்தனையோ பல முகாமைத்துவக் கோட்பாடுகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. பல நவீன முகாமைத்துவ நுட்பங்கள் நிறுவனங்களில் புகுத்தப்பட்டு வருகின்றன. முகாமையாளர் என்பவர் நிறுவனத்தைத் தனியே நின்று முகாமை செய்பவர் அல்லர். முகாமையாளர் நிறுவனத்திலுள்ள பணிகளைத் திட்டமிட்டு, அனைத்துப் பணியாளர்களையும் ஒருங்கிணைத்து, வழிநடாத்தி, மேற்பார்வை செய்து, உத்தம வெளியீடுகளைப் பெற்றுக் கொள்பவரே ஆவார். ஒரு செயற்பாட்டின் வெற்றி அச்செயற்பாட்டைத் திட்டமிடுவதிலேதான் தங்கியுள்ளது.

இங்கு, இந்தத் தவக்காலத் தியானம் வெற்றியளித்ததற்கு காரணம் வினைத்திறன் மிக்க முகாமையாளரைக்கொண்டு, சிறந்த திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டதே. இங்கு பங்குபற்றுனர்களோ பாமர மக்களல்ல. படித்த மேதைகள். இந்தப் பங்குபற்றுனர்கள் பல்வேறு அந்தஸ்து, கல்வித் தகமை, பொருளாதார வேறுபாடுகளைக் கொண்டவர்கள். இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றி, உணவு, தங்குமிட வசதிகளை மேற்கொண்டமை சிறந்த முகாமைத்துவ வெளிப்பாடேயாகும்.

இறைவன் யாரைத் தெரிந்துகொள்ள வேண்டும் எனத் திருவுளம் கொண்டிருக்கின்றாரோ, அவரையே ஆயர் அவர்களும் இயக்குனராகத் தெரிந்துகொண்டிருக்கிறாரோ என அருட்பணியாளர் நேசன் அடிகளாரைப் பற்றி எண்ணத் தோன்றுகின்றது. அவருடைய புனிதமான இந்தத் தியான வாழ்வு பல கிறிஸ்தவர்களைப் புதுப்பிறப்படையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

வலயக் கல்விப் பணிப்பாளர், கிறிஸ்தவ சமய ஆசிரிய ஆலோசகர், தன்னார்வப் பணியாளர்களாகச் செயற்பட்டோர் உணவு விநியோகித்தோர், தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தோர், மறைக்கல்வி நடுநிலையப் பணியாளர்கள் இவர்கள் யாவரும் இயக்குனரின் தியான வழிபாட்டுக்குப் பின்புலமாக இருந்தவர்கள். இவர்கள் என்றும் நன்றிக்குரியவர்களே!

இறுதியாக இந்தத் தியான வழிபாட்டுக்குப் பின்புலமாக இருந்த அனைவருமே **'மன்னார் மண்ணின் சொத்துக்களே'** என்பது மகிழ்ச்சிக்கும் - பெருமைக்கும் உரிய விடயமாகும்.

*திருமதி. செ. சு. செபஸ்ரியன்*
*அதிபர், மன். முருங்கன் ம.வி. முருங்கன்.*

## மன்னார் மறைமாவட்டத்தில்......

1ம் பக்கத் தொடர்ச்சி

தவக்காலப் பயணத்தின் முதல் நாள் மதிய உணவிற்கு முன்பாக இசைமாலைத்தாழ்வில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதன்பின் கல்வாரி நோக்கி நகர்ந்த புனித யாத்திரையில் கலந்துகொண்ட மக்கள் அன்றைய தினம் இரவில் கணேசபுரம் கன்னாட்டி பாடசாலையில் தங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

மீண்டும் 23ம் திகதி வியாழன் அதிகாலை செபவழிபாடுகளுடன் இந்தப் புனித யாத்திரை கல்வாரியை நோக்கிப் புறப்பட்டது. இரவு வவுனியாவை வந்துசேர்ந்த திருயாத்திரை புனித அந்தோனியார் ஆலயத்தை வந்தடைந்தது. இரவு உணவிற்கு முன்னதாக இங்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 24ம் திகதி வெள்ளியன்று அதிகாலை மீண்டும் செபங்களுடனும் மன்றாட்டுக்களுடனும், பாடல்களுடனும் கல்வாரியை நோக்கி புனித பயணம் யாத்திரையாக தொடர்ந்தது. இங்கு மக்கள் தொகை 2000த்தை தாண்டிவிட்டது.

வவுனியா கோமரசங்குளம் கல்வாரிக்குன்றிலே காலை 10.00 மணிக்கு பொதுவான திருச்சிலுவைப் பாதையும் 12.00 மணிக்கு மன்னார் ஆயர் அதி வண. இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலைமையில் சிறப்புத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## வத்திக்கான் வானொலி .......

4ம் பக்கத் தொடர்ச்சி

வத்திக்கான் வானொலியில் 59 நாடுகளில், 50 நிரூபர்கள், 35 தொழில்நுட்பக் கலைஞர்கள், 13 துறவியர்கள், 87 பொதுநிலையினர் மற்றும் 70 ஆண்கள், 30 பெண்கள் என ஏறத்தாழ 400 பேர் பணியாற்றுகின்றனர்.

வத்திக்கான் வானொலியின் நிகழ்ச்சிகள் நேரடி ஒலிபரப்பு முடிந்தவுடன், சில நிகழ்ச்சிகளை அதன்பிறகு இணையத்தளம் மூலம் கேட்கும் வசதிகள் உண்டு. **www. Radio Vaticana. Org** எனும் இணையத் தளம் மூலம் ***'கேட்டுக்கொண்டதற்கு இணங்க'*** எனும் பகுதியை அழுத்துவதனால் நடந்த ஒலிபரப்பையும் - மேலும் தமிழ் நேரடி ஒலிபரப்பையும் அதிகாலை 1.00 - 1.20 வரையும் - நண்பகல் 14. 50 முதல் 3.10 வரையுள்ள நேர அட்டவணையில் நேயர்கள் கேட்டுப் பயன் அடையலாம்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், வத்திக்கான் வானொலி மனிதனின், இறைவனுக்கான மிக ஆழமான தேடல்களை நிறைவுசெய்ய முயற்சிக்கின்றது. வாழ்க வத்திக்கான் வானொலி, வளர்க அதன் சேவை!

*தகவல் : திரு. அன்ரன் பொன்ராஜ்*
*(சுவிஸ் ஆன்மீகப் பணியக மத்திய குழு உறுப்பினர்.)*

## நல்மனம் படைத்த அனைத்து ...

1ம் பக்கத் தொடர்

இத்தகைய ஈடுபாடு கொண்டவர்களும் கொல்லப்படுவதைக் கத்தோலிக்க ஆயர்மன்றம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்தவிதமாக அழிக்கப்படும் மனித உயிர் மிகுந்த மதிப்புக்குரியது. இத்தகைய அர்த்தமற்ற கொலைகளினால் புனித இடங்களும், புனித தினங்களும் அவமதிக்கப்படுவதையிட்டு நாம் எச்சரிக்கையாயிருக்கிறோம்.

தமது உறவினரை இழந்து ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியுள்ள இவர்களது குடும்பத்தினருக்கு நாம் எமது இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு இத்தகைய சீரழிவுகள் நிறுத்தப்பட்டு அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட இறைவனை வேண்டுகிறோம்.

# குருத்துவம்

## குருத்துவ அழைப்பு பற்றிய சில சிந்தனைகள்

அருட்சகோதரி கனிஷியஸ் தி. கு. மன்னார்

அழைப்புக்கள் .... பலவிதம். ஒவ்வொன்றும் ... ஒருவிதம்! அவற்றில் தெய்வீக அழைப்பு அதிசயமானது. ஒருவர் இறைவனின் அழைப்புக்கு முதல் முறையாக "ஆம்" என்று பதிலளிக்கும் போது, அதன் அர்த்தத்தைச் சிறிதளவே விளங்கிக்கொள்கின்றார்.

அழைக்கப்பட்ட ஒருவரை இறைவன் செழிப்பும், பசுமையும் நிறைந்த மேய்ச்சல் நிலத்தினூடாக, பாலைவனத்திற்கும், இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கிற்கும் ஊடாக நடத்திச்சென்று, மீண்டும் உயிரளிக்கும் நீரூற்றுக்கும், பசுந்தரைக்கும் அழைத்துச் சென்று, ஆவியினால் ஊட்டமளிக்கின்றார்.

பின்னர் அவர், ஒருவரை மக்களினத்தின் தந்தையாகவோ, தாயாகவோ அன்றேல், "பிடுங்கவும், வெட்டி வீழ்த்தவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும்" கூடிய ஒரு இறைவாக்கினராகவும் ஆக்குகின்றார்.

ஒரு குரு அவருக்குப் பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்துபவராகவும், ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பவராகவும், அவரது நண்பராகவும், நம்பிக்கைக் - குரியவராகவும் இருக்க அழைக்கப்படுகின்றார். ஒரு அழைத்தலின் அதிசயம் இத்தகையதே.

விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக் கட்டத்திலே நிற்கும் இன்றைய உலகில், புதிய கருத்துக்களும், கண்டுபிடிப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன; நாகரீகங்கள், நவீனங்கள் என்ற போர்வையில் அலங்கோலங்களும், அறிவீனங்களும் பெருகி வருகின்றன. ஆனால் இத்தகைய பெருக்கங்கள் மத்தியிலும் மனிதனுக்கு ஏற்படும் உபத்திரங்களுக்கும், வேதனைகளுக்கும் முடிவேயில்லை. இத்தகைய தேவைகளையும், வேதனைகளையும் ஏற்படுத்துபவனும் மனிதன்; அவற்றிற்கு மத்தியில் வாழ்பவனும் மனிதன்.

சமூகம் சீரழிந்துவிட்டது என்று கூறுகின்றோம். அந்தச் சமூகத்தைச் சீரழிப்பது யார்? மனிதர்தானே! ஆகவே சமூக அமைப்பைச் சீர்திருத்த வேண்டுமானால், முதலில் தனிமனிதனின் வாழ்வைச் சீர்படுத்த வேண்டும்.

அப்படியானால் இந்தச் சீர்திருத்தத்தைச் செய்யப்போகின்றவர்கள் யார்? நாட்டிலே ஒவ்வோர் ஆண்டும் வெளிவரும் விஞ்ஞானிகளும், வழக்கறிஞர்களும், பொறியியலாளர்களும், வைத்தியர்களும் செய்வார்களா? பட்டதாரிகளும், பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் செய்வார்களா? கலைஞர்களும், சோதிடர்களும் செய்வார்களா? ஆம்; இவர்கள் மனிதரின் புறவாழ்வை மாற்றியமைக்கலாம். ஆனால் இன்றைய மனிதனின் முதல் தேவை அவனது அகவாழ்வை மாற்றுவதாகும். ஆன்மீகத்திலே, மறுமலர்ச்சியும், அறநெறியிலே விழிப்புணர்ச்சியும் ஏற்படுத்துவதாகும்.

இத்தகைய அகவாழ்வில் மாற்றத்தைக் கொண்டுவர எவரால் இயலும்? எந்த மனிதராலும் இயலாது; இறைவனால் மட்டும் இயலும்.

ஆம்; வாழ்விழந்த மனிதனின் வாழ்வில் ஒளியேற்ற, துயரக்கடலில் வீழ்ந்து துரும்பாகிவிட்ட மனிதனைத் தூக்கிவிட, பாதை மாறிப் பயணம் தொடரும் மனிதனுக்கு நல்வழி காட்ட வந்தவரே மீட்பர் இயேசுக் கிறிஸ்து. அவர் உண்மையான இறைவனும், மனிதனுமாக இருந்ததால், இறைவனையும் - மனிதரையும் இணைக்கும் பாலமானார்; தன்னிகரற்ற தலைமைக் குருவானார். இறைவனின் நற்செய்தியை இவ்வுலகிற்கு எடுத்துரைக்கும் ஆசிரியப் பணியையும் - அந்நற்செய்தியைச் செயல்படுத்தி மக்களைப் புனிதப்படுத்தும் நடுவர் பணியையும் தம் பணியிலே ஒன்றாக இணைத்து, ஒப்பற்ற குருவானார்.

தனக்குப் பின் தன் மறையுடலாக உலகில் விளங்க வேண்டிய திருச்சபை, குருகுலமாக விளங்கித் தனது குருத்துவப் பணியை உலகில் தொடர்ந்து ஆற்ற வேண்டுமென்று விரும்பினார். ஆகவேதான், நீரினாலும், ஆவியினாலும் கிறிஸ்துவிலே திருமுழுக்குப் பெறும் இறைமக்கள் அனைவரும் தமது பொதுக் குருத்துவத்திலே பங்கேற்க வைத்தார்.

இவ்வாறு தமது பொதுக் குருத்துவத்திலே பங்கேற்கும் இறைமக்கள் மத்தியிலிருந்து, ஒரு சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களைக் குருக்களாகத் "திருநிலை" ப்படுத்த விரும்பினார். இவர்கள் தங்கள் குருத்துவப் பணியை வெளிப்படையாகவும், அதற்கென்றே தமது வாழ்வை அர்ப்பணித்தும் ஆற்ற வேண்டுமென்று விரும்பினார்.

எமது மன்னார் மறைமாவட்டம் தனது உதயத்தின் வெள்ளிவிழா நிகழ்வில், தடம்பதித்துள்ள இவ்வாண்டில், எமது மறைமாவட்டத்திற்கு என்றுமில்லாத வகையில் இவ்வருடம் எட்டுக் குருக்களை இறைவன் அளித்திருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

எனவே இத்தருணத்தில் இந்த மகத்துவம் மிக்க குருத்துவப் பணியைப்பற்றி நாம் சிறிது சிந்திப்பது பயனுடையது என்று எண்ணுகின்றேன்.

ஒருவர் தனக்காகக் குரு ஆவதில்லை. அவர் மக்களுக்காகக் குருவாகின்றார். மக்கள் பணியிலே தலையாய பணியாக இயேசுவின் மீட்புப் பணியை மேற்கொள்வதற்காகக் குருக்கள் திருநிலைப்படுத்தப்படுகின்றார்கள்.

"தந்தை என்னை அனுப்பியதுபோல், நானும் உங்களை அனுப்புகின்றேன். உலகம் எங்கும் சென்று, படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற இயேசுவின் கட்டளையை ஏற்றுக்கொண்டு நற்செய்தியைப் பரப்புகின்றார்கள்.

"நீங்கள் யாருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்." என்னும் இயேசுவின் வாக்குறுதியை ஏற்று மக்களின் பாவங்களை



மன்னித்து, அவர்களைப் புனிதப்படுத்தும் மீட்புப் பணியைச் செய்கிறார்கள். நற்கருணையை நிறுவி, "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் விருப்பப்படி நற்கருணைப்பலி நிறைவேற்றும் மீட்புப் பணியை மேற்கொள்கிறார்கள். கிறிஸ்துவை இன்னும் அறியாதோர் அவரை அறியவும், கிறிஸ்தவர்கள் மேலும் புனிதம் அடையவும், திருச்சபை இயேசுவின் மறையுடலாய் வளர்ந்து மலர்ச்சி அடையவும் செய்யும் திருப்பணிக்குக் குருக்கள் தம்மையே அர்ப்பணிக்கின்றார்கள்.

இவ்வாறு விண்ணக வாழ்வுக்குச் சாட்சிகளாகவும், அந்த வாழ்வுக்கு மக்களைக் கூட்டிச்செல்பவர்களாகவும் குருக்கள் விளங்க வேண்டும் என்பதனால்தான் இயேசு குருக்களை இவ்வுலகிலிருந்து பிரித்தெடுக்கின்றார். மாறாக இவ்வுலக மக்களிடமிருந்து அவர்கள் பிரிக்கப்பட்டு வாழவேண்டும் என்பதற்காக அல்ல.

எனவேதான், "விண்ணகத் தந்தாய், உலகிலிருந்து என் சீடர்களை எடுத்துவிடுமாறு உம்மை நான் கேட்கவில்லை. தீயவனிடமிருந்து இவர்களைக் காத்தருள வேண்டுமென்றே உம்மை மன்றாடுகின்றேன். நான் உலகைச் சார்ந்தவனாய் இராததுபோல், இவர்களும் உலகைச் சார்ந்தவர்களாய் இல்லாதிருக்கட்டும்." என்று இயேசு வேண்டிக்கொண்டார்.

எனவே மக்களுக்காக ஆற்றும் மீட்புப் பணியை புதிய உலக மனிதனின் தேவைகளுக்கேற்ப ஆற்றும் பொறுப்பு நம் குருக்களைச் சார்ந்தது. அமைதியின்றி அலையும் மனிதருக்கு அமைதியை அளிக்க, மெய்ஞானம் இல்லாத விஞ்ஞானம் அழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதை எடுத்துரைக்க, குருக்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

இந்தக் காலத்தில் பணிபுரியும் குருக்கள் புனித படைப்பான மனிதருக்கு வேறுபடுகின்ற அவர்களது அடிப்படைத் தேவைகளையாவது சமூகம் நீதியோடும், அன்போடும் அடைந்து கொடுக்க வேண்டுமென்று, தமது வார்த்தையாலும், வாழ்வாலும், செயலாலும் அறிவுறுத்த அழைக்கப்படுகின்றார்கள்.

புதிய உலகைப் படைக்கின்றோம் என்று கூறி, ஒழுக்க நெறியைக் குழி தோண்டிப் புதைக்கும் புரட்சி மனிதரைத் தடுத்து நிறுத்தி, ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்திக் காக்கும் பொறுப்பைச் சவாலாக ஏற்க குருக்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

இறைவன் இல்லாத அரசியலிலே, இறைவனைக் கொண்டு வரவும், உழைப்பு இல்லாத ஊதியத்திலே உழைப்பின் மதிப்பைப் பெருக்கவும், தியாகம் இல்லாத வழிபாட்டிலே தியாகத்தைப் புகுத்தி இறைவாழ்வை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களை உருவாக்கவும் குருக்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

இதனிமித்தம் குருத்துவநிலை எத்தகைய மாபெரும் பேறு, எத்தகைய மாபெரும் பொறுப்பு என்பதை நாம் கண்டு கொள்ளலாம். இத்தகைய உயர் குறிக்கோளைக் கொண்ட வாழ்வுக்கு இறைவன் எல்லோரையும் தெரிந்துகொள்வதில்லை. பொருத்தம் பார்த்து, ஒரு சிலரை மட்டுமே தெரிந்துகொள்கின்றார். ஆம்; தனது திருவுளத்திற்குப் பொருத்தமானவர்களையே குருத்துவத்திற்குத் தெரிந்துகொள்கின்றார்.

ஆனால் இந்தப் பொருத்தம் எதில் அடங்கும் என்பது எனக்கும், வாசகர்களாகிய உங்களுக்கும், ஏன் புதுக் குருக்களுக்குமே தெரியாது. எமக்குத் தெரிந்ததெல்லாம் இறைவனின் எல்லையற்ற இரக்கமும், ஞானமும் இவர்களைக் குருத்துவ நிலைக்குக் கொண்டு வந்துள்ளது என்பது மட்டுமே.

குருக்களாக வாழ்வது எளிதல்ல; மலை எவ்வளவுக்கு உயரமோ, அவ்வளவுக்கு அதன் சிகரத்தை அடைவது கடினம்; அலை எவ்வளவு உயரமோ, அவ்வளவு ஆழ்கடலுக்குள் சென்று முத்தெடுப்பது கடினம்: "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல், நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்." என்று இயேசு தந்த குறிக்கோளைப் பின்பற்றுவது எளிதல்ல; "வாழ்வது நானல்ல, என்னில் இயேசுவே வாழ்கின்றாா". என்று கூறக்கூடிய அளவுக்கு வாழ்வது எளிதல்ல; "நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுக்கிறார்" என்பதை மறவாது நல்ல ஆயனாகப் பணியாற்றுவது எளிதல்ல. இத்தகைய கடினமான வாழ்க்கையை, கடுமையான உலக சூழ்நிலையிலே குருக்கள் கன்னியர்கள் வாழ்ந்து, பணிபுரிய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

வாழ்க்கையும் அதனை வாழ வேண்டிய சூழலும் இத்தகைய கடினமானதாக இருந்தாலும், அது உன்னதமான வாழ்க்கையாக இருப்பதால், புதுக்குருக்கள் தாராள மனத்துடன், தியாக உள்ளத்துடன் அதனை ஏற்க முன்வந்துள்ளார்கள்.

"உலகம் முடியும்வரை நான் உங்களோடு இருக்கின்றேன்" என்றும், "நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை, நானே உங்களைத் தேர்ந்தெடுத்தேன்" என்றும் பகர்ந்த இயேசுவின் உறுதி மொழியிலே நம்பிக்கை வைத்துக் குருத்துவ நிலையைத் தெரிந்து கொண்டுள்ளார்கள். எனவே, "இவர்களை அமைதியின் கருவியாய் ஆக்கிடுவாய்: அன்பர் பணி செய்யப் பணித்திடுவாய்" என்றும் "உன்னுடைய எண்ணில்லாத் தாரகை நடுவே இவர்களைச் சிறு விளக்குகளாய் எரியச் செய்திடுவாய்" என்றும் செபிப்போம்.

# அறுவடைக்கான அறிவிப்பு

தன்னார்வப் பணியாளர்
திரு. அருளப்பு, விடத்தல்தீவு

நாம் எல்லோரும் இயேசுவின் சீடராக இருந்து மிகுந்த கனிகளைத் தரவேண்டுமென்று கடவுள் விரும்புகின்றார். ஒரு சீடன் உதட்டளவில் மட்டும் பேசுபவனாக இராமல், உண்மையான சீடனாக வாழ்ந்து காட்டுவதுதான் சாலச் சிறந்தது. நாம் எல்லோரும் கடவுளுடைய திராட்சைத் தோட்டத்தில் பணிபுரிய அழைக்கப்படுகின்றோம். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதற்கு உட்பட்டவன்.

பணி என்றால் என்ன? ஒவ்வொரு பணியின் உருவாக்கத்திலும் ஆறு பண்புகள் முனைப்புப் பெறுகின்றன.

1. எதையாவது செய்வது. 2. இறையரசின் வருகைக்காகச் செய்வது. 3. வெளிப்படையாகச் செய்வது. 4. கிறிஸ்தவ சமூகத்தின் சார்பாகச் செய்வது. 5. திருமுழுக்கு - குடும்பம் - குருத்துவம் போன்ற கொடைகளில் இருந்து செய்வது. 6. தன்னுடைய சொந்த வரையறைக்குள் இருந்து செய்வது.

இந்த ஆறு பண்புகளும் பணியினுடைய உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றன. இப்பணிகளை நாம் செய்வதற்கு உந்து சக்தியாக இருப்பது இறைவனின் அருளும், சக்தியும், கொடைகளுமே. "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்." (யோவான். 15:16) இறைவனின் அழைப்பு நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காலத்தில் வருகின்றது.

சிலர் இளமையிலேயே தங்களை அர்ப்பணிக்கின்றனர். இவர்களே குருக்கள், கன்னியர், துறவிகள். இன்னும் சிலர் சிறிது காலம் உலக வாழ்வை மெய்மறந்து அனுபவித்தபின் உண்மையைக் கண்டுகொள்கின்றனர். மற்றும் சிலர், முதிய வாழ்வில் கண்டுகொள்கின்றனர். ஏனெனில் இறுதி மணித்துளி வரை இறைவன் நம் மனக்கதவுகளைத் தட்டிக்கொண்டே இருக்கிறார். இவ்வுலக இரைச்சல்களினால், அந்த ஒலி நமக்குக் கேட்பதில்லை தான். ஆனால் அது கேட்காமலேயே போய்விடுவதில்லை.

ஆனால் இயேசு "அறுவடையோ மிகுதி. வேலையாட்களோ குறைவு; ஆகையால் அறுவடைக்குத் தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" என்றார். (மத்தேயு 9:37)

இறைமகன் மனுவுரு எடுத்ததன்வழி, ஒவ்வொரு சூழலிலும் இறையாட்சியின் விதை விதைக்கப்பட்டுள்ளது. வாழ்விற்கு நாம் பதில் சொல்வதை வைத்து, அது நிலத்தில் விழுந்ததா! பாறையில் விழுந்ததா! முட்புதரில் விழுந்ததா! என்பது நிர்ணயிக்கப்படுகின்றது.

ஆகவே அன்றையத் திருத்தூதர்கள்போல் இன்றும் நம்பிக்கை நிரம்பிய முழு ஊக்கத்துடன் அனைத்தையுமே துறக்கத் தயாராகவும், எந்தத் துன்பங்களை ஏற்றுக்கொள்ளவும் முன்வரும் சீடர்கள் தேவைப்படுகின்றார்கள்.

இருளில் இருப்போருக்கு ஒளி வழங்குவதற்கான தேவை உள்ளது. இன்றைய தேவை நற்செய்தியை எடுத்துச் சொல்லிவிட்டு வருவது மட்டுமல்ல. அந்தச் செய்திமீதான அன்பை ஊட்ட வேண்டியுள்ளது. அதை மக்கள் ஏற்றுக்கொள்ள வைக்கவும் வேண்டியுள்ளது. அதற்குச் செபமும் - அறிவிப்பும் மட்டும் போதுமா? வாழ்க்கை எடுத்துக்காட்டுக்களும் தேவைப்படுகின்றன.

இதனை ஏற்று நடத்த வேண்டியவர்கள் யார்? திருச்சபைத் தலைவர்கள், ஆயர்கள், குருக்கள் துறவியர் என்ற வட்டம் மட்டுமா? இல்லை. நற்செய்தியை அறிவிக்க வேண்டிய கடமை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ளது. "நான் நற்செய்தியை அறிவிக்கின்றேன் என்றாலும், இதில் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்யவேண்டிய கட்டாயம் எனக்குள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில், எனக்கு ஐயோ கேடு! இதை நானாக விரும்பிச் செய்தால் எனக்கு கைமாறு உண்டு. நானாக விரும்பாவிட்டாலும் இது என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாக உள்ளது."
(1 கொரி. 9.16.17)

நான் நல்லவனாகத்தானே வாழ்கின்றேன், அது மட்டும் போதாதா! என்ற கேள்விக்கு இங்கு விடையும் இல்லை, இடமும் இல்லை. ஏனெனில் நல்லவனாக வாழ்வது என்பது நன்மையே செய்வதிலும் - நன்மைத்தனங்களைப் பாதுகாப்பதிலும், எடுத்துரைப்பதிலும் தன்னிறைவைக் காணவேண்டும். சிப்பிக்குள்ளேயே வாழ்நாளை முடித்துக்கொள்ளும் முத்தால் யாருக்கு என்ன பயன்? நல்லவனாயிருப்பதற்கு மட்டுமல்ல. அந்த நன்மைத்தனங்களை பிறருடன் பகிர்ந்துகொள்ளவும், அவர்களையும் நல்லவர்களாக மாற்றவும் நமக்குக் கடமை உண்டு.

"உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற இயேசுவின் கட்டளை ஏதோ மக்களை பலவந்தப்படுத்தி மதமாற்றம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் அளிக்கப்பட்டதல்ல. மாறாக அனைத்து மக்களின் அடி உள்ளங்களிலும், உண்மையை அறிய வேண்டும் என்ற ஆழ்ந்த வேட்கையை நிறைவுசெய்யவும், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றவும் இயேசுவின் நற்செய்தி மிகமிகத் தேவை.

"தியாக உள்ளத்தோடு உழைக்க மனமில்லாதவர்களை கடவுள் தன் தோட்டத்தைக் குத்தகைக்கு விடுவதில்லை". இப்படி ஜான்சன் என்ற இறைஞானி கூறுகின்றார்.

சொல்வது மட்டுமல்ல உபதேசங்கள்; சொல்பவனும் நடப்பதுதான் உயர் நியாயங்கள். நல்லவற்றைப் பிறர் கேட்கச் சொல்லிவிட்டு, நான் மட்டும் மனம் மாறாவிட்டால் என்ன நியாயம்! எல்லோருக்கும் கிடைப்பதில்லை மோட்ச லோகம். இயம்புவதைக் கடைப்பிடிப்பான் நேரே செல்வான். "சொல்லுகின்றேன் கேளுங்கள்; அதன்பின் நானும் சொன்னபடி வாழுகிறேன்" என்றார் இயேசு பெருமான்.

# வாழ்வுதயம்

VALVUTHAYAM (Caritas - Mannar)

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM (Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பி. ஜேசுராஜா.


Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk

## வாழ்வுதய வீட்டுத்திட்ட

## அடிக்கல் நாட்டுவிழா

**"இரத்தம் சிந்தும் கலாச்சாரத்தை வேரோடு அழித்து நாட்டில் நிரந்தர சமாதானத்திற்கும் அபிவிருத்திக்குமாக அர்ப்பணிப்போடு உழையுங்கள்"**

**– மன்னார் ஆயர் –**

மன்னார் வாழ்வுதய நிறுவனத்தினால் மளுவராயர் கட்டையடம்பனில் 125 நிரந்தர வீட்டுத்திட்டம் அமைக்கும் அடிக்கல் நாட்டுவிழா கடந்த 08.04.2006 அன்று மாலை 4.30 மணியளவில் வாழ்வுதய நிறுவன இயக்குனர் அருட்தந்தை P. ஜேசுராஜா அடிகளார் தலைமையில் நடாத்தப்பட்டது.



மளுவராயர் கட்டையடம்பனில் 08.04.06 அன்று வாழ்வுதய வீட்டுத்திட்ட அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

மேறபடி வைபவத்திலேயே மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசேப் ஆண்டகை அவர்கள் இவ்வாறு கூறினார். இத்திட்டம் மன்னார் ஆயர் அவர்களினதும் வாழ்வுதய நிறுவன இயக்குனர் அருட்தந்தை P. ஜேசுராஜா அடிகளாரினதும் பாரிய முயற்சியினாலேயே வந்து சேர்ந்துள்ளது. இவ் வீட்டுத்திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் கொழும்பு SEDEC (செடேக்) நிறுவனம் ஊடாக நிதியுதவியினை வழங்குகின்றது. இவ் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மன்னார் ஆயர் மேலும் உரையாற்றுகையில், எமது நாடு இன்று என்றும் இல்லாதவாறு இன்று பல பிரிவினைகள் மத்தியில் இருக்கின்றது. எந்தப் பிரதேசத்திலும் திடீர் திடீர் என இரத்தக் களறிகளும் அநீத செயல்களுமே நடைபெற்று வருகின்றன. நாம் இதனை ஒருபோதும் ஏற்க இயலாது. நாம் ஒன்றுபட்டு இதனை வேரோடு அழிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அத்தோடு நோன்பு இருந்து இறைவனிடம் செபிக்க வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கின்ற நிலையான சமாதானம் எம் நாட்டில் மலரும் என்றார்.

## சிறுவர் உரிமை கருத்தமர்வு

கறிற்றாஸ் போலந்து அனுசரணையுடன் பெற்றோரை இழந்த வறிய மாணவர்களுக்கு வாழ்வுதயத்தினால் கல்வி கற்பவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன



சிறுவர் உரிமைக் கருத்தமர்வு அனுராதபுரம் சர்வோதய மண்டபத்தில் மன்னார் மறைமாவட்டச் சிறுவர்களும், பணியாளர்களும்.

இதில் பயன்பெறும் மாணவர்களுக்கான சிறுவர் உரிமை பற்றிய கருத்தமர்வு சென்ற மாதம் 25, 26, 27ம் திகதிகளில் அனுராதபுரத்தில் உள்ள சர்வோதய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனம், கிளிநொச்சி (கியூடெக்), மட்டக்களப்பு (எகெட்), திருமலை (எகெட்) ஆகிய மறைமாவட்ட நிலையங்களில் உள்ள மாணவர்களும் பங்குபற்றினர். இந்நிகழ்வு கொழும்பு (SEDEC) தேசிய நிறுவனத்தின் நீதி, சமாதான பிரிவில் பணிபுரியும் அருட்சகோதரி ஜெனட் அவர்களாலும் திரு. அசோக்குமார், திரு. சியோன், திரு. நிலுக் பெரேரா ஆகியோரால் நடாத்தப்பட்டது. இதில் பங்குபற்றிய மன்னார் மறைமாவட்ட மாணவர்கள் யாவரும் மடு, அடம்பன், வவுனியா, தலைமன்னார், பேசாலை ஆகிய பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாழ்வுதய தொழிற்பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கான

## உபகரணத் தொகுதி வழங்கும் நிகழ்வு

மன்னார் வாழ்வுதய நிறுவனத்தினால் உலக கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆட்காட்டிவெளியில் நடாத்தப்பட்ட வீட்டு மின்னிணைப்பு பயிற்சிநெறி மாணவர்களுக்கான உபகரணத்தொகுதி வழங்கும் நிகழ்வானது கடந்த 29.03.2006 அன்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் உலக கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவன அதிகாரிகள், மன்னார் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை P. ஜேசுராஜா அடிகளார் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பங்குபற்றினர்.

ஒரு மாணவர் பெறும் உபகரணத் தொகுதியின் பெறுமதி ரூபா 8000.00 இப்பயிற்சியைப் பூர்த்தி செய்த 21 மாணவர்களுக்கும் 168,000.00 ரூபா பெறுமதியான வீட்டு மின்னிணைப்பு உபகரணத்தொகுதி வழங்கப்பட்டுள்ளது. 7 மாதகாலமாக இம்மாணவர்கள் இப்பயிற்சியை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான

## சமாச அமைப்பு உருவாக்கம்

வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் செயற்பாடுகளை மென்மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் பிரதேச அமைப்பு ரீதியாக குழுக்களுக்கான சமாச அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் முதல் கட்டமாக வங்காலை ஆலய முன்றலில் 01.04.2006 அன்று காலை 10.30 மணியளவில் இவ் சமாச அமைப்பு உருவாக்கம் இடம் பெற்றுள்ளது. இவ் ஒன்றுகூடலில் நானாட்டான் பிரதேச அமைப்புக்குள் வங்காலை கிராமத்தில் வங்க தீபம் குழுவும், காத்தான்குளக் கிராமத்தில் உதயதாரகை, அமலஜோதி ஆகிய குழுக்களும், தோமஸ்புரியில் வெண்மலர் குழுவும், வஞ்சியங்குளத்தில் இளம்தளிர், அன்னை திரேசா, செங்கதிர் ஆகிய குழுக்களும், உமநகரியில் சொர்க்கம் போன்ற குழுக்களும் இவ் சமாச அமைப்புக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.



வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களில் நானாட்டான் பிரதேசத்தில் சமாச அமைப்பு ஒன்றுகூடல் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படம்.

இக்கிராமியக் குழுக்களில் மக்கள் அமைப்புகள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. இந்த மக்கள் அமைப்பு நிர்வாகத்தில் இருந்தே சமாச அமைப்பு உருவாக்கப்படுகின்றது. சமாச அமைப்பில் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற நிர்வாகமும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் நோக்கம் கிராமிய மட்டம், பிரதேச மட்டம் போன்றவைகளில் தமது சமூக, பொருளாதார, கலாச்சார செயற்பாடுகளை வலைப்பின்னல் அமைப்பில் கொண்டுசெல்வதே ஆகும். இச்செயற்பாடுகளின் விரிவான விளக்கம் கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் இணைப்பாளர் அவர்களினால் கொடுக்கப்பட்டுள்ளது.

இதே தினம் மாலை பள்ளக்கமம் கிராமத்திலும் இச்சமாச அமைப்பு ஒன்றுகூடல் அப்பிரதேசத்தை சுற்றியுள்ள மாவிலங்கேணி கிராமத்தின் வான்மதி, உதயகீதம் ஆகிய குழுக்களையும், வாழ்க்கைப் பெற்றாங்கண்டல் புனித நீக்கிலார் குழுவையும், பள்ளங்கோட்டை கிராமத்திலிருந்து லில்லிமலர் குழுவையும் ஒன்றுசேர்த்து நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

## சிறார்களின் வளமான கல்விக்கு உதவி

### வாழ்வுதய முன்பள்ளிக் கட்டிட நிர்மாணப் பணிகள்

வாழ்வுதய நிறுவனத்தின் முன்பள்ளி கட்டிட நிர்மாணப்பணிகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. மன்னாரில் பாப்பாமோட்டை, தலைமன்னார், மடுக்கரை, சின்னப்பண்டிவிரிச்சான், போன்ற கிராமங்களிலும் வவுனியாவில் கூமாங்குளம், தாஸ்கோட்டம் போன்ற கிராமங்களிலும் தற்போது இந்த நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை போன்ற முன்பள்ளிக் கட்டிடங்களைக் கடந்த காலத்திலும் வாழ்வுதயம் பல கிராமங்களில் அமைத்துக்கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் முன்பள்ளிச் சிறார்கள் கல்வியை வளமான முறையில் மேற்கொள்வதற்கு பேர் உதவியாக அமைகின்றது. அத்தோடு இவர்கள் சிறு பராயத்தில் மகிழ்ச்சியுடன் அழகான கட்டிடங்களில் தமது கல்வியை கற்றுக்கொள்வதற்கும் உதவியாக அமைகின்றது.

இச்சிறார்களுக்கு வாழ்வுதய முன்பள்ளி ஆசிரியர்களே கல்வியைப் புகட்டுகின்றார்கள். அத்தோடு இச்சிறார்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், சத்துணவு போன்றவைகளையும் வாழ்வுதயம் வழங்கி வருகின்றது. இவ்வாறான ஊக்குவிப்பின் மூலம் சிறார்கள் மிக்க மகிழ்ச்சியுடன் தமது கல்வியை வளமாக இருந்து கற்று வருகின்றார்கள்.

மன்னார் ஆதார வைத்தியசாலையில் கடந்த 03.04.2006 அன்று வாழ்வுதயப் பணியாளர்களும் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் பிரிவு உறுப்பினர்களும் பங்குசார யுவதிகளுமாக இணைந்து தொண்டர் பணிபுரிந்தபோது எடுக்கப்பட்ட படம்.



சுயதொழில் வாய்ப்பைப் பெருக்கும் நோக்கில் இயக்குனர் தந்தை அவர்களினால் கு உறுப்பினர்களுக்கு கடனாக ரூபா 15, 000 வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.



கடந்த மாதம் வஞ்சியன் குளக் கிராமத்தில் இயங்கும வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் வீதி சிரமதானத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.



# மன்னா விளம்பரப் பலகை



"என்னதான் மாபெரும் போர் வருவதை எதிர்வு கூறினாலும் மௌனமாக இரு தரப்பும் இருந்தால் அது பொய்த்துவிடும்."
- சந்தான் கொண்சிலா, வண்ணாகுளம், அடம்பன்.

"நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்பதில் மிகவும் கவனமாக இருங்கள். ஒருவேளை நீங்கள் மட்டும் தான் பலருக்கு வாசிக்கக் கிடைத்த விவிலியமாக இருக்கலாம்.." -( W.J. டோம்ஸ்)
தே. நிதர்சினி, தாமோதரம்பிள்ளைவீதி, கீரி.

"ஒரு குறிக்கோள், அளவற்ற ஊக்கம், தளர்வற்ற நெஞ்சுறுதி, சலியாத உழைப்பு, நேர்மையான பாதை, வெற்றி கிட்டாமலா போய்விடும்?"
- அ. விமலறஜனி, கி.அரசர் மாணவியர் இல்லம்.

"புத்தகம் இல்லாத வீடும் ஜன்னல் இல்லாத வீடும் ஒன்றுதான்."
தா. துளசி, 100 வீட்டுத்திட்டம், பெரியகமம், மன்னார்.

"தவறுகள் எப்போதும் வைக்கோல் துரும்புகள் போல் மிதந்து விடுகின்றன. உண்மைகள் எப்பொழுதும் ஆழத்தில் கிடைக்கும் முத்துபோல் தேடினாலே கண்டெடுக்க முடிகிறது."
- வெ. சசிகலா, எமில் நகர், மன்னார்.

"வாழ்க்கையை அர்ப்பணிக்க ஒருபோதும் தயங்கக் கூடாது. வாழ்வு என்னும் பெரும் கடலில் குதிக்கவும் தயாராக இருக்க வேண்டும். அப்போது எமது இலக்கை அடைய முடியும்."
பி. தாறக்க டினுது, புனித கிளாரட் குருமடம்,

"சமுதாயம் சாக்கடையாக இருந்தாலும் நீ சந்தனமாகவே இரு"
- பெ. சிந்துஜா, ப. க. கொட்டு மேற்கு, மன்னார்.

"நட்புக்கு உயிர் கொடுப்பது எளிது. ஆனால், உயிர் கொடுக்கும் நட்பு கிடைப்பது அரிது."
த. திலக்ஷன், 100 வீட்டுத்திட்டம், பெரியகமம்.

"சிலையிலே கடவுளைத் தேடும் மனிதனுக்கு உயிருள்ள மனிதரிலே ஏன் கடவுள் தெரிவதில்லை?"
- அ. அலெக்ஸ் லவ்ஷன், மறைக்கல்வி நிலையம், மன்னார்.

"பணத்தை இழந்தால் சொற்ப நஷ்டம் நேரத்தை இழந்தால் எல்லாமே நஷ்டம்"
- புத்தகத்தில் படித்தது -
- இ. மயூறி, ப. க. கொட்டு மேற்கு, மன்னார்.

# வாகரைவாணன் வழங்கும் அந்தோனியார் காவியம்

## காவியத் தொடர் -1

### பாயிரம்

அற்புதம் என்னும் சொல்லின் அர்த்தமாய் விளங்கும் எங்கள்
நற்றவத் தூயோய்! உன்னை நறுந் தமிழ் மொழியிற் பாட
கற்கண்டுச் சொற்கள் கொஞ்சம் கடனாகத் தருவாய் அய்யா
அற்பன் நான் வேண்டுகின்றேன் அருங்கொடை வள்ளல் நீயே!

வேற்றுமை ஏதுமின்றி வெவ்வேறு சமயத்தாரும்
போற்றியே வணங்குவார்கள் புனிதன் உன் பாதம் தன்னை
ஏற்றவர் வேண்டுகோளை ஏந்தல் நீ அருளக் கண்டு
நாற்றிசை எல்லாம் உந்தன் நனி புகழ் பரவுமாமே!

உன்னைப்போல தூயன் இந்த உலகெங்கும் கண்டதில்லை
மண்ணெல்லாம் உந்தன் பக்தர் மாகடல் போலுமாவார்
கண் கொள்ளாக் காட்சியாகும் காலையில் கோயில் தோறும்
விண்ணது தானும் சொக்கி வியந்துனை வாழ்த்துமாமே!

வாரத்தில் செவ்வாய் தோறும் வருமுந்தன் அடியார் கூட்டம்
பாரத்தை இறக்கி வைக்கும் பரிவுடன் தாங்கிக் கொள்வாய்
ஈரத்தால் உருகிப் போவார் எளியவர் துயரம் கண்டு
ஆரத்தான் தழுவிக் கொள்வாய் அவர் நலம் அடைகுவாரே

நானுந்தான் உன்னை வேண்டி நாயெனக் கெஞ்சுகின்றேன்
ஏனத்தைக் கையில் ஏந்தும் ஏழை நான் பிச்சைக்காரன்
வானத்தைப் போல நீயும் வரமெனக் கருளுவாயே
ஊனந்தான் நீங்கிப் போகும் உறவெலாம் மகிழுமாமே!

உன்னருள் இருந்தால் போதும் உலகிது தோற்றுப் போகும்
விண்ணருள் இல்லையென்றால் வினையது தீருமாமோ?
கண்ணருள் செய்வாய் அய்யா காவியம் பாடுகின்றேன்
இன்னருள் பொழிந்தால் போதும் இலக்கியம் சிறக்குமாமே!

### கடற்கரைத் தேசம்

போர்த்துக்கல் என்னும் அந்தப் புண்ணிய தேசம் எங்கும்
ஆர்த்தெழும் அலையின் கூட்டம் அரங்கெனும் மண்ணின்மீது
கூத்தது நடத்தும்; கானல் குருகுகள்; நண்டுக் கூட்டம்
பார்த்தவை மகிழும் அந்தப் பரவசம் சொர்க்கமாகும்

அழகுறு தேசமாகும் ஐரோப்பாக் கண்டந் தன்னில்
வளமொரு கொடையேயாகும் வாரிதி அள்ளிக் கொட்டும்
பழமுதிர் சோலை எல்லாம் பறவைகள் கொஞ்சிப் பேசும்
நிழலதைக் கண்டால் போதும் நிரையது படுத்துக் கொள்ளும்

நெய்தலில் ஊரும் அந்த நெடுங்கொடிப் பெண்கள் எல்லாம்
செய் மலர் சூடும்; வண்டல் செழிப்பினால் தாழம் பூக்கள்
வையகம் எல்லாம் வாசம் வாரியே அள்ளிக் கொட்டும்
மை ஒளிர் அலைகள் வீசும் மண்ணதை மறக்கலாமோ?

கடலதன் ஓரமாகக் கவினுறு கிளிஞ்சில் எங்கும்
கடையது விரித்தாற்போல கண்களை அள்ளிக் கொள்ளும்
உடல் நல வளர்ச்சிக்காக ஒவ்வொரு நாளும் காலை
நடைபயில் நண்டுக் கூட்டம் நமக்கொரு பாடமாகும்.

கடற்கரைத் தேசமாகும் கலங்களைக் கண்டாற்போதும்
படையதன் நினைவே தோன்றும் பரம்பரை வீரம் ஊறும்
இடமதைப் போலும் இங்கே இன்னுமோர் தேசம் இல்லை
படமென நெஞ்சந் தன்னில் பதிந்திடும் நெய்தல் பூமி!

(காவியம் நீளும்)

# கதையும் கருத்தும் களமும்

அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி

சோக்கிரட்டிஸ் என்ற தத்துவ ஞானி பல மணித்தியாலங்களைத் தம் சீடர்களோடு செலவிடுவார். அன்றைய தினம் தன்னுடைய வீட்டில் இச்சந்திப்பை ஒழுங்கு செய்திருந்தார். கலந்துரையாடலில் அமிழ்ந்துபோய் இருந்ததால் மனைவியின் அழைப்பு சோக்கிரட்டிசினுடைய காதுகளில் விழவில்லை. இதனால் மனைவி சோக்கிரட்டிஸ்சைத் திட்டித்தீர்த்தாள். மனைவியினுடைய அவதூறான வார்த்தைகளைக்கூடப் பொருட்படுத்தாமல் சீடர்களோடு உரையாடிக்கொண்டிருந்தார்.

இதனால் மனைவி கடும் கோபமடைந்தாள். பெரியதொரு வாளித் தண்ணீரை வீட்டின் மேல்மாடி அறையிலிருந்து சோக்கிரட்டிஸ்சின் மீது ஊற்றினாள். சோக்கிறட்டிஸ் தோய்ந்து போனார். அவளின் இச்செயலால் சீடர்கள் அதிர்ந்து போனார்கள். எந்தவித பதற்றமும் இல்லாமல் சோக்கிரட்டிஸ் சீடர்களைப் பார்த்து, "நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். காரணம் இவ்வளவு நேரமும் இடி இடித்தது. இப்போதுதான் மழை பெய்திருக்கிறது!... இனி நிலமை சரியாகிவிடும்" என்று கூறிவிட்டுத் தொடர்ந்து கருத்தமர்வைச் செய்தார்.

மனித உறுப்புகளில் நா முக்கியமானதொன்று. பல்வகை சுவைகளான இனிப்பு, உவர்ப்பு, உறைப்பு, புளிப்பு, கசப்புப் போன்ற சுவைகளை வேறுபடுத்தி உணவுப்பண்டங்களை சுவைத்து உண்ண உதவுகிறது. காய்ச்சல், தலையிடி, இருமல், தொண்டை நோ என்று மருத்துவரிடம் செல்லுகின்றபோது அவர் நாக்கைப் பார்க்கிறார். இருப்பதை அப்படியே படம் பிடித்துக்காட்டும் 'கமறா' (Camera) போல உடல் நிலையை நாக்கு காட்டிவிடுகிறது. உணவை உட்கொள்ள, மற்றவர்களோடு உரையாட, பாடல்களைப் பாட என்று மிக முக்கிய அலுவல்களை நா நிறைவேற்றுகிறது. இந்த நாவில் ஒரு சிறு காயம் ஏற்படுகிறபோதோ அல்லது சிறுபுண் வருகின்றபோதோ மேற்சொன்ன செயற்பாடுகள் எத்தனை வேதனைகள், இடர்பாடுகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை ஒருவர் உணரலாம்.

இந் நா இறைவனைப் போற்ற, புகழ, வாழ்த்தத் துணை நிற்கிறது. அதேபோல இதே நா தான் ஒருவரைப் போற்றவும், தூற்றவும், வாழ்த்தவும் வீழ்த்தவும் பயன்படுகிறது.

"யாவாகாராயினும் நா காக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குட்பட்டு" என்று கூறும்போது வள்ளுவன் நாவினால் ஏற்படக்கூடிய தீமைகளை நாவடக்கத்தினால் விலக்கி வாழலாம் என்கிறார்.

மற்றொரு குறளில், "தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு' என்று சொல்லும்போது நெருப்பினால் சுட்ட காயங்கள் சுகமாகின்றன. ஆனால் தீய வார்த்தைகளை நாவினால் திட்டித் தீர்க்கும்போது அது ஆறாத உளக்காயங்களை ஏற்படுத்துகின்றன என்கிறார்.

மீண்டும் திரும்பி வராதவைகளில் மூன்றைக் குறிப்பிட்டுக் கூறுகிறார்கள்,

1. எய்யப்பட்ட அம்பு (இக்காலதிற்கேற்ப இதனை மொழி பெயர்த்தால் "வைத்த வெடி", அல்லது "சுட்ட சூடு" எனலாம்).
2. கிடைத்த சந்தர்ப்பம். 3. பேசிய வார்த்தை.

அம்பை எய்வதற்கு முன் நன்றாக சிந்திக்க வேண்டும். அம்பை எய்தபின் திரும்பி அழைக்க முடியாது. கிடைத்த சந்தர்ப்பங்களும் அவ்வாறுதான். வெவ்வேறு சந்தர்ப்பங்கள் வரலாம், ஆனால் போன சந்தர்ப்பம் போனதுதான். இதேபோன்றுதான் பேசப்பட்ட வார்த்தையும்! பேசியபின் யோசிப்பவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். தற்காலப் பாடல்களில் கேட்பதுபோல, "... போர்த்திக்கிட்டு படுத்துக்கவா, படுத்துக்கிட்டு போத்திக்கவா.." போன்றவை சாத்தியமானவை. இவற்றை எந்த ஒழுங்கில் செய்தாலும் பெரிய வித்தியாசம் இல்லை. ஆனால் பேசிவிட்டு என்ன பேசினேன் என யோசித்துக் கொண்டிருக்க முடியாது. முதலில் யோசியுங்கள். பின்னர் பேசுங்கள், பல நன்மைகள் உண்டாகும்.

தொலைபேசியில் அதிக நேரம் உரையாடும் பெண்மணி ஒருவர் இருந்தார். அன்றைய நாளில் தொலைபேசி அழைப்பைப் பெற்றுக் கொண்டவள் ஐந்து நிமிடங்களுக்குள் உரையாடலை முடித்துக்கொண்டாள். அவளோடு கூடவே இருந்த அவளுடைய நண்பி, "என்னடி இவ்வளவு குயிக்கா (Quick) கதச்சி முடிச்சிற்றா.....? எனக் கேட்டபோது அவள், "அடப்போடி அது றோங் நம்பர்" (Wrong Number)' என்றாளாம். (றோங் நம்பர்" சொல்ல அவளுக்கு ஐந்து நிமிடங்கள் வரை எடுத்தது என்றால் பாருங்களேன்!...

நாவுக்கு சற்று நேரம்கூட ஓய்வு கொடுக்காத பலர் இருக்கிறார்கள். ஒன்று எதையாவது சப்பித் துப்பிக்கொண்டிருப்பார்கள். அல்லது யாரையாவது அறுத்துக்கொண்டிருப்பார்கள். இவற்றில் சுவாரசியமான விடயம் ஒன்று உண்டு, எதையாவது எப்போதும் சப்பித்தள்ளிக்கொண்டிருப்பது அதனைச் செய்பவருக்கே கேட்டைக் கொணரும். ஆனால் யாரையாவது அறுத்துக்கொண்டிருப்பது வேறு பலருக்கு துன்பத்தை ஏற்படுத்தும். இவர்களுக்கு சற்று நேரம் அமைதியாக இருப்பது, ஏதோ தற்கொலை செய்வது போன்றதொன்றாக இருப்பதால் அகப்படுகின்றவர்களை இருத்தி வைத்து அறுத்துக்கொண்டிருப்பார்கள். இப்படி அகப்படுகின்றவர்களின் பாடு அதோ கெதிதான்!... புலிவாய் கன்றுபோல், யானைவாய் கரும்புபோல் கடித்துக் குதறி சப்பித்துப்புவார்கள்!.. இவர்களைப் போன்றவர்களுக்குத்தான், 'வாய் இருந்தால் வங்காளம் போகலாம்' என்று முன்னோர் சொல்லி வைத்தார்கள்.

நித்திரையில் நடப்பவர்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களோ தெரியாது? ஆனால் அப்படிப்பட்டவர்கள் உண்மையில் இருக்கிறார்கள். இதேபோல ஆங்கிலத்தில் 'சொம் அம்பியுலன்ற்' (SOMN AMBULANT) என்கிறார்கள். இதேபோல நித்திரையில் கதைப்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் நாள் முழுவதும் அலட்டலில் ஈடுபடுபவர்களாக இருக்கலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது. ஆக, 'வேலை வெட்டி' இல்லாமல் கதைத்துக்கொண்டு திரிபவர்களுடைய வேலை அகப்பட்டவர்களை வைத்து அறுத்துக்கொண்டிருப்பதுதான். இவர்களுடைய பேச்சில் மற்றவர்களைப்பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாம் சேர்த்து வியாபித்துக்கொண்டிருப்பார்கள். தங்களைப் பற்றிய விடயங்களைக் கதைத்தால் வில்லங்கமாகிவிடும் என்பதால் இவர்களுடைய பேச்சின் பெரும் பகுதி மற்றவர்களைப் பற்றியதாகவே இருப்பதை அவதானிக்கலாம்.

மகாத்மா காந்தி வாரத்தில் ஒருநாள் மௌனமாக இருப்பாராம். யாருடனும் எக்காரணம் கொண்டும் பேசமாட்டாராம். ஒரு வாரத்தில் ஒருநாள் வாய்க்கட்டுப் போட்டுவிடுகிறார். அதிகம் வேலை வெட்டி இல்லாது கதைப்பவர்கள் மகாத்மாகாந்தியின் முன்னுதாரணத்தைப் பின்பற்றுவது நல்லது.

யாக்கோபு என்ற இயேசுவின் சீடர் நாவடக்கம் பற்றி மிக அற்புதமான கருத்தை முன்வைக்கின்றார். "குதிரையைக் கடிவாளம் கொண்டு கட்டுப்புடுத்துகிறார்கள். பென்னம் பெரிய கப்பலை சின்னஞ் சிறிய சுக்கானைக் கொண்டு விரும்பிய திசையில் செலுத்துகிறார்கள். அதுபோலதான் நாவும். மனித உடலில் சிறிய உறுப்புதான். எனினும் இதன் பயன்பாடும், பாதிப்பும் மிகப்பெரிது. ஒரு சிறு தீப்பொறி ஒரு பெரிய காட்டையே அழித்துவிடுகிறது. அவ்வாறே நாவைக் கட்டுப்படுத்த முடியாவிடில் அது பல தீமைகளை வெளிக்கொணரும். (யாக் 3:1-12).

யாராவது இறந்துபோகிறபோது உடனடியாகக் கண்களை மூடிவிடுகிறார்கள். கால்களை சேர்த்து இரு பெருவிரல்களையும் கட்டுகிறார்கள். கைகளையும் அவ்வாறே நெஞ்சுக்கு மேல் வைத்து கட்டுகிறார்கள். அத்துடன், குறிப்பாக தலையோடு சேர்த்து நாடிக்கும் கட்டுப்போடுகிறார்கள். ஏன் இவ்வாறு நாடிக்குக் கட்டுப் போடுகிறார்கள் என்று இப்போதுதான் புரிகிறது!... சிலர் தாங்கள் இறந்த பின்னரும் தாங்கள் இறந்து விட்டோம் என்பதை மறந்து கதைக்க பேசத் தொடங்கிவிடுவார்கள் என்பதால்தான் இவ்வாறு கட்டுப்போடுகிறார்கள் போலும்!....

நிறையச் சிந்தித்து, கொஞ்சம் பேசி, கனக்கச் சாதிப்போம்.

# இளைஞர் பொழிவு

இளைஞர்களின் இதயத் தேடல்களுக்கு
வின்னி யோசப் அடிகளாரின்
விறுவிறுப்பான பதில்

# என் கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி:** அன்புள்ள தந்தை அவர்களே,
இரு பெண்களிடையே அல்லது இரு ஆண்களிடையே ஏற்படுவதுதான் நட்பா?
ஏன் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே நட்பு வராதா? அப்படி வந்தால் ஏன் அதைத் தவறாகவே பேசுகிறார்கள்! இதனை சற்று தெளிவுபடக் கூறுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*பெ. சிந்துஜா, பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.*

**பதில்:** நட்பை மனிதர்களிடம் மட்டுமல்ல, அனைத்து ஜீவன்களிடமும் அதைப் பார்க்க முடிகின்றது. நட்பு இரு ஆண்களிடையே தொடர்ந்தால் அது மேலானது, இரு பெண்களிடையே தொடர்ந்தால் அது இனிமையானது என்று சமுதாயம் நம் மனத்திரையில் பதிவு செய்துவிட்டது.

இந்த நட்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே மலர்கின்றபோது அதைக் காதல் என்றும் காமம் என்றும் சமுதாயம் கொச்சைப்படுத்தி வைக்கின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படுகின்ற நட்பு புனிதமானது, உண்மையானது, உயர்ந்தது!

ஒரு நாள் நான் திருச்சி செல்வதற்காக பஸ்ஸில் ஏறினேன். மூன்று பேர் உட்கார்ந்து இருக்கின்ற இடத்தில் நடுத்தர வயது பெண்மணி மட்டும் உட்கார்ந்திருந்தார். வேறு இடமில்லாததால் அந்த இடத்தில் உட்கார்ந்தேனோ இல்லையோ அந்தப் பெண்மணி துள்ளி எழுந்து நின்று முறைப்பாடு செய்ய ஆரம்பித்துவிட்டாள். கண்டக்டர் ஓடிவந்து "ஏன் சார், பெண்கள் இருக்கும் சீட்டில் அமர்ந்தீர்கள்?" எனக் கேட்டார். நான் பரிதாபமாக முழித்தேன்.

நான் வெளிநாடு சென்று ஒரு கருத்தரங்கில் கலந்துகொண்டேன். அந்தக் கருத்தரங்கு முடிந்ததுமே எல்லாப் பெண்களும் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்கள்.

வடஇந்தியாவில் இரண்டு பேர் இருந்து செல்கின்ற இருக்கையில் நான்கு பேர். ஆண் - பெண் வித்தியாசமில்லாமல் அமர்ந்து சென்றிருக்கின்றேன்.

இந்த மூன்று நிகழ்வுகளுமே அந்தந்த இடத்தின் கலாச்சாரத்தை வெளிப்படுத்துகின்றன. நமது கலாச்சாரத்திலே ஆணும் - பெண்ணும் பார்த்துவிடக்கூடாது, பேசிவிடக்கூடாது. அதை மீறி தனிமையில் பார்த்துப் பேசிவிட்டால் எல்லாம் போச்சு. எத்தனை வாய்களுக்கு அசைபோட தீனி கிடைத்திருக்கும். கண், காது, மூக்கு வைத்து எத்தனை கதைகளை உருவாக்குவோம். அவர்களைக் கொச்சைப்படுத்தி ஊரைவிட்டே ஓட வைக்க மாட்டோமா? எத்தனை தற்கொலைகள் இதனால் நடந்திருக்கின்றன!

ஏன்? இதன் காரணம் என்ன? நமது கலாச்சாரம், மூடி மறைக்கும் நம் பண்பாடு, போலியான வாழ்க்கை, வக்கிர எண்ணம் இவை அனைத்துமே நம் சமுதாயத்தின் சாபக்கேடு. நம்முடைய கலாச்சாரத்தில் ஆண் - பெண் உறவு ஆரோக்கியம் அற்றதாக இருக்கின்றது. இதனாலேயே சிறு வயதிலே ஆண், பெண்ணைப் பிரித்து வைத்தும், அவர்களுக்கு தனித்தனி பள்ளிக்கூடங்கள் அமைத்தும் அவர்களது ஆளுமையை சிதைத்து விடுகின்றோம். இப்படிப் பிரித்து வைப்பது ஆளுமையை சிதைப்பது மட்டுமல்லாமல், இருவருக்கும் இடையே ஏற்படுகின்ற உறவானது காதல், காமம், செக்ஸ் ஆகத்தான் இருக்க வேண்டும் என்ற தன்மையை ஏற்படுத்தி விடுகின்றது. இந்த நிலையில் இருப்பவர்கள் எப்பொழுதாவது பேசுவது, என்ற ஆரோக்கியமற்ற நிலையை உருவாக்குகின்றது. இதனால் உண்மையான நட்பு வளராமல், வக்கிர எண்ணங்களுடன் பேசவும், பழகவும், பார்க்கவும் ஆரம்பித்துவிடுகின்றோம்.



இந்த மாதிரி உறவின் அடிப்படையில்தான் வீட்டைவிட்டு ஓடுவதைப் பார்க்கின்றோம். நமது வாழ்க்கை நிகழ்ச்சிகள் நமக்கு இதை வெளிப்படுத்துகின்றன.

அடுத்தவரின் அந்தரங்க வாழ்க்கையை அறிய ஆசைப்படுகின்றோம். பிறரோடு சண்டையிடும் போது, அவர்களது ஒழுக்கத்தைப் பற்றி கெட்ட வார்த்தைகளையும் உபயோகிக்கின்றோம்.

நான்கு இளைஞர்கள் சேர்ந்து விட்டால், பெண்களை கேலி பண்ணுவது, சினிமா, செக்ஸ் இவற்றைப் பற்றித்தான் பேச்சாக உள்ளது. இதற்கு தீனி போடுவதற்கென்றே எத்தனையோ வார இதழ்கள், மஞ்சள் பத்திரிகைகள் .....! நம் மாணவ மாணவியர்கள் விரும்பிப் படிக்கும் இதழ்கள் என்னவென்று எண்ணிக்கை எடுத்துப்பாருங்கள் புரியும்.

நாம் பார்க்கின்ற 98 சதவீத சினிமாக்களிலே பெண்கள் என்றாலே காதலுக்குரிய, காமத்துக்குரிய பெண்களாகத்தான் சித்திகரிக்கப்படுகின்றார்கள். ஆகவே பெண்கள் என்றால் இச்சையுடன் நோக்குவதும், வக்கிர எண்ணமும்தான் நம் மனதில் தோன்றுகிறது.

நற்செய்தி கூறுகின்றது, ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும் அவளுடன் விபச்சாரம் செய்தாயிற்று. ஆனால் இன்று நமது சமுதாயப் பெண்களை இச்சையுடன் பார்த்து, பழகி, மனம் செக்ஸ் பற்றிய எண்ணங்களால் நிரம்பி வழிய - வெளியில் நாங்கள் படிக்கமாட்டோம், நட்புடன் பழகமாட்டோம் என்ற ஒரு மாயையை உருவாக்கியுள்ளோம்.

எந்த ஆணும் - எந்தப் பெண்ணுடனும் அன்பாகப் பேசலாம், நட்பாகப் பழகலாம், எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளலாம், ஒரு சகோதரத்துவ உறவை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்ற நிலை இருந்தால், ஆண், பெண் உறவு ஆரோக்கியமானதாக இருக்கும்.

நட்பு உடல் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. நட்பு என்பது சினேகம். ஆழ்ந்த அன்பு, அன்பினால் விளையும் அக்கறை, அக்கறை காட்டும் பரிவு, பரிவு தரும் அமைதி, அமைதியில் ஏற்படும் படைப்பாற்றல், இது நிபந்தனையற்றது. பிறரின் நன்மையையே நாடுவது. மன்னிக்கின்ற மனப்பாங்கு உடையது, எந்தக் கட்டாயத்திலும் பிறருக்கு தீங்கு விளைவிக்காது.

உண்மையான நட்பு ஆண் - பெண் இருவருக்குமிடையே மலர்ந்தால், சமுதாயம் என்ன பேசுமோ என்றெண்ணி அதை கசக்கிவிட வேண்டாம்.

இயல்பான உறவு தொடரட்டும். குறிக்கோளை அடைவதற்காக துணை நிற்கும் தோழமை வாழ்வுப் பயணத்தில் வந்துவிட்டால் அது பாதுகாக்கப்பட வேண்டிய பாசப்பிணைப்பு. இது இறுதிவரை நிலைத்து நின்றால் சொர்க்கத்தை இங்கேயே நீங்கள் சுவைக்கலாம். நிச்சயமாக!.

# மகிழ்ச்சி தரும் நட்பு

"பிரிந்து போன நட்பினைக் கேட்டால் பசுமையான கதைகளைச் சொல்லும்.." என்று தொடரும் பாடலடிகளை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். மறக்கக்கூடிய பாடலா அது!

நட்பின் புனிதத்தை, இலக்கணத்தை இனிமையாகக் கூறும் இசையல்லவோ அது. உண்மையிலேயே உள்ளத்திற்கு இதம் சேர்ப்பது தூய்மையான, கள்ளங்கபடமற்ற உண்மை நட்புறவாகும். உலகிலே பிறந்த அனைத்து உயிர்களுக்கிடையேயும் நட்பு இருக்கின்றது. இருக்க வேண்டும். நட்பு மனதுக்கு மகிழ்ச்சி தருகின்றது. புரிந்துணர்வுக்கு வழிகோலுகின்றது.

நாம் ஒருவரோடு நட்புக்கொண்டு விட்டோமேயானால் அவருக்கு நம் மனதில் ஒரு தனி இடம் கொடுத்து விடுகின்றோம்.

வீட்டில் நமது பெற்றோர், உறவினர் என்று கூடிவாழும் எமக்கு வீட்டை விட்டு வெளியேறும்போது இந்த உறவுகள் தொடர்வதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் பாடசாலையிலோ, வீட்டிலோ எமக்கு அன்பைத் தருவது, தனிமையைப் போக்குவது நாம் உருவாக்கிய நட்பே... நட்புள்ளங்களே. சமூகத்தில் நாம் எதிர்கொள்ளும் எத்தனையோ விடயங்கள், பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கெல்லாம் நமது பெற்றோரிடமே கூறித் தீர்வைப் பெறமுடியாது. சில விடயங்களை நாமேதான் கையாள வேண்டும். இத்தகைய தருணங்களில் எமக்கு உதவியாக, எமது குறைநிறைகளைச் சுட்டிக்காட்டி இது சரி, இது பிழை என்று உணர்த்தும் உள்ளமாக எமது நட்பு அமைகின்றது. நிச்சயமாக அமைய வேண்டும்.

எனினும் நட்புறவில் தூய அன்பு பிரதிபலிக்க வேண்டுமானால் அதை அடைந்திருக்கும் உள்ளங்கள் தூயதாக இருக்க வேண்டும். சிறந்த அந்நியோன்யமும், விட்டுக்கொடுப்பும் அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருக்க வேண்டும். இதற்கு நாம் உருவாக்கும் நட்பு உண்மையானதாக இருக்க வேண்டும். கலப்படமற்ற நட்பானது ஆயுள் வரை சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது. நல்ல நட்பு நமது வெற்றிகளுக்கு உறுதுணையாகவும் அமையக் கூடியது என்பதை எம்மால் மறுக்க முடியாது. ஆகவே சிறந்த நட்பைத் தேடிக்கொள்ள நீங்களும் பிறருக்கு நல்ல நண்பர்களாய் இருந்துகொள்ளுங்கள். அத்துடன் நல்ல நட்புள்ளங்களை தேடிக்கொள்ளுங்கள்.

*ம. அருணோசியா, பாலைக்குளி, அடம்பன்.*

# எதிர்ப்பு ..! எதிர்ப்பு..!



தோழுரம் கொண்ட தோழனே!
நீ எப்போதாவது எதிர்ப்பைச் சந்தித்திருக்கின்றாயா? இல்லை எப்போதுமே எதிர்ப்பைச் சந்தித்துக்கொண்டிருக்கிறாயா? தளர்ந்து விடாதே! எதிர்ப்பது என்பது தடைக்கல் அல்ல படிக்கல். வழவழப்பான பாதை உனது வசத்துக்கு வராது. உராய்வுகள் தேவை. உராய்வுகள் பாதத்திற்கு உதவிகள். ஆமாம் தோழனே எதிர்ப்புகள் - பிடிமானங்கள். எதிர்ப்பு என்பது உனது வேள்வியை அணைக்கும் மழையல்ல, நெய். எதிர்ப்பு என்பது உனது இரத்தத்தில் சுறுசுறுப்பு ஏற்றுகின்றது. சூழ்நிலையை சுத்திகரிக்கின்றது.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற பழமொழியை நான் படித்திருக்கிறேன். ஆனால் "எதிரியில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று என் தாத்தா சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஒரு நாள் வேப்ப மரங்களின் பக்கக் கிளைகளை அவர் வெட்டிக்கொண்டிருந்தபோது "ஏன் அதை வெட்டுகிறீர்கள்?" என வினவினேன். "வெட்டினால்தான் வளரும்" என அவர் எனக்கு ஞானப்பால் ஊட்டினார். எதிர்ப்பு எப்போதும் இரண்டு பாஷை பேசும். அது பெரும்பாலும் அழிவு மொழி பேசும். எப்போதாவது ஆக்க மொழி பேசும்.

இளைஞனே! நிலவைப்போல் இரவல் வெளிச்சத்தில் வாழ்பவனாக இல்லாமல், சூரியனைப்போல் சுயமாக ஒளிவிடவேண்டும் என்ற துடிப்பு உன்னுள் வெடித்து வரலாம். அப்போதுதான் உனது சுற்றம் இந்த முன்னூறு ரூபாய் வேலையை விட்டுவிடாதே என்று கூறும். உலகத்தின் ஒவ்வொரு மாற்றங்களையும் இப்படி ஒரு கூட்டம் எதிர்த்துத்தான் வந்திருக்கிறது. பாவம் அவர்கள், கப்பலில் ஏற திராணியில்லாததால், கவிழ்ந்துபோன கட்டுமரமே கடவுள் என்பவர்கள்.

இந்த சமூகத்தில் உழைப்புக்குத்தான் மதிப்பில்லையே தவிர உழைப்பவனுக்கு மதிப்பில்லாமலில்லை. நம்மில் பலருக்கு முப்பது வயதிலேயே வாழ்க்கை முடிந்து விடுகிறது. முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறார்கள். இளைஞனே! யோசிக்காமல் முடிவெடுப்பவன் பேதை! முடிவெடுத்தபின் யோசிப்பவன் கோழை!

உனக்கு முழு நம்பிக்கை வந்துவிட்டதெனில் முன்வைத்த காலை நீ பின்வைக்காதே.

இன்னொன்று சொல்லுகிறேன், இளைஞனே, எதிர்ப்புக்களில் இரண்டு வகை. சில எதிர்ப்புகளைக் கண்டு நீ சிரித்துவிட வேண்டும். சிரிக்க வேண்டியவைகளை நீ எரிக்க நினைக்காதே! எரிக்க வேண்டியவைகளைப் பார்த்து நீ சிரித்துக் கொண்டிருக்காதே. - *ஆர். றொபின்சா,*

*சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன் நூலில் இருந்து.*

# விட்டுக்கொடுத்தால் நட்பு நிலைக்கும்

**இ. டக்ஷினி, உப்புக்குளம், மன்னார்.**

பொதுவாக இரண்டு நண்பர்களுக்கிடையில், அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்கையில், அவர்களுடைய பழக்கவழக்கங்களில், விருப்பு வெறுப்புக்களில் நமக்கு ஒத்துப் போகாத காரியங்கள் இருப்பதை நாம் அறிந்துகொள்கின்றோம்.


அதேநேரத்தில் நண்பருக்கு பலவிதமான மாற்றங்களை உண்டுபண்ணி, அவரை நம்முடன் ஒத்துப்போக வைப்பதில் நமது 'ரென்ஷன்' கொஞ்சம் குறையும்.

எப்படி என்கிறீர்களா? தன்னலமற்ற, சுயநலம் கருதாதவராக நீங்கள் இருக்க வேண்டும். உதாரணத்துக்கு உங்கள் நண்பருக்கு இசையைக் கேட்பது பிடிக்காது. ஆனால் நீங்களோ, இசையை இரசிப்பதில் விருப்பமுள்ளவர். நண்பருக்காக நீங்கள் கொஞ்சம் விட்டுக்கொடுக்கலாம்.

இப்படி சில விஷயங்களில் நீங்கள் பொறுத்துப் போகவேண்டும். அதாவது முதலில் உங்கள் நண்பரின் இரசனைகளை சகித்துக் கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள். ஒழுக்கம் சம்பந்தமாக இழிவானதாக இல்லாதவரை நீங்கள் சகித்துப்போக பழகிக் கொள்ளலாம். பொருள் சம்பந்தமாக தேவையற்ற சண்டை, சச்சரவுகள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். கோபப்படுவது, அல்லது சில சமயங்களில் சிடுசிடுத்துக்கொள்வது, முறைத்துப் பார்ப்பது என்பதெல்லாம் சிநேகபூர்வமான உறவுக்கு எந்த விதத்திலும் உதவாது.

தாராளமாக பகிர்ந்தளிக்கும்படிதான் எல்லா மதமும் நமக்கு கற்பிக்கின்றது. எதற்கும் மௌனம் சாதிக்காதீர்கள். உங்கள் பிரச்சினையை அமைதியாக, அன்பாக எடுத்துச்சொல்லுங்கள். ஒருவர் மற்றவரின் பொருளுடமைகளை மதித்து நடக்க முயற்சி பண்ணுங்கள். நல்ல விதத்தில் நீங்கள் உங்கள் நண்பரோடு ஒத்துப்போகவும், அனுசரித்துப் போகவும் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுதுதான் உங்களைப் பற்றி நீங்களே கற்றுக்கொள்ள முடியும்.

நண்பருடன் ஒத்துப் போவதில் முயற்சியும் தியாகமும் இருப்பது




உண்மை. ஆனால் சரியான வழிகளைப் பின்பற்றவும், சமாதானமாக சேர்ந்திருக்கவும் நீங்கள் கற்றுக்கொள்ள முயற்சிக்கும்போதுதான், எல்லா நலத்தையும் அனுபவித்து மகிழ்வீர்கள்.

சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கிப் போகும். இவர்கள் அல்லவா நண்பர்கள் என்று ஊர் உலகம் உங்களைப் போற்றும். இதுவல்லவா நட்பு! என்று வியந்து பார்க்கும்.

ஆகையால் நல்ல நண்பர்களாக நட்புறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் நட்பை விரிவாக்குங்கள். அடுத்தவர்களுக்கு ஒரு ஆதாரசாட்சியாக வாழுங்கள். குற்றங்குறைகளை மறந்துவிடுங்கள். நாளடைவில் இந்த நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடியுங்கள். உங்களையும் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும், உங்கள் புனிதமான நட்புறவின் மூலம் நல்வழிக்கு இட்டுச்செல்லுங்கள். மனக்கசப்பு என்பது எந்நேரத்திலும் உங்களை நெருங்க முடியாது. நல்ல நண்பர்களாக, நீங்கள் வாழ்நாள் முழுவதும் இருப்பீர்கள்.



# பனை இறையியல்
## (ஈழத் தமிழர்களுக்கான ஓர் இறையியல் தேடல்)



அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி (அமதி)

> ஈழத் தமிழர்களுக்கான இறையியல் ஒன்றைக் கட்டியெழுப்பும் தேவை இன்று இம்மண்ணில் எழுந்துள்ளது. எனவே இது தொடர்பான பல்வேறு கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள மன்னா களம் அமைத்துக்கொடுக்கின்றது. ஈழத்தமிழர்களுக்கான இறையியல் தொடர்பான தேடல் இப்பகுதியில் தொடரும். - பதிப்பாசிரியர்-

### அறிமுகம்

இறையியல் என்பது இறைவனைப்பற்றிய விஞ்ஞான கற்கை நெறி என்று கூறலாம். இறைவெளிப்பாட்டின் ஒளியில் இறைவன் வெளிப்படுத்துபவற்றை அறிந்துகொள்ளுதலாகும். இறைவெளிப்பாடு கிறிஸ்துவில் நிறைவுபெற்றது என்பதில் இரு கருத்து இருக்கமுடியாது எனினும் வாழ்வியல் சூழ் நிலைகளினூடாக இறைவன் இன்றும் தன்னை வெளிப்படுத்துகின்றார் என்பதில் ஐயமில்லை.

காலத்தின் குறிகளை (Signs of the Time) உய்த்துணர்ந்து இறைவெளிப்பாட்டின் பின்புலத்தில் விளங்கிக்கொள்வதே இறையியலாளனின் பணியாகும். இறைவெளிப்பாடு வாழ்வுச் சூழலில் விளங்கிக்கொள்ளப்படும்போதுதான் நம்பிக்கை வாழ்வு ஆழமாகின்றது, அர்த்தத்தைக் கொடுக்கின்றது. இல்லையெனில் எமது நம்பிக்கை வாழ்வு (Faith Life) சில கிறீஸ்தவக் கடமைகளை நிறைவேற்றுவதோடும் சமய அனுட்டா - னங்களோடும் திருப்தியடைந்துவிடும் வாழ்வாக மாறிவிடும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் நிலவும் சூழலின் இறைவெளிப்பாட்டை விளங்கி இசைவாக்கம் பெற்று ஒரு சூழமைவு இறையியலுக்கு வித்திடுவதே (Contextual Theology) எமது தேடலின் நோக்கமாகும். அழிவுகளையும் மடிவுகளையும் சந்தித்து வாழ்வை ஒரு போராட்டமாக வாழும் நிலையில் இறைவன் வெளிப்படுத்தும் செய்தியை புரிந்துகொண்டு பதிலிறுக்கும்போதுதான் எமது நம்பிக்கை வாழ்வில் இருப்பிற்குரிய அர்த்தத்தை விளங்கிக்கொள்ளமுடியும். இல்லையெனில் இந்நிகழ்வுகளை காலஓட்டத்தில் இயல்பாக நடந்தேறும் நிகழ்வுகளாக கணிக்கும்போது எமது வாழ்வும் இருப்பும் அர்த்தமில்லாமல் போய்விடும்.

### ஏன் இந்தத் தேடல்?

கடந்த கால் நூற்றாண்டக எமது நாட்டில் நடைபெறும் இனமோதலினால் பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. பலர் தங்கள் முகமிழந்து, முகவரியிழந்து வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படைகளை இழந்து நடைபிணங்களாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

போரின் அனர்த்தத்தினால் தாராளமாக இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு மாபெரும் மனித அவலத்திற்கு முகம் கொடுப்பதற்கு எமது நம்பிக்கை வாழ்வு எத்தகைய விதத்தில் உறுதுணையாகவுள்ளது என்பதைப்பற்றிச் சிந்திக்கவும், நம்பிக்கை வாழ்வில் எத்தகைய தாக்கத்தை போரின் வடுக்கள் ஏற்படுத்தியுள்ளது என்பதை தேடுவதும் எமது நோக்கமாகும்.

குறிப்பாக தென் கொரியாவில் ஒடுக்கப்பட்ட ஏழைக் கிறிஸ்தவர்களின் வாழ்வியல் போராட்டத்தின் பின்புலத்தில் மின்யுங (Minjung) இறையியலும் இந்தியாவில் சாதியத்தின் அடிப்படையில் உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட தலித் இறையியலும் (Dalit Theology) பிலிப்பைன்ஸ் தேசத்தில் ஏழை மக்கள் சார்பாக உருவாக்கப்பட்ட போராட்ட இறையியலும் (Struggle Theology) எம்மைச் சிந்திக்க அழைக்கின்றது.

எமது நாட்டிலும் இன மோதலினால் சொல்லொண்ணாத் துயரங்களையும் அவலங்களையும் சந்தித்து வாழும் எமது தமிழ் மக்களுக்கென்று ஒரு தனித்துவ இறையியல் இன்று தேவை என்பதை உணர்ந்ததன் முகமாகவும் கடந்துபோன துயர நிகழ்வுகளினூடாக இறைவனின் வெளிப்பாட்டை கண்டுணரவும் எடுக்கப்படும் முயற்சியாக நோக்கப்படுதல் அவசியமாகின்றது. தமிழ் மக்கள் கடந்துவந்த போராட்டப் பாதை வெறும் துன்பியல் நிகழ்வாக விளங்கிக்கொள்ளப்பட முடியாது. மாறாக இறைவன் துன்புறுகின்ற மக்களோடு போராடுகிறார் என்பதை இறையரசின் பின்புலத்தில் வைத்து நோக்க வேண்டும்.

### ஏன் பனை இறையியல் என்ற பெயர்?

எமது தாயகப் பிரதேசத்தில் கற்பகதருவாக, வளமாக விளங்கும் பனை எமது மக்களுடைய வாழ்வுடன் மிகவும் நெருங்கிய தொடர்புபட்டுள்ளதை யாரும் மறுக்கமுடியாது. அது தன்னை முழுமையாக மக்களின் பயன்பாட்டிற்கு அளிக்குமளவு தற்கையளிப்புடையது. அத்துடன் போரின் விளைவினால் எமது துண்டாடப்பட்ட, உடைக்கப்பட்ட வாழ்வை ஒப்பிட்டு நோக்கவும் உதவுகின்றது. மடிவுகளை, அழிவுகளை எமது மக்கள் சந்தித்தாலும் இன்றும் நம்பிக்கை எதிர்பார்ப்புகளோடு வாழுகின்ற உரத்தையும் உறுதியையும் பனை மரத்தின் உடல் குறித்து நிற்பதையும் இங்கு நாம் கவனத்திற்கொள்ளலாம்.

எனவே வாழ்வியல் சூழமைவில் இறையியல் செய்யும்போது மக்களின் வாழ்வாதாரங்களோடு தொடர்புபட்டவைகளை இறைவெளிப்பாட்டின் ஒளியில் ஆய்ந்து விளங்கிக்கொள்ளும்போது நம்பிக்கை வாழ்விற்கு உரமூட்டுகின்றது.

தன்னையே மக்களுக்கு முழுமையாகக் கையளித்து கரைந்து போகும் பனையைப்போன்று இறைவன் இயேசு கிறிஸ்துவில் தன்னை வெறுமையாக்கி வாழ்வு தந்ததை எமது தமிழர் வாழ்வின் சூழலில் நோக்குவதற்கும் ‘பனை’ என்ற குறியீடு எமக்கு உதவலாம். இன்று எமது தமிழர் பகுதிகளில் பனை அளிக்கப்பட்ட வளமாக இருந்தாலும் மீண்டும் எமது மண் வளம்பெறும் என்ற நம்பிக்கையை இறைவெளிப்பாட்டின் பின்னணியில் விளங்கிக்கொள்ள ‘பனை இறையியல்’ அழைப்பு விடுக்கின்றது.

எமது சமூக வாழ்வின் பல்வேறு பரிமாணங்களில் - குறிப்பாக கடந்த கால் நூற்றாண்டுப் போராட்ட வாழ்வில் இறைவன் எமது மக்களைத் தாங்கி வழிநடத்தி வந்த செயலை சந்தித்த மனித அவலங்களின் மத்தியிலும் மறந்துவிட முடியாது. எனவேதான் எமது தமிழ் மக்களுக்கென்று தனித்துவம் கொடுக்கும் ‘பனை இறையியல்’ என்ற அடையாளத்தோடு தேடலைத் தொடருகின்றோம்.

### பனை இறையியலின் அடிப்படைகள்

சூழமைவு இறையியல் செய்யும்போது இரு துருவங்களுக்கு உட்பட்டே செய்கின்றோம். ஒன்று முதலும் முடிவுமற்ற இறைவனின் வெளிப்பாட்டை அடிப்படையாகக்கொண்டது. இங்கு எமது கருப்பொருள் எமது பகுத்தறிவுக்குள் உட்படாத வரையறையில்லாத காலங்களை கடந்த பரம்பொருளாகும். அடுத்த துருவமாக விளங்குவது படைக்கப்பட்ட வரையறைக்குட்பட்ட மனிதனின் வாழ்வியல் சூழமைவுகளாகும்.

விவிலியத்தில் இறைவன் தன்னை பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை மீட்பு வரலாறு கோடிட்டுக் காட்டுகின்றது. எனவே விவிலியத்தை எமது தமிழ் மக்களின் வாழ்வியல் சூழலின் பின்னணியில் மீண்டும் பொருள்படுத்த தேவை இன்று ஏற்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் தாம் தேர்ந்தெடுத்த இனத்தை தமக்கு சொந்தமாக்கிக்கொள்ள பல்வேறு தடைகள் - போராட்டங்கள் அழிவுகள் மத்தியில் வழிநடத்திவந்த பின்புலத்தின் ஒளியில் எமது மக்களின் கடந்த கால அவல வாழ்வையும் நோக்குதல் சூழமைவு இறையியலுக்கு இன்றியமையாதது.

இறைவனை வெறும் கோட்பாடாக ஏற்றுக்கொண்டு நம்பிக்கை வைத்து வாழ்வது எமது இருப்பிற்கு அர்த்தம் கொடுக்கமுடியாது. தமிழர் வாழ்வுப் பயணத்தில் செயற்படும் (Dynamic) இறைவனாக கண்டுகொள்ளுதல் அவசியமாகுகின்றது. இதன் அடித்தளத்தில் தமிழர் போராட்ட வாழ்வைத் தெளிவாக விளங்கிக்கொண்டால் மட்டுமே சூழமைவு இறையியல் சாத்தியமாகும்.

(தேடல் தொடரும்)

# நூல் அறிமுகம்

## உள்ளூர் விழைதல்கள்... உள்ளூர் விழைதல்கள்..



**நூலின் பெயர்:**
‘பழந்தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்புத் தமிழ்’
**ஆசிரியர்:**
வாகரைவாணன்
**விலை:** ரூபா 175/=
**கிடைக்குமிடம்:**
வளனகம், மறைக்கல்வி நிலையம், மன்னார்.

பண்டிதர், வி. சீ. கந்தையா (மட்டக்களப்புத் தமிழகம் - பக்கம் 113) ஈழத்துப் பூராடனார் என்றழைக்கப்படும் திரு. செல்வராஜா கோபால் (மட்டக்களப்பு பிரதேச வழக்குச் சொற்கள், சொற்றொடர்களினதும் பழமொழிகளினதும் அகராதி – 1984 ) முதலான அறிஞர்கள் வகுத்துத் தந்துள்ள மட்டக்களப்புத் தமிழ்ச் சொற் தொகுதிகளோடு வேறு சிலவற்றையும் மனதில் வைத்துக்கொண்டு, இச்சொற்கள் எந்தெந்தத் தமிழ் இலக்கியங்களில் இருக்கின்றன என்று தேடிக் கண்டுபிடித்து, சான்றுகளோடு இந்நூலின் கண் வைக்கப்பட்டுள்ளன.

மேலைத் தேசத்தவர் மொழியையும் - அவர்தம் கலை கலாச்சாரத்தையும் ஏற்று, தம் மொழியையும் - பண்பாட்டையும் இழந்து கொண்டிருக்கும் தமிழர் பலர் - மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த மட்டக்களப்புத் தமிழைக்கண்டு, அலுத்துக்கொள்ளவும் கூடும். ஏன் அலட்சியமும் செய்யலாம். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் சொல்லக் கூடியது இதுதான்.

‘ஈழத்தமிழர்கள் எங்கிருந்தோ வந்தவர்கள்’ என்று பெரிதாகக் கூச்சலிடப்படும் இந்தக் காலத்தில், அவர்கள் தமிழகத்தின் தெற்கே குமரிக்கண்டம் இருந்த காலத்தில் இருந்தே இந்த மண்ணைச் சொந்தமாகக்கொண்டு வாழும் ஒரே ஒரு பழம் பெரும் இனத்தவர் என்னும் உண்மையை உலகிற்கு உரத்துச் சொல்லும் ஒரு வரலாற்று ஆவணந்தான் ‘பழந் தமிழ் இலக்கியத்தில் மட்டக்களப்புத் தமிழ்’ என்னும் இந்த நூல்.



**நூலின் பெயர்:**
‘ஆன்மீக அலைகள்’
**ஆசிரியர்:**
அருட்பணி நிர்மலராஜ் (செ.தா)
**விலை:** ரூபா 50/=
**கிடைக்குமிடம்:**
வளனகம், மறைக்கல்வி நிலையம், மன்னார்.

அருட்பணியாளர் நிர்மலராஜ் அவர்கள் செபமாலைத்தாசர் சபையின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு, தனது அழைத்தல் வாழ்வில் பெற்றுக்கொண்ட இறை அனுபவங்களை - அந்தந்த வேளையில் மக்களோடு பகிர்ந்து கொண்ட சிந்தனைகளை - ஒன்றாகத் திரட்டி, புத்தக வடிவில் வெளியிட்டுள்ளார்.

எளிய நடையில் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் சிறிய கட்டுரைகள் வழியாக தனது இறையனுபவங்களைப் பகிர்ந்துள்ளார்.

இறைபிரசன்னத்தின் உச்ச வெளிப்பாடு நற்கருணைப் பிரசன்னம் என்றும், மனிதன் தன்னை இறைவனோடு ஒன்றிக்கச் செய்யும் பிரசன்னம் என்றும் இயேசுக் கிறிஸ்துவின் தியாக வாழ்வைப் புரியவைக்கும் பிரசன்னமென்றும் ஆரம்பத்தில் சுட்டிக்காட்டுகின்றார்.

இயேசுவோடு கொண்டிருக்கும் உறவைக் கட்டியெழுப்புவதற்குத் தடையாக இருப்பது பாவம். பாவம் புரிந்தவன் அனைத்தையும் இழந்தவன். இருள் போக்க பாவத்தை வெல்ல ஒருவனிடம் குடிகொள்ள வேண்டியது இறையன்பு.

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை அன்பு செய்வதும், தன்னையே அன்பு செய்வதும்தான் மனிதனின் உயர்ந்த அழைப்பு.

இவ்வித அழைப்பை ஏற்று வாழவும், அதில் நிலைத்திருப்பதற்கும் இன்றியமையாததாக இருப்பது செபம் என்பதை தனது அனுபவத்தின் ஊடாக எடுத்துக் கூறுகின்றார்.

இவை அனைத்தையும் வாழ்ந்து காட்டியவள் அன்னை கன்னிமரியாள் என்பதை இறுதியில் குறிப்பிடுகின்றார்.

## வெளியூர் விழைதல்கள்... வெளியூர் விழைதல்கள்...



**நூலின் பெயர்:**
‘திருச்சபைச் சட்டத் தொகுப்பு’
தேடல் வெளியீடு
**விலை:** ரூபா 325/=
**கிடைக்குமிடம்:**
வளனகம், மறைக்கல்வி நிலையம், மன்னார்.

இறை இயல்பையும், மனித இயல்பையும் கொண்ட இறைமகன் இயேசுவைப் போன்றே திருச்சபையும் இறைமக்கள் குழாமாக இருந்தாலும், மனித சமுதாயத்தின் அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது. எனவே மனித இயல்புகொண்ட திருச்சபையின் உறுப்பினர்களை அன்புச் சமூகமான இறையரசின் உறுப்பினர்களாகக் கட்டியெழுப்ப சட்டங்கள் கட்டாயமாகத் தேவைப்படுகின்றன. அடிமைப்படுத்த, அடக்கி ஆள உதவும் சட்டங்கள் அல்ல இவை. மாறாக, அடிப்படைச் சமத்துவத்தை வலியுறுத்தி, அன்பே சட்டத்தின் நிறைவு (உரோ.13:10) என்று நிரூபிப்பவை.

சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மட்டும் அல்லாமல், சிக்கல்களைத் தவிர்த்து, நீதியும் அன்பும் நிறைந்த உறவுச் சமூகத்தை நம் பங்குகளிலும், மறைமாவட்டங்களிலும், துறவற சபைகளிலும், உலகளாவிய திருச்சபையிலும் மலரச் செய்ய இச்சட்டத் தொகுப்பைப் பயன்படுத்தலாம்.

தமிழ் கூறும் நல்லுலகும் இச்சட்டங்களைத் தங்கள் தாய்மொழியில் அறிந்துகொள்ள வழிசெய்யும் வகையில், 1983ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ம் நாள் பிரகடனப்படுத்தப்பட்ட திருச்சபையின் சட்டத் தொகுப்பைத் தமிழாக்கம் செய்ய தமிழக ஆயர் பேரவை தமிழகத் திருச்சபைச் சட்ட வல்லுனர்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. 10 ஆண்டுகளின் கடுமையான உழைப்புக்குப்பின், இந்நூல் வெளிவந்துள்ளது. பல்லாண்டுகளாக தமிழில் திருச்சபைச் சட்டத்தொகுப்பு (Canon Law) இல்லையே என்ற குறையை இந்நூல் நீக்கிவிட்டது.



**நூலின் பெயர்:**
“விவிலியமும் தமிழ் இலக்கியமும்’
**ஆசிரியர்:**
அருள். செல்லத்துரை.
**விலை:** ரூபா 390/=
**கிடைக்குமிடம்:**
வளனகம், மறைக்கல்வி நிலையம், மன்னார்.

உலகிலேயே மிகத்தொன்மையான மொழிகளைத் தாய் மொழிகளாக் கொண்ட இரு இனத்தாரிடையே தொடர்பு இல்லாத - விடத்தும் அன்பு நெறியை அடிப்படையாக் கொண்ட இலக்கியச் சிந்தனைகள் ஒத்தவாறு மலர்ந்திருந்தன என்பதை அறியும்போது ஏற்படும் வியப்பினால் உள்ளம் களிப்படைகின்றது. வாழும் நிலத்தால், பேசும் மொழியால், மதத்தால், சூழும் பழக்கவழக்கங்களால், உணவால், நடை உடை மனை நாகரீகத்தால் வேறுபட்ட மக்களின் வாழ்வியல் களஞ்சியங்களான விவிலியத்திலும், தமிழ் இலக்கிய நூல்களிலும் (19ம் நூற்றாண்டு வரை) காணப்படும் ஒத்த பகுதிகளை நேருக்கு நேர் வைத்துப் பொருத்திக் காட்டுவதே இந்நூலின் நோக்கம்.

இத்தொகை நூல் ஆய்வாளருக்குக் கருவி நூலாகவும், மறையுரை ஆற்றும் திருத்தொண்டர்களுக்குக் கையேடாகவும், தமிழறிஞருக்கு விவிலிய விழுமியங்களைத் தெற்றெனப் புலப்படுத்தும் துணை நூலாகவும் பயன்படும்.

விவிலியத்தைத் தங்கள் வாழ்வு நெறியாகக் கொண்டவர்கள் அதில் உள்ள கருத்துக்களைத் தமிழ் இலக்கியக் கருத்துக்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, மகிழ்ந்து, துய்த்து, தோய்ந்து நலம் பாராட்டவும், அவ்வாறே தமிழ் இலக்கிய அறிவர்கள், இவ்வளவு மிகுதியாகத் தமிழ் இலக்கியக் கருத்துக்கள் விவிலியத்தில் விரவிக் கிடக்கின்றனவே என வியந்து, பொருந்துவன வற்றைப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடவும் இந்நூல் நல்வாய்ப்பை நல்குகிறது.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 28**

சொல்லின் செல்வர் அமுது

## அன்னையின் கண்களில் கண்ணீர் துளிகள்



கல்கத்தாவுக்குத் திரும்பி வரும் வேளையில் அன்னை அவர்கள் உரோமாபுரியில் தரித்து நின்றார். அல்பானிய அரசின் தூதுவரிடம் தனிப்பட்ட வேண்டுதல் ஒன்றைக் கேட்க விரும்பினார். தனது தாயாரையும், சகோதரியையும் அல்பானிய நாட்டிலிருந்து இத்தாலிக்கு அனுப்பிவைக்குமாறு ஒரு மனுவைத் தயார் செய்தார். அன்னையின் சகோதரர் லாசர் இவ்வாறான விண்ணப்பத்தைச் செய்திருக்கலாம். ஆனால் அவர் பெயர் அல்பானிய நாட்டின் கறுப்பு நாடாப் பட்டியலில் இருக்கிறது.

அவர்களுடைய தாயார் திரானவும், சகோதரி எச்சவும், யூகோஸ்லாவியாவிலிருந்து அல்பானிய நாட்டுக்கு வந்து, அதன் தலைநகரில் வசித்து வந்தனர். அவர்களுக்கு காலத்துக்குக் காலம் பல கடிதங்கள் அனுப்பி வைத்தனர். அக்கடிதங்கள் போய்ச் சேர்ந்ததற்கு எந்த அறிகுறியும் இல்லை.

அல்பானியா பொதுவுடமை என்னும் இரும்புத் திரை நாடுகளில் ஒன்று. அந்த நாடுகளில் மனிதாபிமானம் கப்பலேறிவிடும். லாசர் பிரான்சிய தூதுவர் மூலம் தாயையும் - சகோதரியையும் அழைக்க எடுத்த பிரயாசத்தின் முடிவாக ஒரு மடல் கிடைத்தது. இருவரும் பிரயாணம் செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் என்பதே அதற்குக் கிடைத்த பதில்.

"எனது தாயாரும் - சகோதரியும் நோய்வாய்ப்பட்டிருக்கவில்லை. படுக்கையில் கிடக்கவில்லை. அவர்களுடைய நோய் தனிமையும், நாட்டில் நம்பிக்கையீனமும்தான்." என்று லாசர் உறுதியாக் கூறினார்.

நல்லெண்ணம் மிக்க எயிலின் ஈகன் என்ற அமெரிக்க மாதுடன் அல்பானிய தூதரகத்து வாசற்படிகளில் நின்று அன்னை திரேசா அழைப்பு மணியை அடித்தார். மூன்று முறை அவ்வாறு அடித்த பின்னர், வாசற் கதவைத் திறந்த மனிதனுக்கு ஆச்சரியத்தின் குறிகள் கீறியிருந்தன. அந்த இடத்துக்கு விசாரணைக்கு யாராவது செல்லும் வழக்கமில்லை. "நான் அல்பானிய நாட்டைச் சேர்ந்த பெண்." என்று அல்பானிய மொழியில் அன்னை கூறினார். உள்ளே வருமாறு அழைத்தவன், காலைச் சூரியன் உள்ளே நுழையாதவாறு, யன்னல்கள் சாத்தப்பட்டிருந்த வெளிச்சமற்ற அறை ஒன்றில் மின்வெளிச்சத்தைப் போட்டான்.

அன்னை அவர்கள் "நான் அல்புானிய நாட்டைச் சேர்ந்த பெண்" என்று திரும்பத் திரும்பச் சொன்னார். அந்த மனிதன் அல்பானிய மொழியில் வெடித்துப் பொரிந்து கொட்டினான்.

அன்னை அமெரிக்க மாது பக்கம் திரும்பி, "என் தாய் மொழியில், இந்த வார்த்தைகளை நான் அறிந்ததில்லை. எனது பின்தங்கிய மொழியாய்விட்டது" என்றார். எயிலின் இத்தாலிய மொழியில் சொன்னார். "அன்னை திரேசா அல்பானிய குடும்பத்தைச் சேர்ந்தவர். கடந்த 40 ஆண்டுகளாக இவர் தன் தாய் சகோதரங்களைப் பார்க்கவில்லை. இந்தியாவுக்குப் போய், அங்கே ஒரு துறவியாயிருந்து தொண்டு செய்கிறார்" என்றார். அன்னை திரேசா வறியவர்களுக்கு உதவி புரிவதையும் - பல இளம் பெண்கள் அந்த இயக்கத்தில் சேர்ந்து பணிபுரிவதையும் விளக்கினார். அந்தக் கூட்டத்துக்கு "அன்புப் பணியாளர் சபை" எனப் பெயர். இவருடைய சொந்தப் பெயர் அக்னேஸ் கொன்சா போயஸ்கி. ஆனால், ***அன்னை திரேசா*** என்ற பெயரை எல்லோரும் அறிவார்கள். இவர் இந்தியப் பிரஜையாய் இருந்தாலும், எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை யாவரும் அறிவார். அல்பானிய நாட்டுக்குச் சிறந்த பெருமையைத் தேடித் தந்தவர் என்றார் எயிலின் தொடர்ந்து.

அன்னையார் அவனைப் பார்த்து, உமக்கு சேர்பிய மொழி தெரியுமா? எனக் கேட்டபோது, அவனும் 'ஆம்' என்றான். இருவரும் சேர்பிய மொழியில் உரையாடினர். ஒரு சந்தர்ப்பத்தில் அவன் தன் கண்ணில் துளிர்த்த நீர்த்துளிகளைச் சுட்டுவிரலால் துடைத்தெறிந்தான். கல்கத்தாவில் நடைபெறும் பணிகளையிட்டு, மேலும் விபரங்களைக் கேட்டறிந்தான். எயிலின் மரணப் படுக்கையாளரின் மனைபற்றியும், பாடசாலைகள் பற்றியும் விபரித்தார். "அம்மணி, இந்த மெல்லிய பெண்மணி இவ்வளவு வேலைகளையும் தொடக்கினார் என்று சொல்லுகிறீர?" என்று அவன் கேட்டுவிட்டு, நீலக்கரை சேலை உடுத்தி, செருப்போடு வந்திருந்த பெண்ணை இமை கொட்டாமல் பார்த்தான். "அல்பானியாவுக்கு வெளியே, உலகத்துக்குத் தெரிந்தவர்களில் இவர்தான் சிறப்புடையவர் என்பது என் எண்ணம்!" என்றார் எயிலின். "நான் என்னால் இயன்ற ஆற்றலுடன் தூதருக்கு விளங்கப்படுத்துவேன். இதே நேரம் நாளைக்கும் வாருங்கள்" என்றான். இலவு பழுக்கும் என்ற எண்ணத்தோடு இருவரும் வெளியே வந்தனர். "அந்த மனிதன் கண்ணீர் விடக்கூடியதாக நீங்கள் என்னத்தைச் சொல்லிவிட்டீர்கள்?" என்று அமெரிக்கப் பெண்மணி விசாரித்தார்.

"நான் அவருக்கு உண்மையைச் சொன்னேன். நான் ஒரு சின்னப் பிள்ளையைப்போல, என் அம்மாவைக் காண ஆசைப்படுகின்றேன். எனது தாயார் வயது சென்றவர். சுகமில்லாதவர். இப்போது அவருக்கு வயது 81. அவருக்குப் பார்க்க மிகவும் ஆவலாக இருக்கிறார். அப்படியே, நானும் எவ்வளவோ காலத்துக்குப் பின்பு, அவரைப் பார்க்க ஆவலாக இருக்கின்றேன். நான் உதவியற்றவள். அல்பானியரே என் தாயார் உரோமுக்கு வருவதற்கு உத்தரவு கொடுக்கக் கூடும் என்று சொன்னேன்." என்றார்.

மறுநாள் தூதுவர், அவர்களுக்கு அல்பானிய அரசுடன் தொடர்புகொள்வதாக வாக்குப்பண்ணினார். நம்பிக்கை ஏற்பட்டதால், உரோமாபுரியில் அன்னை திரேசாவின் தாயாரும், சகோதரியும் வந்து தங்குவதற்கென இடம் ஒன்றையும் ஏற்பாடு செய்து வைத்தனர். தாயாருக்குத் தந்தி பறந்தது. "வெளியேறக் கூடிய பத்திரம் (Visa) கிடைத்ததும், உரோமாபுரிக்கு வாருங்கள்; அங்கே சந்திப்போம்" என்று அறிவித்திருந்தார் அன்னை திரேசா.

மீளவும் அல்பானிய தூதகரத்திற்குச் சென்றனர். அங்கே இருந்த ஒரு அதிகாரி, தூதுவர் உரோமாபுரியில் இல்லை. உங்களுடைய கடவுச் சீட்டுப்பற்றி ஒரு தகவலும் இல்லை என்றார். எயிலின் என்ற பெண்மணி, பின்னொரு நாள் இதைக் குறிப்பிடும்போது, அன்னை திரேசா தூதுவர் நிலையத்தைவிட்டு வந்தபோது, முதல் முறையாக அவருடைய கண்களிலிருந்து நீர்த்துளிகள் உருளுவதை நான் கண்டேன். மேலே பார்த்து அன்னை, "ஐயோ கடவுளே! நான் இந்தத் துயரை விளங்கிக் கொண்டு. அதை ஏற்றுச் சகித்துக்கொள்வேன். ஆனால், தன் வயோதிப காலத்தில் என்னைத் திரும்பவும் காண வேண்டுமென்று, பேராசைப்படும் என் தாயார் தன் துயரத்தை விளங்கிக்கொள்வதும், ஏற்றுக்கொள்வதும் மிகக் கடினமானது" என்றார்.

மீண்டும் தொடர்ந்து சென்றும் தூதகரத்தில் இருந்து நல்ல பதில் கிடைக்கவில்லை. கடைசியாகச் சென்று, திரும்பியபோது, தாயார் திரானாவின் கடிதம் கிடைத்தது. "இந்தத் துன்பமான உலகத்தில் நாம் மீண்டும் சந்திக்க ஒருபோதும் முடியாவிட்டால், பேரின்ப வீட்டில் நிச்சயமாய் சந்திப்போம்." என்று எழுதியிருந்தார்.

பின்னர் எத்தனையோ முறை முயன்றும் பயன் கிடைக்கவில்லை. சில வல்லமையுள்ள அரசியல்வாதிகளுக்கு முறையீடு செய்தபோது, அவர்கள் முயன்றும் சித்தி பெறவில்லை. "இது வரையில் அன்பின் மூலமாகவும், செபத்தின் மூலமாகவும் தேவையான எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டேன். அன்பினால் தட்டி, அசையாத தடைச்சுவர்கள் இன்னும் இருக்கின்றன." என்று அன்னை சகோதரரிடம் குறிப்பிட்டார்.

இரண்டு ஆண்டுகளால் திரானா உலகத்தைப் பிரிந்தாள். சகோதரி, அன்னைக்குப் பின்வரும் மடலை எழுதினார். என்னைத் தனியே விட்டு, எங்கள் அருமைத் தாயார் பிரிந்து சென்றுவிட்டார். திரும்பி வராத இடத்துக்குப் போய்விட்டார். நான் அவரை இழந்துவிட்டேன். நான் உம்மிடத்திலே, வந்துசேர உத்தரவு கிடைக்குமென நம்புகிறேன். அதன் பின்பு, என் துயரத்தின் பாரம் இலகுவாகிவிடும். .........!

ஆனால் அந்த அம்மையாரின் விருப்பம் நிறைவேறியதில்லை. தனது சகோதரியான அன்னை திரேசாவையோ, தம்பியார் லாசரையோ காணமுடியாமல், கவலையில் தோய்ந்து அல்பானியாவில் அவர் மரணமானார்.

வாழ்க்கை கிழிந்து வந்தவர்களுக்கு நம்பிக்கையும், உதவியும் கொடுத்து துயர் துடைத்த மாதரசி, அவளுடைய குடும்பத்தின் துன்பத்தில் உதவியற்றவளாயிருந்தாள். தீபங்கள் மங்கும் நேரம் நெய்யாக வந்தவள், தன் சொந்த இரத்தங்களின் உயிர்த் திரியைத் தூண்டிவிட விரல் நீட்ட முடியவில்லை. பொதுவுடமை நாடுகளின் அதிகாரிகள் வரண்ட வாழ்க்கையில் அக்கினி விதைகளைப் புதைக்கின்றார்கள். அது நிலத்தின் பண்பையே பாழாக்கிவிடுகிறது. அங்கே பூந்தளிர்கள் விடுதலை பெறமுடியுமா?

(கங்கை தொடர்ந்து பாயும்)

## உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.36

நேற்றுத்தான் ஆரம்பித்ததுபோல் இருக்கின்றது மறையறிவுப் போட்டி! ஆனாலும் அது தனது மூன்றாண்டை நிறைவுசெய்து தனது நான்காவது அகவையை இம்மாதத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

பல திசைத் திருப்பங்களின்பின் இதில் ஆர்வமுள்ள வாசகர்களின் தொகை அதிகரித்து வருவதைக் காணும்போது இது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என்ற தேவை இருப்பதை உணரமுடிகின்றது.

இம்முறை மன்னாவின் கேள்விகள் மார்ச் மாத மன்னாவிலிருந்து இடம்பெறுகின்றன. மீண்டும் ஒருமுறை மார்ச் மாத மன்னாவைத் தட்டிப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் இல்லையா?

**இனி வினாக்களுக்கு வருவோம்.**

1. அன்னை திரேசாவின் பணியில் தன்னை இணைத்துக்கொண்டு பணிபுரிந்த வைத்திய கலாநிதிப் பட்டம்பெற்ற (Doctor) ஒரு சகோதரி விசர்நாய்க் கடிக்கு உட்பட்டதால் உயிர் நீத்தார். அச்சகோதரியின் பெயர் என்ன?
2. வெற்றி என்பதற்கு அருட்தந்தை வின்னி ஜோசவ் தரும் தத்துவம் என்ன?
3. 'அன்பு' என்றால் நன்மை விரும்புதல். நன்மை விரும்புதல் என்றால் நாம் விரும்பியவர்களுக்கு, விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்தில் நன்மை விரும்புவது அல்ல. அப்படியானால், *நன்மை விரும்புவது* என்றால் என்ன?
4. நற்செய்தி அறிவிப்பாளர்களின் பாதங்கள் எத்துணை அழகானவை. இது யாருடைய கூற்று?
5. பரிசுத்த தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் முதற் சுற்று மடலின் பெயர் என்ன?
6. திருத்தந்தை தனது முதலாவது திருமடலில் மூன்று வகையான அன்பைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். அவை எவை?
7. உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். இக்கூற்று விவிலியத்தில் எங்குள்ளது?
8. புலம்பெயர்ந்து வாழ்கின்ற நமது தமிழ் இரத்தங்கள், தாம் எந்த நாட்டில் வாழ்கின்றோமென்றில்லாது, எந்த நாட்டில் வாழ்ந்தாலும், தாம் பெற்றுக்கொண்ட விசுவாச ஒளியை அணையவிடாது காத்து வருகின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரியது. ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் இத்தவக்காலத்தில் திருப்பாடுகளின் காட்சியை அரங்கேற்ற உள்ளது. என்ன பெயரில் இக்காட்சி அரங்கேறுகின்றது?
9. யாழ் மறைமாவட்டத்தில் இயங்கும் குடும்பப்பணி நிலையத்தின் பெயர் என்ன?
10. 1992ம் ஆண்டு மே மாதம் 13ந் திகதி திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் பெப்ரவரி மாதம் 2ம் திகதியை உலக நோயாளர் தினமாகப் பிரகடனப்படுத்தினார். 1993ம் ஆண்டு முதன் முதலாக இத்தினம் கொண்டாடப்பட்டது. எந்த நாட்டில் எவ்விடத்தில் இது கொண்டாடப்பட்டது?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 34இற்கான கேள்விகளுக்கு 45 பேர் விடை அளித்திருந்தனர்.**

### இவர்களுள் பரிசுக்குரியவராக தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி, சத்தியராசா றோசலின், பரிகாரிகண்டல், முருங்கன்

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அன்ரன் பொன்ராஜ், சுவிசர்லாண்ட்
2. திருமதி. அகத்தா குரூஸ், பி. வீதி, சி. கடை, மன்னார்.
3. க. போல் சேவியர், டென்மார்க்.
4. க. எமிலின், எழுத்தூர், மன்னார்.
5. ஏ. ஜெசி, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
6. மு. புவனமோகன் (நித்தியன்), தாமரைக்குளம், அடம்பன்.
7. எம். லின்ரா, பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல். மன்.
8. அ. வினோஜினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
9. ஆ. லக்ஸனா, இல.A07, மடுக்கோவில், மடு.
10. Sr. மேரி பற்றிசியா, மினிம் சிஸ்ரஸ், துடல்ல, ஜாயல.

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம், உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின், உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**

உள்நாடு - இலங்கை ரூபா 400

வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

## நினைவுத் திவலைகள்

### 9ம் ஆண்டு நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 03 - 03 - 1948 |  | 17 - 05 - 1997 |

**யாக்கோவு சேரம் அமல உற்பவி**
**(முள்ளிக்குளம், தட்சனாமடு)**

கள்ளிகட்டைக்காடு நகர் பிறந்து
கன்னிமரி திருப்பெயரில் மலர்ந்து
பள்ளிகொண்ட மரிதுணை செறிந்த
பறப்பாங்கண்டலூரில்லறம் புகுந்து
வெள்ளமென அருள் வழங்கும்
வேதனேசு மறை பரப்ப - மடு
முள்ளிக்குளம் தங்கி மூவேழாண்டும்
முழுமூச்சாய் சான்று வாழ்வுரைத்து
வல்லோனின் அழைப்பும் வரவுமது பெற்று
வாழ்வோட்டம் முடிந்ததம்மா!
எல்லையில்(லா) இன்பம் விண்ணில்
எய்திட யாம் இறைஞ்சுகின்றோம்.

இரங்கற்பலி
17.05.2006 அன்று
மாலை 4.00 மணிக்கு
முள்ளிக்குளம் புனித
சின்னத் திரேசா
ஆலயத்தில் இடம்பெறும்.

***இவரின் பிரிவால் துயருறும்:***
***கணவன், மக்கள், மருமக்கள், உடன் பிறப்புக்கள், நண்பர்கள், அன்பர்கள்.***


**அனைத்துத் தொடர்புகளுக்கும்**


**பதிப்பாசிரியர்.**
**மன்னா**
**திருமறைப்பணி நிலையம்.**
**புனித செபஸ்ரியார் வீதி**
**மன்னார்.**

**The Editor,**
**MANNA**
**Pastoral Centre,**
**St. Sebestian's Street**
**Mannar, Sri Lanka.**

தொலைபேசி. இல. 023 - 2232377

# குடும்பக் குவலயம்

## சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணங்கள் நரகமாவதேன்?



திருமணங்கள் எல்லாம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகவே கருதப்படுகின்றது. இன்றைய நவீன யுகத்தில் நடைமுறைச் சாத்தியமற்ற திருமணங்கள்கூட பிரபல்யமாக நடைபெறுகின்றன. புனிதமான சடங்கு என முன்னோர்களால் போற்றப்பட்ட திருமண வைபவம் இன்று கேலிக்கிடமாக்கப்படுகின்றது. அறிவுபூர்வமான விடயங்களில் சிறுபிள்ளைத்தனம் தலைதூக்குவதையும் காணக்கூடியதாக உள்ளது. பல்வேறுபட்ட திருமணங்கள் முறிவடைவதன் மூலம் பாதை மாறி நரகம் என்ற தரிப்பிடத்தில் சிக்குண்டு நிற்கின்றன.

இன்றைய காலச் சுழற்சியில் மனிதன் பல்வேறுபட்ட மாறுதல்களை அடைந்ததன் மூலம் பழமை மறக்கடிக்கப்பட்டு புதுமை புகுத்தப்பட்ட நிலையில் நகைப்பிற்கிடமான கேலிக்கூத்துக்களை திருமண பந்தத்தில் புகுத்தியுள்ளான்.

மனிதன் தன் நிலைமாறும்போது மனமாற்றம் பெறுகின்றான். பணம் கொஞ்சம் கூடிவிட்டால் பல்வேறுபட்ட திருமணங்கள் புரிய ஆசைப்படுகின்றான். ஒருவனுக்கு ஒருத்தி என்ற நம் பண்பாடு இங்கு சிதைக்கப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் புதுமை தேடிப்புறப்படவே தயாராகின்றானே தவிர மனிதப் பண்பியலை மேம்படுத்தி பாதுகாக்க முயல்வதில்லை. மனித குணம் பொதுவானதல்ல. அது பல்வேறுபட்ட மாறுதல்களைக் கொண்டிருக்கின்றது.

மேலைநாட்டவரானாலும், கீழை நாட்டவரானாலும் சாஸ்திரம், சம்பிரதாயம் என்று ஒவ்வொருவருக்கும் ஏற்ற சோதிட அமைப்புக்களை அந்நாளில் கொண்டிருந்தனர். திருமணப் பொருத்தம் சாஸ்திர சம்பிரதாயங்களின் பின்னணியில்தான் நடைபெற்றன. இன்று இருமனம் சேர்ந்தால் திருமணம் என்று இலகுவாகக் கூறிவிடுகிறார்கள். திருமணம் என்பதில் இருமனம் கலந்தால் நிச்சயம், ஐம்பது வீத வெற்றியும், பரஸ்பரம், விட்டுக்கொடுப்பதிலும், சகிப்புத்தன்மையிலும் ஐம்பது வீதம் வெற்றியும் என ஒரு முழுமையான வெற்றியை பெறும் தம்பதிகளின் திருமணம் நிச்சயம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதே.

திருமணங்கள் மூலம் பெறப்படும் பாலியல் ரீதியான அபிலாஷைகள், கருத்து வேறுபாடுகள், பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்கள் தோல்வி காணப்பட்டால் அந்த மண வாழ்க்கை என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் நரக வாழ்க்கையாகவே அமைந்துவிடும். இங்கு மன ஒற்றுமை குன்றிப்போன நிலையில் மனவிரிசல் வளர்ந்துகொண்டே இருக்கும். இவர்களே விவாகரத்துக்கோரி நீதிமன்றங்களில் நிற்கின்றனர்.

சில பெண்கள், தங்கள் கணவன்மாரைக் கைவிடுவதும் சில ஆண்கள் தங்கள் மனைவிமாரை கைவிடுவதும் உண்டு.

திருமண கலாச்சாரம், பண்பியல் போன்றவற்றில் போதிய அறிவீனம் காரணமாகவும் ஒழுக்கக் குறைபாடுகள் காரணமாகவும் வரையறை தவறிய இவர்கள், மீண்டும் சேர்ந்து வாழ்வதும் சாத்தியமே.

திருமணம் என்பது ஒரு சொர்க்கபுரி, அங்கு பல்வேறுபட்ட சுகந்தங்களைச் சுவாசிக்கலாம். அது இரு மனம் ஒத்த தம்பதியரால் மட்டும்தான் முடியும். அதற்கு புரிந்துணர்வு நிதானம், சகிப்பு, கீழ்ப்படிவு, பரிவு என்று ஏராளமான பண்புகள் தேவை.

நற்பண்புகளே ஒரு நல்ல குடும்பத்தைக் கட்டி எழுப்பும் காரணியாகும். அப்போதுதான் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்ற தத்துவமும் புரியக்கூடியதாயிருக்கும்.

## யாருக்குத்தான் பிரச்சினை இல்லை?



வாழ்க்கையில் பிரச்சினை இல்லாதவர்கள் நூற்றுக்கு ஒருவர் என்றால், பிரச்சினைகளைச் சமாளிக்கத் தெரியாதவர்கள் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேர். துன்பங்களை எண்ணித் துவண்டு போகின்றவர்கள் மேலும் மேலும் பிரச்சினை வலைக்குள் சிக்கித் தவிக்கிறார்கள்.

நாம் வாழ வேண்டும், எப்படிப்பட்ட பிரச்சினையானாலும் சமாளிக்க வேண்டும் என்றெல்லாம் நம்பிக்கையோடும் துணிவோடும் செயற்பட வேண்டும். பிரச்சினைகளுக்கு துணிவுடன் விடைகாண முயல்பவர்களே வெற்றியுடன் வாழமுடியும். ஏழைகள் நினைக்கிறார்கள் - பணக்காரர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று. இதில் உண்மையில்லை. நம்மிடமுள்ள பணம்தான் நம் தொல்லைகளுக்கெல்லாம் காரணம் என்று பணக்காரர்கள் எண்ணுகிறார்கள். இதுவும் உண்மையல்ல. இரவும் பகலும் எப்படி மாறி மாறி வருகிறதோ அப்படியே துன்பங்களும் இன்பங்களும் தொடர்ந்து வருகின்றன.

பணக்காரனுக்கு பசிக்கவில்லையே என்ற துன்பம். ஏழைக்கு புசிக்க ஒன்றுமில்லையே என்ற துன்பம். உடை விஷயத்தில் எதைப் போட்டுக்கொள்வது என்று வசதி படைத்தவனும் தவிக்கிறான். வசதியற்றவனும் தவிக்கிறான். ஆக வாழ்க்கையிலுள்ள வசதிகளோ, பொருளோ, பணமோ மட்டும் நம் துன்பங்களுக்குக் காரணமில்லை. மாறாக! இவ்விரு பிரிவினர்களில் வளமான மனம் படைத்தவர்களே மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அதற்காக, அடிப்படைத் தேவைகள் ஏதுமின்றி வளமான மனம் ஒன்றைக் கொண்டே காலத்தை ஓட்டிவிட முடியும் என்று பொருளல்ல.

இத்தகைய வசதிகளை அடைய வளமான மனத்தின் மூலம் பெறப்படும் திறமையும் முயற்சியுமே அவசியம் என்பதை உணர்ந்தால் போதுமானது. ஆக, துன்பங்களே நம்மை அணுகக்கூடாது என்று எண்ணுவதைவிட, துன்பங்கள் வந்தடைந்தால் அவற்றைச் சமாளிக்கும் மனப்பக்குவமும் நம்மிடம் இருக்க வேண்டும் என்பதில் அக்கறையாய் இருங்கள். இந்த இரண்டையும் வேறுபடுத்தி அறியும் விழிப்புணர்வு மட்டும் ஏற்பட்டு விட்டால் சிந்தனை சிறக்கும், வழி பிறக்கும், துன்பங்கள் எதுவானாலும் சிதறி ஓடும். எனவே மனத்தை மட்டும் விட்டுவிடாதீர்கள்.

*அ. டொமிற்றா, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.*

## சிறை உடைக்கும் கிறிஸ்துவின் உயிர்ப்பு!

*அருட்சகோதரி மெரிஸி, அகஸ் வில்லா, இ. சி. காண்வென்ட், விடத்தல்தீவு, மன்னார்.*

வாழ்க்கை ஒரு வாய்ப்பு, சந்தர்ப்பம்! "சந்தர்ப்பங்கள் நிறையப் பேரைக் கூப்பிடுகின்றன. ஆனால் சிலர்தான் எழுந்து நிற்கிறார்கள்" என்கிறார் ஆலிவர் வொர்போர்ட்.

"சந்தர்ப்பங்கள் உழைப்பு என்ற உருவத்தில் நம்முன் அடிக்கடி தோன்றுகின்றன. நாம்தான் அவற்றைக் கண்டுகொள்வதில்லை" என்கிறார் தோமஸ் அல்வா எடிசன்.

உண்மையில் சந்தர்ப்பங்கள் நம்மை சந்திக்கும்போது நம் மனம் சந்தடியில் இருப்பதால் கை நழுவிய பழமாய் நம்மைவிட்டு அவை கடந்து சென்றுவிடுகின்றன. இதனால்தான் இன்னும் நம் வாழ்வில் எழுச்சி இல்லை, எழுப்புதலும் இல்லை. நாம் பெற்ற கொடையாகிய வாழ்க்கையில் அதிகமாய் குறைகள் குடிகொள்வதால் அமைதி குடிகொண்டிருக்கவில்லை. நம்மை ஆணவம், பெருமை, கோபம், எரிச்சல், பொறாமை, தன்னலம், ஆட்சி செய்வதால் ஆனந்தத்திற்கு, ஆர்ப்பரிப்பிற்கு இடமில்லை.

"உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது" (யோவான்: 16:22) என்கிறார் நம் ஆண்டவர் இயேசு. ஆனால் நாம் நம் மகிழ்ச்சியை பொன்னில், பொருட்களில், மண்ணில் மனிதரில் தொலைத்துவிட்டு, தொலைத்த இடம்விட்டு எங்கெங்கோ தேடிக்கொண்டிருக்கிறோம்.

உள்மன விடுதலைதான் உண்மைச் சுதந்திரம். இதைத்தான் இயேசு "உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" என்று (மத் 6:21ல்) குறிப்பாய் உணர்த்துகிறார்.

நாம் சுதந்திரத்தைப் பேசுகிறோம். ஆனால் சிறைகளையே விரும்புகிறோம். தொடர்ந்து சிறையில் வாழவே ஆசைப்படுகின்றோம். சகல தளைகளில் இருந்து விடுபட முடியாதபடி வாழ்க்கையின் பல பந்தங்கள் நம்மை சிறைப்படுத்த அனுமதிக்கிறோம். வாழ்க்கை என்பது புதுப்புது விலங்குகளை தயாரிக்கும் பட்டறை என்பதை நிரூபிக்கின்றோம்.

நாம் உருவாகுவதே கருப்பைச் சிறையில். வாழ்வதும் பாசம், அன்பு, நட்பு, காதல் போன்ற சிறைகளில். பிரசவம் என்பது விடுதலை அல்ல. அது சிறை மாற்றம்.

சின்னச் சிறையில் இருந்து பெரிய சிறைக்கு! இலட்சியம், இலக்கு, நோக்கம் என நாம் ஒவ்வொருவரும் நமது சிறைகளில் இருந்து சிறிது வேறுபடுகிறோம். பிறரது சிந்தனைகளுக்கும் விமர்சனங்களுக்கும் கொத்தடிமை ஆகின்றோம். சிலர் நம் சொந்த எண்ணங்களிலே சிறைப்பட்டுக் கிடக்கின்றோம். இப்படி நமக்கு நாமே அமைத்துக்கொண்ட விலங்குகளுக்குள் நாம் சிறைப்பட்டிருக்கின்றோம்.

சுய சிறை குடும்பச் சிறைக்கும், குடும்பச் சிறை சமூகச் சிறைக்கும், சமூகச் சிறை நாட்டுச் சிறைக்கும் இட்டுச் செல்கிறது.

ஐயம் நீக்கி அச்சம் அகற்றி அமைதி அளித்த இயேசுவின் உயிர்ப்பு அன்று சீடர்களுக்கு மட்டுமல்ல, இன்று நமக்கும் சிறைத்தகர்ப்பு செய்யட்டும். நமது உள்ளம் அமைதிப் பூங்காவாகட்டும். நமது நாடு சுதந்திரக் காற்றை சுவாசிக்கட்டும். பூக்கள் வேறுபட்டாலும் தேன் ஒன்றுதான்.

இதைத் தேனீ அறிந்ததால், பூக்களில் பாரபட்சமில்லாமல் வேப்பம் பூவிலும் தேனை எடுக்கும். ஆறறிவு படைத்த நமக்கு மட்டும் ஏன் இந்த மத, இனப் பார்வை? உலகில் பகையும் போரும் ஒழிய பேதப்பார்வை நீங்கி விசுவாசப்பார்வையில் ஒளி வேண்டும்.

"உலகமே என் தேசம், நன்மை செய்வதே என் சமயம்" என்ற தோமஸ் பெய்ஸ் அவர்களின் வரிகளை இதயத்தில் எழுதினால் இனிமையாக வாழலாம். சொந்த்ச் சிறைகளை தகர்ப்போம், தடைகளைத் தாண்டிப் பறப்போம். மனதின் அடிமைத்தளையை அகற்றுவோம். சுதந்திரக் கனல் மூட்டுவோம். உயிர்த்த கிறிஸ்து கொடுக்கும் அமைதியை அனுபவிப்போம்.

## சமைப்போம்! சுவைப்போம்!

*தொகுத்துத் தருவது*

**- எம். தீபா, வளனகம், மன்னார்.**

### சிலி ஸ்ரவ்

#### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| கறி மிளகாய் | - 10 (காம்புடன்) |
| உருளைக் கிழங்கு | - 1/4 கிலோகிறாம் |
| சிறிதாக வெட்டிய லீற்ஸ் | - 25 கி.கிறாம் |
| சிறிதாக வெட்டிய வெங்காயம் | - 1 மே.க. (நிரப்பி) |
| சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் | - 1 மே.க. (நிரப்பி) |
| சிறிதாக வெட்டிய உள்ளி | - 1 தே. க. (நிரப்பி) |
| மிளகுத்தூள் | - அளவிற்கு |
| உப்புத்தூள் | - அளவிற்கு |
| மாசிக் கருவாடு (இடித்து) அல்லது அவித்து மசித்த மீன் | - 2 மே.க. (நிரப்பி) |
| மாஜரின் | - 1 தே.க. (நிரப்பி) |
| கடுகு | - 1 தே.க. (மட்டமாக) |
| தக்காளி சோஸ் | - 1 மே. கரண்டி |
| கோதுமை மா | - 2 மே. கரண்டி |
| முட்டை | - 2 |
| றஸ்க் தூள் | - 4 மே. க. (நிரப்பி) |
| தேங்காயெண்ணெய் | - 1/2 போத்தல். |
| கறிவேப்பில்லை | - தேவையான அளவு. |



#### செய்முறை :

உருளைக்கிழங்கை அவித்துத் தோலுரித்து மசித்து வைத்துக்கொள்க. லீற்ஸைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி சிறிதளவு உப்புப் பிரட்டி வைத்துக்கொள்க.

தாச்சியில் மாஜரினையிட்டுக் காயவைத்து காய்ந்தபின் கடுகைப் போட்டு வெடிக்க வைத்து, வெட்டி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய், உள்ளி, கறிவேப்பில்லை என்பவற்றைப் போட்டு அரைப் பதமாக வதங்கியதும், லீக்ஸையும் போட்டு மூடி வதங்கவிடவும். வதங்கியபின் உப்புத்தூள், மிளகுத்தூள், மசித்து வைத்துள்ள மீன் அல்லது கருவாட்டுத் தூள், சோஸ் மசித்து வைத்துள்ள உருளைக்கிழங்கு என்பவற்றையிட்டு நன்கு சேர்த்து அடுப்பிலிருந்து இறக்கிக் கொள்க.

கழுவிய கறி மிளகாயை எடுத்து, ஒரு பக்கத்தை நீள்வாக்கில் கீறி உள்ளேயிருக்கும் மிளகாய் விதைகளை அகற்றிய பின்பு, தயாரித்து வைத்துள்ள கறிக் கலவையை அந்த மிளகாய் முழுவதும் நிரம்பும் வண்ணம் அடைத்துக்கொள்க. இவ்வண்ணம் மற்றைய மிளகாய்களையும் அடைத்துக் கொள்க. முட்டையை அடித்து வைத்துக்கொள்க.

பின்பு தாச்சியில் தேங்காயெண்ணெயைக் கொதிக்க வைத்து எண்ணெய் நன்கு கொதித்தபின் மிளகாயைக் காம்பில் பிடித்துக் கோதுமை மாவில் புரட்டி, முட்டையில் தோய்த்தெடுத்து றஸ்க் தூளில் புரட்டி எண்ணெயில் போட்டுப் பொன்னிறமாகப் பொரித்தெடுத்துப் பரிமாறலாம்.

## மருத்துவப் பொழிவு

### உயிர்ச்சத்துக்கள்



பெண்களில் பலர் தமது உணவில் அக்கறை காட்டுவது குறைவு. வீட்டிலும், அலுவலகத்திலும் அவர்களுக்கு இருக்கும் வேலைப் பளுவே இதற்குக் காரணம். அவ்வாறே கவனமாக இருந்தாலும் உணவில் கலந்திருக்கும் ஊட்டச்சத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்துவதில்லை.

தினமும் உண்ணும் உணவில் உள்ள ஊட்டச்சத்துக்கள் பற்றி தெரிந்துகொள்வோம். ஊட்டசத்துக்களில் இரண்டு பிரதான பிரிவுகள் உள்ளன. அவற்றில் ஒன்று கொழுப்புச் சத்துக்கள், புரதங்கள் மற்றும் மாப்பொருளை உள்ளடக்கியவை. இரண்டாவது வகை, உயிர்ச்சத்துக்கள் மற்றும் கனிச்சத்துக்களை உள்ளடக்கிய சிறிய பிரிவு.

உடலில் உள்ள அணுக்கள் தொடர்பான செயற்பாடுகளில் உயிர்ச்சத்துக்கள் மிக முக்கிய பங்குவகிக்கின்றன. அவற்றின் வளர்ச்சியிலும் மீள அமைப்பதிலும் உயிர்ச்சத்துக்களுக்கு அதிக பங்குண்டு. எந்த ஒரு உயிர்ச்சத்தையும் உடலுக்குத் தேவையான அளவு எடுக்காவிட்டால் அது ஆரோக்கியத்தை சீர்குலைத்துவிடும். உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான உயிர்ச்சத்துக்கள் இரு வகைப்படும்.

1. கொழுப்பில் கரையும் - 13 உயிர்ச்சத்துக்கள்.
2. நீரில் கரையும் - 27 உயிர்ச்சத்துக்கள்

உயிர்ச்சத்து 'ஏ' , 'டி'. 'இ' மற்றும் 'கே' சக்திக்கு தேவையான வகையில் கொழுப்புச் சத்தால் கரைந்துவிடுகின்றன. 'பி' கம்ப்ளெக்ஸும் உயிர்ச்சத்து 'சி'யும் நீரில் கரைகின்றன. இவை தம்முடைய கூரிய வடிவில் மஞ்சள் நிறக் கலவையாக இருக்கும். நாம் உட்கொள்ளும் உணவிலுள்ள பெரும் பகுதியான 'கெரோடின்' ஊட்டச்சத்துக்களை உயிர்ச்சத்து 'ஏ' யாக மாற்றி விடும். 'கெரோடின்', 'Provitamin – A' என்று அழைக்கப்படுகிறது.

# பெரியப்பா பதில்கள்





**கே: தொடர்ந்து துன்பத்தைச் சந்திக்கின்றவர்கள் எப்படி அதைத் தாங்கிக்கொள்கிறார்கள்?**

*- மதுசா, அடம்பன்.*

ப: இது மிகவும் சுலபமானது. முதலாவது துன்பத்தை அனுபவிக்கும்போது, இரண்டாவது துன்பம் வந்துவிடுகிறது. இந்த இரண்டாவது துன்பத்தில் முதலாவது துன்பத்தை மறந்துவிடுகிறார்கள்.

**கே: திருமணத்தால் பெண்களின் சுதந்திரம் பறிபோகிறதா?**

*- தர்ஷினி, வவுனியா.*

ப: யார் சொன்னது? திருமணத்தால் பலபேர் முடியாட்சி செய்யும் அரசியாகிறார்கள். ஏதோ சிலபேர்தான் அதோ கதியாகிறார்கள்!

**கே: விலங்குகள் பிறந்தவுடன் நடக்கின்றன. மனிதனுக்கு மட்டும் ஏன் ஓர் ஆண்டு தேவைப்படுகின்றது?**

*- வதனா, வாழ்க்கைப்பெற்றான்கண்டல்.*

ப: விலங்கு வாழ்நாள் முழுவதும் தன் நியதிப்படி (அதாவது விலங்கின் இயல்பின்படி) நடக்கிறது. மனிதன் அப்படி நடப்பதே இல்லை. பிறந்த உடன் நடப்பது பெரிதல்ல. மனித நியதிப்படி (அதாவது மனித இயல்பின்படி) நடப்பதே பெரிது.

**கே: என் மனைவி கேட்கும் கேள்விகளுக்கு உங்களால் பதில் சொல்ல முடியுமா?**

*- சேரன், செட்டிகுளம்.*

ப: உங்களுக்குத்தான் அது கட்டாயம். எனக்கு என்ன கட்டாயம்?

**கே : வயதானவ'ர்களை வீட்டில் வைத்துப் பராமரிப்பது பெரிய பாடாக உள்ளதே!**

*- நிரோசன், மன்னார்*

ப : வயது ஆக, ஆக பலருக்கு உடல்தான் முதிர்ச்சியடைகிறதே தவிர, உள்ளம் முதிர்ச்சியடைவதில்லை.

ஞாபகமறதி, முன்கோபம், குழப்பம் போன்றவையெல்லாம் ஏற்படுகின்றன. அதனால்தான் வயதானவர்கள் நிதானமாக இருக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

தாத்தா ஒருவர் தன்னந்தனியாக காரை எடுத்துக்கொண்டு நூறு கிலோ மீற்றருக்கு அப்பால் இருக்கும் ஒரு நண்பரைப் பார்க்கக் கிளம்பினார். "இந்த வயதில் மெயின் றோட்டில் காரை ஓட்ட வேண்டாம்." என்று அவர் மனைவி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். தாத்தா தன் மனைவியின் பேச்சைக் கேட்கிற ஆள் இல்லை. மின்னல் வேகத்தில் காரை எடுத்துக்கொண்டு கிளம்பிப் போய்விட்டார்.

சரியாக இருபது நிமிடம்கூட இருக்காது ….. தாத்தாவை அவர் மனைவி செல்போனில் கூப்பிட்டு, "கவனமாகக் காரை ஓட்டிப் போங்கள். நீங்கள் போகும் மெயின் றோட்டில யாரோ ஒரு பைத்தியக்காரன் 200 கிலோ மீற்றர் வேகத்தில் ரோங் சைட்டில (பிழையான பக்கமாக) காரை பயங்கரமாக ஓட்டிக்கொண்டு வருகிறானாம். ரீ. வி.யில் இப்போதுதான் சொன்னார்கள்" என்று எச்சரித்தார்.

அதைக் கேட்ட தாத்தாவுக்கு சிரிப்பு. 'விசயம் தெரியாத ஆளா இருக்கியே! ஒருத்தன் இல்லை. …… இது வரைக்கும் இருநூறு – முந்நூறு பேர் ரோங் சைட்டில்தான் காரை ஓட்டிக்கொண்டு போகிறார்கள்." என்றாராம்.



**கே:அதிகம் படித்தவர்களோடு பழகும் வாய்ப்பு அடியோடு இல்லாமல் போகிறதே ஏன்?**

*- கீதன், மன்னார்.*

ப: நட்பைப் பற்றி நீங்கள் குறைவாகப் படித்திருக்கிறீர்கள் என்பது தெரிகிறது.

**கே: சகிப்புத் தன்மை என்றால் என்ன?**

*திலீபா, மட்டக்களப்பு*

ப: யாராவது அறுபதாம் கல்யாணம் செய்துகொண்டவர்களைக் கேளுங்கள். என்னைவிட அவர்கள்தான் இதில் அத்துப்படி.

**கே: ஒரு 'கடி' கடியுங்கள் பெரியப்பா?**

*கென்றி, சிறுத்தோப்பு, பேசாலை.*

ப: உங்களுக்கில்லாத கடியா..? வின்சன்ட் சேர்ச்சிலை உங்களுக்கு தெரியுமா? 2ம் உலகப்போரின்போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர். யுத்தக்கலையில் பெரிய விற்பன்னர். இலக்கியத்திலும் கூட நோபல் பரிசு பெற்றவர். ஓவியம் கவிதை என எல்லாத் துறையிலும் முத்திரை பதித்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக இவரை அடையாளப்படுத்துவது இவரின் கடிப்பேச்சுத்தான். ஒருமுறை சேர்ச்சிலை வெறுக்கும் பெண் எம். பி. ஒருவர், "நீங்கள் மட்டும் எனக்குக் கணவராக வாய்த்திருந்தால் உங்களுக்கு நான் தேனீரில் விஷத்தை கலந்திருப்பேன்" என்று சொல்ல, சேச்சில் சொன்ன பதில், "நீங்கள் மட்டும் எனக்கு மனைவியாக வாய்த்திருந்தால் நான் அதை சந்தோசமாக குடித்திருப்பேன்.."


**கே: நான் நாட்டுக்கு ஏதாவது நல்லது செய்ய ஆசைப்படுகிறேன். அட்வைஸ் ப்ளீஸ்?**

*ஜோசப் யூட், எமில் நகர், மன்னார்.*

ப: நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. பல விடயங்களைச் செய்யாமலிருந்தாலே போதும். நாடு தப்பித்துக்கொள்ளும்.

## நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 28 - 10 - 1936

உதிர்வு 17 - 05 - 2005

**திருமதி. அந்தோனி திரேசம்மா**


**(மன்னார்)**

இறைமகன் இயேசுவுடன் உறவைக் கட்டி எழுப்பிட இறுதிவரை உலக வாழ்வு பந்தயத்தை களைக்காது முடித்தீர். உறவுகள் கொண்ட குடும்பச் சக்கரத்தில் அச்சாணியாகி உறவினருக்காக அயராது உழைத்தீர். மாயை உலகில் மாதாவின் பாதத்தைப் பற்றிப்பிடித்து தூய மகன் இயேசுவின் சீடத்தியாக திருச்சபைத் தாயின் திருவருட்சாதன அருள்வாழ்வு ஆறினைப் பெற்றீர். இறப்பு வழியாக மறுவாழ்வை வழங்கிய யேசுவே! உமது இறப்பு, உயிர்ப்பின் மகிமையில், உம் அடியார் அந்தோனி திரேசம்மாவுக்கு வான் வீட்டில் இடமளித்தருளப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்,

**கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.**

### 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 10 - 06 - 1924

உதிர்வு 18 - 05 - 2005

**எலியாஸ் செபஸ்ரியான் பீரிஸ்**

**(சமாதான நீதவான் - பேசாலை)**

குடும்பத்தின் சிகரமாய் கல்விமானாக வாழ்ந்த எங்கள் அன்புத் தந்தையே! ஆண்டு ஒன்று முடிந்ததப்பா! ஆறவில்லையே எமது துயரம்? பலதரம் கனவில் தோன்றினாலும் உங்கள் அன்பு, சாந்த முகம் இனி எப்போ காண்போம்? அப்பா கண்ணுள் மணிபோல் எம்மை வாழவைத்த குடும்ப ஒளிவிளக்கே! காலம் எல்லாம் எம்முடன் இருப்பீர்கள் என்று எண்ணியிருந்தோம். ஆனால் எங்களை விட்டு நீடிய நெடும்பயணம் சென்றுவிட்டீர்களே அப்பா! இருப்பினும் உங்கள் ஆன்மா சாந்திபெற பிராத்திக்கின்றோம்.

***இவரின் பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.***

### 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 07 - 05 - 1930

உதிர்வு 08 - 05 - 2005

**செபமாலை அந்தோனியா**

**(கன்னாட்டி - அடம்பன்)**

கருவிலே தரிக்கும் முன்னே பெயர் சொல்லி அழைத்த தேவன், காலமெல்லாம் உடன் இருந்து கரம் பிடித்து வழிநடத்த, இடர்கள் பல தாங்கி ~ உன் கண்மணிகள் நலங்காண கருத்தாய் நீ பாடுபட்டாய். நினைவிழந்து போகையிலும் ~ ஒவ்வொன்றாய் நினைத்து நினைத்து மன்றாடினாய். அம்மா நீ பிரிந்து ஓராண்டு! நினைக்கவே நெஞ்சம் பதறுதம்மா! எழுந்தேற்ற நாளில் உன்னை அழைத்திட்ட கர்த்தரிடம் உன்னான்மா நித்தியத்தில் இளைப்பாற இறையரசின் உரிமைதனை இன்பமாய் நீ பெற்றிட இடைவிடாது கண்ணீருடன் இறைஞ்சுகின்றோம்.

***பிரிவால் துயருறும் - பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.***

### 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 18 - 10 - 1928

உதிர்வு 20 - 05 - 2005


**திருமதி. சிந்தாத்திரை வில்லியம்**

**(பறப்பாங்கண்டல்)**

அழுதழுது ஆண்டுகள் ஒன்றாகிப் போயிற்றே, ஆறாத துயர் என்றுதான் நீங்குமோ? தந்தையை இழந்தபோதும், தக்க துணையாய் நானுள்ளேன் என்று நலன் குறையா எம்மைக் கனிவுடன் காத்த அம்மா! உன்னத நிலையில் நாம் உயர ஏறிட ஏணியாய் இருந்த எம் அம்மா! உங்கள் கடன் முடிந்ததென்றா எம்மைக் கலங்கவிட்டு கடவுள் பதம் சென்றீர்கள்?. கர்த்தர் பதம் அமர்ந்தபோதும் அங்கும் எமக்காக வேண்டுவீர்கள் அம்மா.

எம் உயிர் உள்ளவரை எம் நெஞ்சம் மறவாது உங்கள் நினைவுகளை. ***நீங்காத நினைவுடன்: மகன்மார், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, உற்றார், உறவினர்கள்*** *- தகவல்: திருமதி. மனோரஞ்சிதம் கிறிஸ்ரோபிள்ளை. (மகள்) மன்னார்.*

### 9ம் ஆண்டு நினைவு



மலர்வு 19 - 10 - 1949

உதிர்வு 09 - 12 - 1997


**இயக்கீன் ஆரோக்கியநாதர்**

**(மண்டைதீவு)**

அன்பின் சிகரமாய், பாசத்திற்கு பண்பாளனாய் எம்மையெல்லாம் கலங்காது பேணிக்காத்தீர். ஆற்றுவதற்கு ஆயிரம் உறவுகள் இவ்வுலகில் இருந்தும் ஆற மறுக்கின்றன எம் நெஞ்சங்கள். இனி அப்பா என யாரை அழைப்போம்? மீண்டும் ஒருமுறை உம்மைக் காண முடியாதோ எனக் கலங்கி வழிகின்றன எமது கண்கள். நாம் தந்தை அற்ற அநாதைகளாக தவித்து நிற்கின்றோம் அப்பா. இனி யாரை வேண்டி நிற்பது? எம்மை வெறுமையாக்கிவிட்டு நீர் விண்ணுலகம் சென்று விட்டீர். இவரின் ஆன்ம சாந்திக்காக 10.05.2006 புதன்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு மடு அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும் : **அன்பு மனைவி, பாசக் குழந்தைகள், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

### 8ம் ஆண்டு நினைவு



மலர்வு 27 - 12 - 1980

உதிர்வு 10 - 05 - 1998

**செல்வி.ஆரோக்கியநாதர் யூட்னா**

**(மண்டைதீவு)**

அறிவுக்கு அச்சாணியாய், அழகிற்கு அடித்தளமாய், கல்விதனிலே உயர்ந்து எம்மையெல்லாம் பெருமைப் படுத்துவீர் எனக் கனவு கண்டோம். ஆனால் அவை எல்லாவற்றையும் கானல் நீராக்கிவிட்டு, காலமெல்லாம் எம்மைத் தவிக்க விட்டு வீறுநடை போட்டீர் வீர காவியமாகிட.

நாட்டிற்கு வேண்டியவளே, தனக்கு உனை வேண்டுமென்று தத்துவம் எடுத்துவிட்ட ஆண்டவர் எம்மை நட்டாற்றில் விட்டுவிட்டார். நாம் அப்பாவை இழந்து செய்வதறியாது கதிகலங்கி தவித்து நிற்க நீரும் எம்மைவிட்டு அப்பாவுடன் சென்றீரே.

இவரின் ஆன்மசாந்திக்காக, 10.05.2006 புதன் கிழமை அன்று காலை 6.30 மணிக்கு மடு அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

***பிரிவால் துயருறும் ~ அம்மா, சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.***

### 3ம் மாத நினைவு



மலர்வு 12 - 04 - 1953

உதிர்வு 10 - 02 - 2006

**லோறன்ஸ் அலெக்ஸ்சான்டர்**

**(மண்டைதீவு-பிரபல தொழிலதிபர்)**

விழுதுவிட்ட ஆலமரம் வேரோடு சாய்ந்ததுவோ மாமலை ஒன்று மண்மீது சரிந்ததோ? அருமை மனைவி தவித்து மயங்க, அன்பு மக்கள் திகைத்து விழிக்க, பாசச் சகோதரர்கள் கதி கலங்க, மண்ணில் இருந்து நீர் மறைந்ததேனோ? விண்ணுலகம் தேடி விரைவில் நீர் சென்றதேனோ. மாறாத துயர் கொள்ள வைத்ததேனோ? எம்மை மண்மீது தவிக்க வைத்துச் சென்றதேனோ? உனை நாடி வந்தோர்க்கு முகங்கோணாது உதவி புரியும் வள்ளல் ஐயா நீர்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 10.05.2006 புதன்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு மடு அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**இவரின் பிரிவால் துயருறும் - அன்பு மனைவி, அருமைப்பிள்ளைகள், பாசச் சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

தகவல்: ஆரோக்கிய நாதர் யூட்ஸன், இத்தாலி.

### 15ம் ஆண்டு நினைவு



மலர்வு 14 - 12 - 1928

உதிர்வு 27 - 05 - 1991

**செ. சீமான் சேவியர் மொத்தம்**

**(நறுவிலிக்குளம், வங்காலை)**

பாசத்தின் இருப்பிடமாய், நேசத்திற்கு இலக்கணமாய் துலங்கியவரே, ஆண்டுகள் பதினைந்து மறைந்தாலும், உம் அன்பு முகம் எம்மைவிட்டு நீங்காதையா! நீங்கள் எம்மோடு வாழ்ந்த நாட்களை இன்று நினைக்கும்போது எம் உள்ளம் மகிழுதையா. நீங்கள் இல்லா எம் வாழ்வு கலங்கரையற்ற கப்பலானதே. காலமெல்லாம் உம்மை நினைத்து கலங்குகின்றோம் ஐயா! இறைவனின் சந்நிதியில் உங்கள் ஆன்மா இன்புற்றிருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

***உங்கள் பிரிவால் துயருறும் : மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன், உற்றார், உறவினர்கள்.***

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 49

## 1 சாமுவேல் - 1 - 10

உங்கள் விடைகளை 10. 06 2006க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | | | | | 04 | |
| | * | 05 | | | | | 06 | * | | |
| | | | | | 07 | | | 08 | | |
| 09 | | | | | | 10 | | | | |
| * | 11 | | | | | * | | | | |
| 12 | | | | | | 13 | | 14 | * | |
| | | | 15 | | | | | | 16 | |
| | | 17 | 18 | | | | | | | 19 |
| | | | | 20 | | | 21 | | | |
| | 22 | | | | 23 | | | | 24 | * |

### இடமிருந்து வலம்

1. அவர்கள் அதை எடுத்து அதன் ...................... மீண்டும் நிறுத்தினார்கள்.
3. இஸ்ரயேல் வீட்டார் அனைவரும் ஆண்டவரை ....................ப் புலம்பிக்கொண்டிருந்தனர்.
5. அவருக்குச் சவுல் என்ற ஓர் ..................யும் அழகும் கொண்ட மகன் இருந்தார்.
9. அது நம்மிடையே ........................ நம் எதிரிகள் கையினின்று நம்மைக் காக்கும்.
11. என் ........................ இஸ்ரயேலின் தலைவனாக அவனை நீ திருப்பொழிவு செய்.
12. அவர்களை ஆளப்போகும் அரசனின் ......................... த் தெரியப்படுத்து.
15. மக்கள் ........................... நின்றபோது அவர் அனைவரிலும் உயரமாக இருந்தார்.
18. இதன்பின் அவர் ...................... வாடியிருக்கவில்லை.
21. தம்மில் பற்றுக்கொண்டோர் ................ களை அவர் காப்பார்.
22. சாமுவேல் மக்களை மிஸ்பாவில் ஆண்டவர் ...................... அழைத்தார்.

### மேலிருந்து கீழ்

1. ஆகவேதான் தாகோனின் அர்ச்சகர்களும் தாகோனின் கோயிலுக்குள் செல்லும் அனைவரும் அஸ்தோத்திலிருக்கும் தாகோனின் வாயிற்படியை ........................ வரை மிதிப்பதில்லை.
2. இரு கறவைப் பசுக்களைக் கொண்டுவந்து ................ பூட்டினர்.
4. அவர்கள் ........................ ச் செவி கொடுத்து அவர்கள் மீது ஓர் அரசனை ஆளச்செய்.
6. ........................... ன் நாட்டைக் கடந்து சென்றார்.
12. அவர்கள் உன் நலன்கேட்டு ...................... இரண்டு அப்பங்களைத்தர அவர்கள் கைகளினின்று நீயும் பெற்றுக் கொள்வாய்.
13. அங்கே ஆண்டவருக்கு ஒரு ......................... எழுப்பினார்.
19. நிறைவுடன் வாழ்ந்தோர் ........................... உணவு பெறுகினறனர் (3ம்,4ம் எழுத்துக்கள் 1ம் எழுத்துக்கு மேலே உள்ளன)

### வலமிருந்து இடம்

2. அதை அங்கு எடுத்துச் சென்றபின் ஆண்டவரின் கை அந்நகரை ......................... த் தாக்கி மாபெரும் அழிவை ஏற்படுத்தியது.
4. மக்கள் .................... யும் அவர்கள் உன்னிடம் கூறுவது அனைத்தையும் கேள்.
7. உம் புதல்வர்கள் உம் ...................... களில் நடப்பதில்லை.
8. அவற்றின் .................... களைத் தொழுவத்தில் அடைத்து வைத்தனர்.
10. பெலிஸ்தியர் இஸ்ரயேலரை முறியடித்து அவர்களுள் நாலாயிரம் பேரைப் போர்க்களத்தில் ........................ வீழ்த்தினர்.
14. சாமுவேல் இவ்வாறு ........................செலுத்திக் கொண்டிருந்தபோது பெலிஸ்தியர் இஸ்ரயேலருடன் போரிட நெருங்கினர்.
16. பிறகு அவர்கள் ........................ மேட்டிலிருந்து இறங்கி நகருக்கு வந்தனர்.
19. தயை ............................ எனக்கு ஓர் அப்பம் கிடைக்குமாறு குருத்துவ ஊழியத்தில் என்னைச் சேர்த்தருளும்.
20. அவனது தலைமேல் ...............................க் கத்தியே படாது.
24. அவர் ஆண்டவரின் ................................ வந்தபோதெல்லாம் அவள் அவரைத் துன்புறுத்துவாள்.

### கீழிருந்து மேல்

7. இப்போது நீங்கள் ஒரு புதிய ........................ ச் செய்யுங்கள்.
10. நீங்கள் இஸ்ரயேலரின் கடவுளது பேழையை அனுப்பினால் அதை ...................... அனுப்பலாகாது.
11. உங்கள் ......................... களில் பத்தில் ஒரு பங்கு எடுத்துக்கொள்வான்.
14. அப்போது பெலிஸ்தியர் தலைவர்கள் இஸ்ரயேலுக்கு ......................... ப் புறப்பட்டார்கள்.
17. பிறகு ஆண்டவரின் ஆவி உன்மேல் .........................யோடு வரும்.
19. அவர்களின் ............................ என்னிடம் வந்துள்ளது.
22. நான் அழைக்கவில்லை ............................... ச் சென்று படுத்துக்கொள்.
23. அன்னா ............................ கசந்து அழுது புலம்பி ஆண்டவரிடம் மன்றாடினார்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.48ற்கான முடிவுகளை, 2006ம் ஆண்டு ஜுன் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## உங்கள் கவனத்திற்கு!

இறந்துபோன உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகள், யூபிலி மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றை மன்னாவில் பிரசுரிக்கவேண்டுமாயின் அந்நினைவுகள் எந்த மாதத்தில் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் விபரங்களை எமக்கு அனுப்பி வையுங்கள். இத்திகதிக்கு பின்னர் வரும் எந்த விடயங்களும் அக்குறிப்பிட்ட மாதத்தில் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதைத் தெளிவாக அறியத்தருகின்றோம். இவற்றிற்கான கட்டணமாக ரூபா 1500 அறவிடப்படும். - பதிப்பாசிரியர் -

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 47ல்

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
பெ. மேரி நிஷாந்தினி,
திருக்குடும்பக் கன்னியர் மடம், மிருசுவில்.

*இரண்டாம் பரிசு*
பி.யாக்லின் பறுனாந்து,
தரம் -11, 8ம் வட்டாரம்,
பேசாலை.

*மூன்றாம் பரிசு*
ஆ. றதனா,
இல. A.07,
மடுக்கோவில், மடு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 161 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 153 பேர்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி
இல.47ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

### பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. யே. பிரசாந்தன், சென். மேரிஸ் வீதி, அடம்பன்.
2. ம. டிலஸ்மேரி, குமானாயங்குளம், ஆண்டாங்குளம்.
3. ம. தட்சாயினி, வீ. இல. ட64, O.R.S. முகாம், தட்சனாமருதமடு.
4. அ. லயானி, அடம்பொன்தாழ்வு, வட்டக்கண்டல், மன்னார்.
5. தி. கலைவாணி, முருங்கன்பிட்டி, முருங்கன்.
6. அ. மேரி அன்ரனியா (தர்சினி), முத்தரிப்புத்துறை.
7. பீ. அன்ரனி சாள்ஸ், 25/1, ராணி மில் வீதி, இறம்பைக்குளம். வவு.
8. சுப்ரமணியம் துசாந்தினி, திருக்குடும்பக் கன்னியர்மடம், மிருசுவில்.
9. பா. பிலோமினா (குணம்), கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.
10. ம. தர்மிகா, இல.109, பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
11. சூ. பிறைற்ரன், கச்சேரி றோட், வவுனியா.
12. ஜெ.எஸ். சுகன்யா, மாதா கோவில் வீதி, தலைமன்னார்.
13. செ. வளன் நியூமன் துரம், மாட்டினார் குருமடம், யாழ்ப்பாணம்.
14. ச. றாகவன், அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை.
15. நவரட்ணராஜா மரின் நிலானி, சென் ஜோசப்வீதி, கொழும்புத்துறை.
16. ஜெனனி மார்க்கோனி, திருக்குடும்ப கன்னியர் மடம், மிருசுவில்.
17. எஸ். யூலின் சியாணி, 9ம் ஆண்டு, புனித ச.பெண். பாடசாலை.
18. லீ. டெய்சி, புனித செபஸ்ரியார் கோவில் வீதி, பெற்றா, மன்னார்.
19. றொ. ஜெனிபா, ஜெரோஜினி, அளவக்கை, முருங்கன்.
20. செ. ஜெயந்தினி, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம், மன்னார்.
21. நீ. சாந்தி, பரிகாரிகண்டல், முருங்கன்.
22. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்.
23. ஏ. சந்தியோகு ஜஸ்மின் கசில், A. 64 மடுக்கரை, நானாட்டான்.
24. செ. இருதய நாதன், தரம் - 8, அந்தோனியார் புரம்.
25. திருமதி. எட்வின் மிரியம், சுவிஸ்.
26. ஜெ. எட்வின் சுரேஸ், சுவிஸ்.
27. திருமதி. அன்ரன் ஜெயந்தினி, சுவிஸர்லாண்ட்.
28. யே. ரெமிசியன் ஜெறி, சிறிய குருமடம், சாவற்கட்டு, மன்னார்.
29. யே. டிமோ றெனி, ஸ்ரீ முருகன் ஆலயவீதி, கீரி, மன்னார்.
30. அ. அன்ரனிக்கா றதி, தரம் - 8, மன். கருங்கண்டல் ம.வி.
31. ஆ. லக்ஸனா, A- 07 மடுக்கோவில், மடு.
32. யு. அன்ரோ சுபாஜினி (ஜெசி), வாழ்க்கைப்பெற்றான்கண்டல்.
33. பே. நிலாந்தினி பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
34. எஸ். டொறின் மெற்ரலின், வாழ்க்கைப்பெற்றான்கண்டல், முரு.
35. F. S. ஆன் பியூமிக்கா பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
36. கந்தசாமி யூட்கரன், இல. 89, பெரிய பண்டிவிரிச்சான், மடு.
37. ம. அதிஸ்ரலா, இல. 109, பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
38. ஜெ.ஏ. பிறிற்றோ, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
39. செ. ஜெனிஸ்ரா, தி.க.மடம், நானாட்டான், மன்னார்.
40. ச. ஜோண்சன், ஆண்டு - 11, பள்ளிமுனை.
41. ச. வின்சன் குரூஸ், பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.
42. அ. கத்தறினாள், பெரிய முறிப்பு, முருங்கன்.
43. ஜே. கிறைஸ் மரிய இனோசன், பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
44. எவ். ஏ. கிறிஸ்ரி றோச், ஆரம்ப நீதி மன்றம், மன்னார்.
45. வி. லதா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
46. செல்வி. ஜே. இனோக்கா, பெரியகுளம். பறப்பாங்கண்டல்.
47. பறுனாந்து நிலைக்சினி, இத்திக்கண்டல், அடம்பன்.
48. திருமதி, சகாய நாதன் குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
49. அ. அன்ரனி நியூட்டன், ஓலைத்தொடுவாய், கரிசல், பேசாலை.
50. திரு. ஜோ. ம. சசிநாத், 09/32, பூங்கா வீதி, வவுனியா.

## பொன்விழா வாழ்த்து



**திரு. திருமதி. இப்பொலிற் குரூஸ், சறபின் பெனாண்டோ தம்பதியர் (பேசாலை)**

இருமனம் கலந்து இறும்பூ தெய்தும் திருமண வாழ்வின்
பெரு மகிழ்வதை நல்கும் ஐம்பதின் பொன்விழாவில்
ஒரு மனமாய் ஒன்றித்திருக்கும் ஓர் வரம் தந்த
திருவுளம் கொண்டு அருள்பாலித்த இணையிலா

ஈசன் திருப்பாதந்தன்னில் இனிதுவக்கும் நன்றிதனை
பேசுகின்றோம். பெருமனதாய் இந்நாளில்
நாசமணுகாது நாளும் காத்து நன்மைதனையருளும்
ஏசு எம் தந்தை ஆவிக்கும் என்றென்றும் மகிமை.

*வாழ்த்தும் நன்றியும் நவிலும்,*
*அன்புப்பிள்ளைகள், சகோதரர், மருமக்கள்,*
*பேரன், பேர்த்தி மற்றும் அன்பின்*
*இனசனங்கள்.*

## வெள்ளிவிழா வாழ்த்து



**திரு.திருமதி. துரைசிங்கம் இமல்டா மரீனா தம்பதியர். (பத்தாவத்தை இளவாலை)**

**கத்தோலிக்க திருமறையின் அடிச்சுவட்டில் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

அருள்நிறை மரியின் அருள் ஆசீர் பல வேண்டுகிறோம். தம் உயிர் பாதுகாவலர்கள் புனித பேதுருவும், புனித பிலிப்புவும் அருகிருந்து வழிநடத்துவார்களாக!
தங்கள் மூவிரண்டு பிள்ளைகள் றஜிதா, விஜிதா, சுஜிதா, கஜிதா, அஜந்தன், அஜிதா ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்வார்களாக!
அன்போடு ஈசன் பாதம் பணிந்து நிறைவாக இறை ஆசீர் பெற்று வாழ நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: சிறிய பிள்ளைகள்/ சுவைக்கீன், ஜெனுவி, சுமதி, றாஜன், கிறிஸ்ரி, ஜஸ்ரின், மருமக்கள்/ தேவதாஸ், மரிய திரேஸ், ஜோகான், குமுதா, ஜெனோ.

**தகவல்: எஸ். ராஜன், 4ம் வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.**

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் ச. இரேனியஸ் பெனாண்டோ**

**16.05.2006**




மன்னார் முத்தரிப்புத்துறையில் வசிக்கும் திரு. திருமதி. சசிகரன் கமலி தம்பதிகளின் செல்வப் புதல்வன் இரேனியஸ் தனது முதலாவது பிறந்த நாளை 16.05.2006 அன்று தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அம்மா, அப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, பெரியப்பாமார், பூட்டியம்மா, மாமாமார், அத்தைமார், அண்ணாமார்கள், அக்காமார்கள், அத்தான்மார்கள், மச்சாள்மார்கள், சித்திமார்கள், சித்தப்பா மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் செல்வன் இரேனியசை குழந்தை இயேசுவின் அருள் பெற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

மன்னா

## பிலிப்பைன்ஸ் நாட்டில் பெரிய வெள்ளியில் நடைபெறும் கொடூரமான காட்சி

# இன்றும் உயிரோடு சிலுவையில் அறையப்படும் நிகழ்வு





பிலிப்பைன்ஸ் நாட்டின் சில இடங்களில் இன்றும் பெரிய வெள்ளிக்கிழமை அன்று மனிதர்களை உயிரோடு சிலுவையில் அறையும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. இந்த நிகழ்வுகள் உள்ளூர் மற்றும் வெளியூர் தொடர்புசாதனங்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்து வருகின்றது. பிலிப்பைன்ஸ் நாட்டு கத்தோலிக்க மக்களின் பாரம்பரியங்களை அடிப்படையாகக்கொண்ட இந்த நடைமுறை திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டதல்ல. ஆனாலும் இது தொடர்கின்றது. எதற்காக இப்படி பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் தங்களை சிலுவையில் அறைந்துகொள்கிறார்கள்? இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆண்டவர் செய்த நன்மைத்தனங்களுக்கான நன்றியாக, சில வேண்டுதல்களை பெற்றுக்கொள்வதற்காக, தம்மைத் தூய்மைப்படுத்திக்கொள்வதற்காக, ஆன்மீக சக்தியைப் பெற்றுக்கொள்வதற்காக என அக்காரணங்கள் தொடர்கின்றன.

சரி, எப்படி இவர்கள் சிலுவையில் அறையப்படுகின்றார்கள்? 5 இஞ்சி நீளமுடைய கூரான ஆணிகளால் இவர்களுடைய கைகள் சிலுவையோடு வைத்து அறையப்படுகின்றன. 5 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை இவர்கள் சிலுவையில் அறையப்பட்ட நிலையில் இருப்பார்கள். அதிக இரத்தம் வெளியேறும் ஆபத்து நிகழுமானால் அதைத் தடுக்க முதலுதவிக் குழுக்கள் ஆயத்த நிலையில் இருக்கும்.

### இந்தியாவில் முதல் முறையாக மும்பை உயர் மறைமாவட்டத்தில்

## திருமணமான தியாக்கோன்மார்கள்!

இந்தியத் திருச்சபையில் மும்பை உயர் மறைமாவட்டம், இரண்டு திருமணமானவர்களை நிலையான தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தி வரலாறு கண்டுள்ளது. இது கடந்த ஜனவரி 22 ஆம் 'திகதி, நடைபெற்றது. கருதினால் இவான் டயசும், உடன் துணை ஆயர்களும் 73 வயது ரொய்டு டயஸ் என்பவரையும், 58 வயது எட்வின் டிசூசா என்பவரையும் தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தியுள்ளனர்.

## இங்கிலாந்து அங்கிலிக்கன் சபையில்

## மேலும் பிளவு உருவாகும் வாய்ப்பு

இங்கிலாந்திலுள்ள அங்கிலிக்கன் சபையில் பெண் ஆயர்களை நியமனம் செய்ய விவாதம் நடைபெறுகின்றது. இச்சபையின் பேராயர் ரோவன் வில்லியம்ஸ் இவ்விவாதத்தை, இங்கிலாந்து தேசிய கூட்டத்தில் தொடக்கி வைத்தார். இவ்விவாதம் மற்ற அங்கிலிக்கன் பிரிவுகளுக்கும் எடுத்துச் செல்லப்படும். 2012ஆம் ஆண்டில் நடைபெற உள்ள பொது அமர்வில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப் - படுமாம்.

எந்தச் சபையானாலும் முற்போக்கு மற்றும் - பிற்போக்குச் சிந்தனையாளர்கள் உண்டுதானே?

ஏற்கனவே 1992 ஆம் ஆண்டு பெண் குருக்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட - போது, அதை எதிர்த்து, அங்கிலிக்கன் சபைக் குருக்கள் மற்றும் மக்கள் கத்தோலிக்க சபையில் இணைந்தனர்.

அதேநிலை தற்போது உருவாகியுள்ள பெண் ஆயர்கள் விவாதத்தால், மீண்டும் உருவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது பெண் ஆயர்கள் விவாதம் தொடங்கியுள்ள நிலையில், இது நடைமுறைக்கு வந்தால், நாங்கள் சபையைவிட்டு கத்தோலிக்கர்களாக மாறுவோம் என்று பெரும்பகுதி மக்கள் எச்சரித்துள்ளனர்.

## கிறிஸ்தவராக மாறிய

## அப்துல் ரகுமானை காப்பாற்றுங்கள்!

### திருத்தந்தை அழைப்பு

அமெரிக்கா, ஆஸ்திரேலியத் தலைவர்களைத் தொடர்ந்து திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற்றும், ஆப்கானிஸ்தான் பிரதமர் கமித் கார்சிக்கு கிறிஸ்தவராக மனம்மாறிய அப்துல் ரகுமானின் உயிரைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். கருதினால் ஆஞ்சலோ சொடானோ திருத்தந்தையின் சார்பாக எழுதியுள்ள கடிதத்தில், மனித நேயத்தின் அடிப்படையிலும், மனித உயிரின் உயர்வு, மதிப்புக் கருதியும், தனிமனித மதச்சுதந்திரம், மதச்சுதந்திரம் பேணும் எண்ணத்தின் அடிப்படையிலும் அப்துல் ரகுமானைக் கொலைத் தண்டனையிலிருந்து காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் நீதிமன்றமும் - அவரை விடுதலை செய்ய முடிவுசெய்துள்ளது. ஆனால், முஸ்லீம் தீவிரவாதிகள் இந்த விடுதலையை வன்மையாகக் கண்டித்து எச்சரித்துள்ளனர். திருத்தந்தையின் கடிதத்தில் அப்துல் ரகுமானுக்கு எதிரான குற்றச்சாட்டைக் கைவிடுவதன் வழியாக, நாடுகளிடையேயும், மதங்களின் மத்தியிலும் நல்லுறவு ஏற்பட உதவுங்கள் என்று கூறியிருந்தார். அப்துல் ரகுமான் 15 ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தானில் கிறிஸ்தவராக மதம் மாறியுள்ளார்.

## பசறையில்

### தவக்கால விசேட திருவிழிப்பு

பசறை புனித யூதா ததேயு ஆலயத்தில் கடந்த 24.03.2006 அன்று கொழும்பு மறைமாவட்டத்தை சேர்ந்த கடல்கெல்ல நீர்கொழும்பு உயிர்த்த ஆண்டவர் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு கயம் நோனிஸ் அடிகளார் திருவிழிப்பு ஆராதனையை நடத்தியதுடன் . ஆண்டவரின் திருப்பாடுகளைத் திரைப்படமாக மக்களுக்கு காண்பித்து, தவக்காலத்தைப்பற்றி மிகவும் தெளிவாக விளக்கம் கொடுத்தார்.

இறுதியில் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பற்றியும் கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை எவ்வாறு பேணி வளர்க்க வேண்டும் என்ற கருத்தை மையமாக வைத்தும், பங்குத்தந்தை ஜெகத் அடிகளாருடன் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்து இறையாசீர் வழங்கினார். இவ்விசேட திருவிழிப்பு திருப்பலியை ஒழுங்கு செய்தவர் பங்குத் தந்தை ஜெகத் அடிகளார் ஆவார்.

*தகவல் : கே. அன்ரனி, பசறை.*

## கோவாவில்

### கத்தோலிக்க குரு கொலை!

கோவா உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருவானவர் மார்ச் 15 ஆம் திகதி, அவரது அறையில் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளார்.

61 வயதாகும் தெற்கு கோவா மக்கசோனா புனித சவேரியார் பங்கின் பங்குத்தந்தை யுசேபியோ பெரேயோ என்பவரே இக்குருவானவர் ஆவார்.

இவர் கடந்த மார்ச் 18ஆம் திகதி, காலை பங்கு மக்கள் திருப்பலிக்கு வந்தபோது, அதிர்ச்சியடையும் விதமாக கொலை செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. இவரது பணியாளர் கட்டப்பட்ட நிலையில் அறைக்குள் பூட்டப்பட்டிருந்தார்.

இந்தக் கொலை குறித்து, பேராயர் பிலிப்நேரி பெரேயோ மற்றும், முன்னாள் ஆயர் ரால் கொன்சால்வஸ் ஆகியோர் ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளனர்.

### செபமாலைத் தாசர் சபையின் ஆன்மீக வழிகாட்டி

## செலஸ்ரின் அடிகளார் இறைபதம்



செபமாலைத் தாசர் துறவற சபையைச் சேர்ந்த செலஸ்ரீன் மேரி ஜோசப் அடிகளார் கடந்த 29.03.2006 அன்று இறைபதமடைந்தார்.

ஆன்மீக வாழ்க்கை முறைகள் அருகி வரும் இக்காலத்தில், தமது அழைப்பின் மேன்மையை முழுமையாக உணர்ந்து தேர்ந்தெடுத்த தனது வாழ்வில் ஒரு முழுமையான ஒரு புனித வாழ்வை வாழ்ந்தார் மறைந்த அருட்தந்தை மேரி ஜோசப் அடிகள்.

இவர் 18.05.1930ல் பிறந்தார். தனது குருத்துவத்தை 15.06.1971ல் பெற்றார். தனது ஆரம்ப குருத்துவ வாழ்விலேயே தனிமையை அதிகம் நேசிப்பவராகவும், மிகவும் எளிமையான முறையில் தமது வாழ்வை வாழவும் முற்பட்டவர். அதிலும் ஆன்மீக வாழ்வின் அத்திவாரமாகிய தாழ்ச்சியை தனது வாழ்வாக்கி, செபம், தபம்தான் தனது வாழ்வு என்று வாழ்ந்தார்.

இவர் திருச்சபையில் துறவற சபைகளில் உள்ள மறைந்த வாழ்வை (Hermitical Life) அதிகம் வாழ விரும்பியவராக, 07.08.1986 இல் தோலகட்டியில், தனி வாச வாழ்வைத் தொடங்கினார். அன்று, முதல் இறக்கும்வரை தனது அர்ப்பண வாழ்வை புனிதத்திலும், ஆழ்ந்த இறை ஒன்றிப்பிலும் செலவழித்தார்.

இவர் பலருடைய ஆன்மீகத் தேடலுக்குப் பாலமாக, பாவசங்கீர்த்தனம் என்ற திருவருட்சாதனத்தை ஆயர்கள், குருக்கள், துறவிகள், கன்னியர்கள், பொதுநிலையினருக்கும் வழங்கும் ஞான தீபமாகத் திகழ்ந்தவர். இவரின் இறப்பு தலத் திருச்சபைக்கு ஒரு மாபெரும் இழப்பு. அத்துடன் செபமாலைத்தாசர் சபைக்கு ஒரு ஆன்மீக பேரிழப்பு! "நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே" (மத்.25:21) என்ற இறைவார்த்தையை வாழ்வாக்கி, ஆண்டவரின் இன்ப சந்நிதானத்தை அடையவும், அவரின் பரிந்துரையால் நாமும் எமது வாழ்வில், அவரின் ஆன்மீகப் பண்புகளைத்தேட அருள் வேண்டுவோம்.

*அருட்பணி. நிர்மலராஜ், றோசரி ஆச்சிரமம், மதவுவைத்த குளம், வவுனியா.*

## திருகோணமலை பாலையூற்றில்

## லூர்து அன்னையின் நூற்றாண்டு நிறைவு

திருகோணமலையில் மிகவும் பழமை வாய்ந்த முதலாவது யாத்திரைத் தலமாகிய பாலையூற்றில் லூர்து அன்னையின் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டு நூறு வருடங்கள் நிறைவுபெற்ற நன்நாளாகிய 19.02.2006 அன்று பங்கு மக்களுடன் லூர்து கெபியின் பலிப்பீடத்தில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அருட்பணியாளர்கள் L. பிலிப் அடிகளார், அல்பன் ராஜசிங்கம் அ.ம.தி, சில்வெஸ்டர் அ.ம.தி, பிறிட்லி றொசாயிரோ அ.ம.தி ஆகியோர் புடைசூழ ஜீவனதாஸ் பெர்ணாண்டோ அ.ம.தி அடிகளாரின் தலைமையில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இறைவார்த்தையின் ஆண்டான 2006ம் ஆண்டினை சிறப்பிக்கும் வகையில் பங்கின் எட்டு வட்டார மக்களினால் நவநாட்கள் சிறப்பிக்கப்பட்டன. நவநாள் வழிபாடுகளில் இறைவார்த்தையினை முக்கியத்துவப்படுத்தி திருவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

அன்னையின் திருக்காட்சித் திருவிழா (11.02.2006) அன்று மாலையில் பங்கின் பிரதான பாதையூடாக அலங்கரிக்கப்பட்ட லூர்து அன்னையின் திருச்சுரூபம் பவனியாக எடுத்துச்செல்லப்பட்டது. பாலையூற்று மாதாவின் 100ஆவது வருட ஜுபிலியின் மாபெரும் விழாவானது மே மாதம் 28ந் திகதி, வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.